Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ரூபா 30.00
செப்டெம்பர் 15 - 21, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 928

## இலங்கைக்கு படையெடுக்கும் போர்க் கப்பல்கள்






## சர்வதேச இயலாமையை அம்பலப்படுத்தியது விக்கிலீக்ஸ்



## ஆட்டுவிக்கும் விளையாட்டு



## பயங்கரவாதமும் பாரத தேசமும்

## இறைவன் ஒருவனே!

இறைவன் ஒருவன். அவன் ஆதியும் அந்தம் இல்லாதவன். அவன் ஒருவனே மெய்ப்பொருள். அவனுக்கு ஈடான பொருள் ஒன்றுமில்லை.

இறைவன் பசுபதி எனப் போற்றப்படுகின்றான். பசு என்றால் ஆன்மா. பதி என்றால் தலைவன். எனவே ஆன்மாக்கள் அனைத்திற்கும் தலைவன் இறைவன். அவனை சிவன் எனப் போற்றுவது சைவ மரபாகும். இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்றும் மூன்று திருமேனிகளை எடுத்து ஆன்மாக்களுக்கு அருள்புரிவார்.

இறைவன் ஒருவனே, அவனைப் பல்வேறு வடிவங்களில் வழிபடுகின்றோம். ஏனெனில் இறைவன் அவ்வடிவங்களில் எமக்கு அருள்பாலிக்கின்றான். பிரம்மா, விஷ்ணு, விநாயகர், முருகன், இலக்குமி, துர்க்கை, சரஸ்வதி போன்றவை அத்தகைய வடிவங்களே.

பல்வேறு மூர்த்திகளுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்ட போதிலும் அனைத்தையும் சிவபரம்பொருளாகவே காணும் சிவநெறி எம்மிடையே ஆழமாக வேரூன்றி இருக்கின்றது. இது சைவ மரபின் தனித்துவமாகும்.

**எஸ்.அபி, திருகோணமலை.**

## குழந்தையும் தெய்வமும்

ஒருமுறை இயேசு போதித்துக் கொண்டிருந்தபோது குழந்தைகள் சிலர் அவருடைய மடியில் சென்று அமர்வதும் அவருக்கு முன்னால் விளையாடுவதும் என உற்சாகமாய் இருந்தனர். இயேசுவின் சீடர்கள் அந்தக் குழந்தைகளை அதட்டினர். இயேசுவும் அதட்டினார். குழந்தைகளை அல்ல! குழந்தைகளை அதட்டிய சீடர்களை!!

நீங்களும் குழந்தைகளைப் போல மாறாவிடில் விண்ணரசில் நுழைய முடியாது, என்றார் இயேசு.

அதாவது குழந்தை மனம் மன்னிக்கும் மனம். வலிக்க வலிக்க ஒரு அடி கொடுத்தால் கூட சிறிது நேரத்தில் அனைத்தையும் மறந்துவிட்டு ஓடி வந்து கட்டிக் கொள்வது தான் குழந்தைகளின் மனம். அந்த மனம் நமக்கு இருக்கிறதா? இல்லை கடந்த வாரம், கடந்த மாதம், கடந்த ஆண்டு அல்லது நான்கு தலைமுறைக்கு முன்னால் நிகழ்ந்த ஏதோ ஒரு செயலினால் இன்னும் பகைமை பாராட்டுகிறோமா?

குழந்தை மனம் எப்போதும் தந்தையைத் தேடும். சிறுசிறு செயலைச் செய்யவும், உதவியைப் பெறவும், நடந்ததைச் சொல்லவும் எப்போதும் பெற்றோரைத் தேடும் குழந்தைகள். இயேசு நம்மை அவருடைய தந்தை என்கிறார். நம்மை குழந்தைகளாக ஏற்றுக் கொள்கிறார். பணத்தை பெரிதாய் மதித்து அன்பை உதாசீனப்படுத்தினால் நீங்கள் விண்ணரசுக்கு உரியவர்கள் அல்ல. குழந்தை மனம் பெருமையை விரும்பாது. சபையின் முன்னால் மாலைகள் பெற ஆசிக்காது. அடுத்தவனைக் குறித்து இகழ்வாய் பேசியேனும் தனது பெயரை பறை சாற்ற விரும்பாது.

இத்தகைய குணங்கள் உங்களிடம் இல்லையேல் நீங்கள் விண்ணரசுக்கு உரியவர்கள் அல்ல.

**ஜெ.அலெக்ஸ், ஆனைக்கோட்டை.**

ஆன்மீகம்

## மறுமை வாழ்வுக்காக...

மனித வாழ்வை மறுமை வாழ்வுக்காக வளப்படுத்த வந்த மார்க்கமே இஸ்லாம். இதனாலேயே இறைதூதர் அவர்கள் கூறினார்கள், இவ்வுலக மாந்தர்களிடம் நான் நற்பண்புகளை பூரணப்படுத்தவே அல்லாஹ்லால் அனுப்பப்பட்டேன் என்று.

அல்லாஹ்வை அவன் சிருஷ்டி பார்க்க விட்டாலும் அல்லாஹ் அவனை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற மனோநிலை மனிதர்களிடையே வர வேண்டும். இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ்வின் முன்னிலையில் அவன் சிருஷ்டியின் செயற்பாடுகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்படும்.

அப்போது அச்செயல்களில் அடியானால் அல்லாஹ்வுக்காக செய்யப்பட்டவை மாத்திரம் தனியாக பிரித்தெடுக்கப்படும். ஏனைய நோக்கங்களுக்காக செய்யப்படவை நரக நெருப்பில் எறியப்படும். எனவே தூய்மையுடன் நடந்து கொள்ளுங்கள். அப்போது அந்நாளில் சொற்ப நற்காரியங்கள் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். இதுவே மறுமை வாழ்வுக்காக மனிதன் செய்ய வேண்டியது.

**எம்.சீ.கலீல், கல்முனை-05.**

## வாசகர் சாலை

### சிறப்பு!

வாரம் தோறும் தினமுரசைப் படிக்க நான் தவறுவதில்லை. அதில் வரும் நியாயமான கருத்துக்களை மறுக்கவுமில்லை.

எல்லாப் பக்கங்களும் சிறப்பாய் உள்ளது. மர்ம மனிதர்கள் பொறுப்பு யார்? கட்டுரையில் கூறப்பட்டுள்ள நியாயபூர்வமான கருத்தை ஏற்றுத்தான் ஆகவேண்டும். நீ வீறுநடைபோட்டு வளர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

**எஸ்.சரவணா, மட்டக்களப்பு.**

### வலம் வரும் முரசே!


மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ள முரசு வாரமலரில் வலம்வரும் அம்சங்கள் அத்தனையும் சிந்தையைத் தொடுகின்றது.

அரசியல் செய்திகள், சினிமாச் செய்திகள், யுத்தகள நிலவர கட்டுரைகளாயினும் நடுநிலையாக நின்று உலகெங்கும் தவளவிடுகிறாய். "துரோத்தனம் தாண்டவமாடிய தருணம்" புலித் தளபதியின் வாக்குமூலம் நெஞ்சை பிளக்கின்றது. சுதாகரித்துக்கொள்ளவே முடியவில்லை. இதற்காக எனது நன்றி!!!

**எச்.எம்.எம்.மஹீனா, மன்னார்.**

### எனது விமர்சனம்

**மனித மனங்களை வெல்ல யாரால்தான் முடியும். ஆனால் முரசு தனது கட்டுரைகளாலும், அரிய பல தகவல்களாலும் தன்னை ஈர்த்து வைத்துக்கொண்டுள்ளது. சிந்தனையைக் கலைத்து பல பக்கங்களிலும் எங்களை யோசிக்க வைக்கின்றாய். இருப்பினும் சில தவறுகளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதாவது அரசியல் ரீதியாக வருகின்ற கட்டுரைகளைக் குறைத்து வேறு எத்தனையோ அம்சங்களைச் சேர்த்துக் கொள்ளலாமென நினைக்கின்றேன். பாப்பா முரசு சிறுகதை குழந்தைகளுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கின்றது.**




**எஸ்.தேவிகா, பூவரசங்குளம்.**

## கவிதைப் போட்டி இல.928



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.09.2011

**கவிதைப் போட்டி இல. 928 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**

**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### மோகம்

உலகம் எங்கும்
செல்போன் மோகம்
அதற்கு
இந்தப் பச்சிளம்
பாலகனும்
தப்பவில்லை.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.

### பட்டதாரி...

புத்தகப் படிப்பில்-தன்
சிந்தனைகளுடன்
செயற்பட்டுக்கொண்டு-வரும்
கையடக்கத் தொலைபேசிக்கும்
பதில் சொல்லும் - இந்தப்
பாலகன்
நாளைய உலகில்
கல்விக்கு நாயகனாகி
பட்டதாரியாவான்.

வீ.அன்னராசா, கொம்மாந்துறை.

### மறவாதே!

உன் முகம் பார்த்தாலே
என் மனம் சிரிக்கிறது
அது ஏனோ தெரியவில்லை
உன் உதடுகள் மட்டும்
தான் பேசுகிறது
உன் பார்வைகள் இரண்டும்
யாரோ வரவை பார்க்கிறது.
ஒன்றுமட்டும் தெரிந்து
கொள் உன்னுடன் கதைப்பது
நான் என்று!

கு.ராம்ஜியா,
வல்வெட்டித்துறை.

### ஆபத்து

சுட்டிப் பையன்
சுதந்திரமாய் பொம்மைகளுடன்
விளையாட வேண்டிய நீ
ஒரு கையில் புத்தகமுமாய்
மறுகையில் தொலைபேசியும்
கொண்டு என்ன செய்கிறாய்
தொல்லை தரும்
தொலைபேசியால் வந்துவிடும்
ஆபத்துக்கள் பலவே..!!!

எஸ்.யானு
நீர்கொழும்பு.

### ஆவல்

நீ பருகும் பாலுக்காக
உனைத் தனியே இங்குவிட்டு
மத்திய கிழக்கு நாடேகி
குருதி சிந்தி பணிபுரியும்
உன் அன்னையின் குரல்
கேட்பதற்கு ஆவலோ?

அ.சந்தியாகோ, கண்டி.

## கவிதைப்போட்டி இல.925

### பாராட்டுக்குரியது



### செல் பேசி

'செல்' பேசி மகிழுது
சின்னக்குழந்தை!
'ஷெல்' பட்டு மடியுது
நம்ம குழந்தை?

### தேடுதோ?

'ஷெல்' அடிபட்டு
சிதறிப்போன - தம்
சொந்தங்களைச்
'செல்' போட்டுத்
தேடுதோ?
சின்னப் பாப்பா!

கிருத்திகா,
குண்டசாலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com

## உங்கள் பக்கம்



### A9 வீதியை மழைக்கு முன் புனரமைக்க வேண்டும்

அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்ற வாகனங்களினால் A9 பாதையில் வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பிரதேசம் மிகவும் மோசமாக பாதிப்படைந்திருக்கிறது. கடந்த மழை காலத்தில் இவ்வீதி மோசமாக பாதிப்படைந்ததால் குறித்த காலப்பகுதியில் பல வீதி விபத்துக்கள், மரணங்கள் போன்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் பலரின் கோரிக்கைகளையும் வற்புறுத்தல்களையும் அடுத்து குறித்த வீதியை புனரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கொண்டதன் பலனாக புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.


எனினும் குறித்த புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் மழை காலத்துக்குள் முடிவடைவது சிரமமானதாகவே இருக்குமெனத் தெரிகிறது.

அவ்வாறு பூரணப்படுத்த முடியாது போயின் தற்பொழுது வீதியின் ஓரங்களில் கொட்டப்பட்டுள்ள மண் மழை நீரில் கழுவிச் செல்வதுடன் A9 வீதி எதிர்வரும் பருவ மழை காலத்தில் சேறும் சகதியுமாக மாறக்கூடிய நிலைமை காணப்படுகிறது. அவ்வாறு ஏற்படின் கடந்த முறையை விட மோசமான அசௌகரியங்களுக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.

எனவே இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் தமது தீவிர கவனத்தைச் செலுத்தி எதிர்வரும் மழை காலத்திற்கு முன்னர் குறித்த வீதியை ஓரளவுக்காவது பூரணப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளையும், உத்தரவுகளையும் உரியவர்களுக்கு பிறப்பிக்க வேண்டுமென தினமுரசு உங்கள் பக்கம் ஊடாக வினயமாக கேட்டுக்கொள்கிறோம்.

சி.தம்மையா, வவுனியா

# களநிலவரங்களை அறிந்துகொண்டார் யாழ். வந்த றொபேட் ஓ பிளேக்




யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவி வருகின்ற பாதுகாப்பு நிலவரங்கள், மற்றும் மக்கள் எதிர்கொள்கின்ற அடிப்படைப் பிரச்சினைகள், வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஆகியவற்றுடன் மக்கள் எதிர்கொள்கின்ற சமூகவிரோத செயற்பாடுகள் போன்றவற்றின் விபரங்களை தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் அவர்கள் விபரமாகக் கேட்டறிந்துகொண்டுள்ளார்.

இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் றொபேட் ஓ பிளேக் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கான நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு அரச அதிகாரிகளையும், பொது அமைப்பினர் என பலதரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கான உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜெனீவா சென்றுள்ளமையை அடுத்து பதில்கடமையை மேற்கொண்டுள்ள கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர ரூபினி வரதலிங்கத்தை யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவகத்தில் சந்தித்த றொபேட் ஓ பிளேக் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலவரங்கள் குறித்தும் யாழ். மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றியும் விரிவாகக் கேட்டறிந்ததுடன் குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரச தரப்பிலிருந்து மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும் விபரமாகக் கேட்டறிந்துள்ளார்.

## அரசியலில் வெற்றிபெற பொறுமை அவசியம்

**வேட்பாளர் குகவரதனின் பிரச்சாரக் கூட்டத்தில் மனோகணேசன்**




அரசியலில் வெற்றிபெறுவதற்கு பொறுமை கட்டாயம் தேவை. என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் ஏணிச் சின்னத்தில் இலக்கம் 16 இல் போட்டியிடுகின்ற எஸ்.குக-வரதன், மற்றும் குருசாமி ஆகியோரினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மனோகணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசுடன் இணைந்து கொண்டவர்கள் இதுவரை எதையும் சாதிக்கவில்லை. எனவேதான் அரசிடமிருந்து வந்த அழைப்புகளை எல்லாம் கடந்த காலங்களில் ஏற்றுக் கொள்ளாது பொறுமையுடன் இருக்கிறேன். நாடாளுமன்றத்தில் இருந்தாலும் இல்லா விட்டாலும் மக்கள் மனங்களில் வாழ்கிறேன். பொறுமையாக இருந்தால் உரிய இடம் உரிய நேரத்தில் தேடிவரும் என்று கூறியதோடு எதிர்காலத்தில் அன்றைய காலகட்டத்தில் அரசியல் நகர்வுகளுக்கமைய பாரிய எதிர்க்கட்சி கூட்டணி உருவாகலாம் எனவும், அதில் பெரும்பாலான சிறுபான்மைக் கட்சிகள் அங்கம் வகிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிவித்தார்.

## பனைவளத்தில் பெரும்பகுதி பயன்படுத்தப்படுவதில்லை

**பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு.பசுபதி சீவரத்தனம்**



பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கௌதாரிமுனை எனும் இடத்தில் பனை அபிவிருத்திச் சபை UNHCR, RDF இணைந்த வாழ்வாதாரத் திட்டமாக பனங்கைப்பணிப் பயிற்சிநெறி கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தனம் கலந்து சிறப்பித்துள்ளார்.

இங்கு கருத்துரைத்த பனை அபிவிருத்தி சபை தலைவர் அவர்கள் மொத்தப் பனையின் பயனில் 15% மட்டுமே மக்களின் பயன்பாடாக உள்ளது. மிகுதி 85% வீணாகிப்போகிறது. எமது வளம் பனையென இலச்சினைகளில் முனைப் பெடுப்போர் தம்வாழ்வியல்பில் இலட்சியமான முனைப்ப பெடுப்பதில்லை. வடக்கின் வளம் பனையென்று கூறும் அனைவரும் அவ்வளம் பயன்பாடின்றி வீணாகிப் போவதை சிந்திப்பதில்லை. பனைவளப் பயன்பாட்டினை முன்னெடுக்க முனைந்துள்ள UNCCR, RDF 15 ஆவது கட்டளைத் தளபதி கேணல் ஹருப்பிரியா ஆகியோரின் முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள் என்றார்.

மற்றும் இப்பயிற்சி நெறி-யினை ஆரம்பிக்கும் பனை அபிவிருத்திச் சபையானது பயிற்சி வழங்குவதோடு மட்டுமல்லாது அப்பொருட்களுக்குரிய சந்தை வாய்ப்பையும் வழங்கிவருகின்றது. உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கென 'சிறுசுவடுகள்' எனும் உற்பத்திக் கட்டமைப் பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பினூடாக உற்பத்தியாளர்களுக்கான சுயபொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இப்பிரதேசத்தில் பனம்பழங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றது. இப்பழங்களைப் பயன்படுத்தி களி எடுத்து பனாட்டாக்கும் தொழில்நுட்பத்தினை இப்பயிற்சியாளர்களுக்கு பனங்கைப்பணிப் பயிற்சிக் காலத்திலேயே வழங்கவுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

## கிழக்கின் கல்வித் திணைக்களங்களுக்கு யுனிசெவ் உதவி

கடந்த காலப் போரி-னால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான வேலைத் திட்டங்களை யுனிசெவ் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அந்தவகையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களின் தேவை கருதி தலா இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் 24 மடிக்கணினிகளையும் யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது.

அதேவேளை புதிதாக ஏற்படுத்தப்பட்ட கிண்ணியா, திருகோணமலை வடக்கு, திருக்கோயில் ஆகிய கல்வி வலயங்களின் பாவனைக்காக புதிய பிக்கப் வாகனங்களை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யுனிசெவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளன.

## அட்டாளைச்சேனையில் விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள விதவைகளுக்கு சுயதொழிலை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் தையல் இயந்திரங்களை வழங்கும் வைபவமொன்று அண்மையில் அட்டாளைச் சேனையில் நடைபெற்றுள்ளது. அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் ஹாசிம்மின் நிதிஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மேற்படி தையல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் ஹாசின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்கி வைத்தார்.

## சிறுவர் இல்லத்தில் தீ விபத்து

கொழும்பு-கண்டி வீதியில் அமைந்துள்ள விகாரிய என்னும் இடத்தில் இயங்கிவந்த சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயங்களுக்குள்ளானதாக நிட்டம்புவ பொலிசார் தகவல் தெரிவிக்கின்றனர். விளையாட்டுப் பொருள் ஒன்றைத் தேடி மெழுகுவர்த்தி ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு குறித்த சிறுவர்கள் அறையொன்றினுள் சென்ற சமயமே குறித்த தீ விபத்து நடைபெற்றதாக பொலிசாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நிட்டம்புவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாற்பண்ணை மேம்படுத்த நடவடிக்கை

இலங்கையின் பாற்பண்ணை உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு அவுஸ்திரேலியாவும் நெதர்லாந்தும் முன்வந்துள்ளன. இதன்போது 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலிடப்படவுள்ளதாக அந்த நாடுகளின் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுகள் அறிக்கை வெளியிட்டுள்ளன.

இரண்டு கட்ட செயற்றிட்டங்களுக்கு அமைய அவுஸ்திரேலியாவில் இருந்து 4 ஆயிரத்து 500 கறவை பசுக்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதனடிப்படையில் இலங்கையில் உள்ள பாற்பண்ணைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரிக்க முடியும் என நம்பப்படுகிறது.

இதன்படி பொபத்தலாவ பாற்பண்ணைக்காக 2 ஆயிரம் கறவை பசுக்கள் கையளிக்கப்படவுள்ள நிலையில் 1500 பசுக்கள் நிக்கவரட்டிய மற்றும் சிறிக்கபாத்த பாற்பண்ணைகளுக்காக வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் நிதி அமைச்சின் செயலாளருக்கும் அவுஸ்திரேலிய மற்றும் நெதர்லாந்து நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஒப்பந்த கைச்சாத்தின் அடிப்படையிலேயே இந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

## தபால் நிலையங்களை அமைக்க நிதி ஒதுக்கீடு

அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பேமடுவ மற்றும் சீப்பிகுளம் ஆகிய பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய புதிய தபால் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக 185 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 55 வருட காலம் பழைமை வாய்ந்த சிறிய கட்டடத்தில் இயங்கி வந்த பேமடுவ தபாலகக் கட்டடமும் 31 வருட காலம் பழைமை வாய்ந்த் தனியார் கட்டடமொன்றில் இயங்கிவந்த சீப்பிகுளம் தபால் அலுவலக கட்டடமும் நவீன வசதிகளுடன் புதிய தபால் நிலையங்களாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## பயணம் எங்கே?

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை அரசுக்கு எதிரான பிரகடனங்களும் தீர்மானங்களும் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பிடம் உண்டு. அத்தைகயதொரு நிலையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை இலங்கை அரசு தந்துவிடும் என்ற பரப்புரை முன்னெடுக்கபடுகின்றது.

இலங்கை அரசோ சர்வதேச தளத்தில் எழக்கூடிய சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதுதான் இலங்கையின் கவனத்துக்குரியதாக இருக்கின்றது. சர்வதேசச் சவால்களுக்கு முகம்கொடுப்பதென்பதும் தமிழ்மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சனைக்குத் தீர்வொன்றை வழங்குவதும் வெவ்வேறான பிரச்சனையென்றே அணுகுகின்றது.

இது தவிரவும் இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வொன் றைக்காண தமிழர் தரப்பு நடைமுறைச்சாத்தியமான வகையில் முயற்சிக்காமலும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை, விருப்பத்தை வென்றெடுக்காமலும் ஆயுதவழியில் அல்லது நாட்டுக்கு வெளியிலுள்ள ஏதோ ஒரு தரப்பின் தலையீட்டை பிரயோகிக்கப் பிரயத்தனம் செய்துள்ளனர். இவ்வாறான முயற்சிகள் தொடர்ந்தும் தோல்வியடைவதோடு பெரும்பான்மை மக்களினதும் அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களையும் சினமடைய வைப்பதோடு, சந்தேகம்கொள்ளவும் வைத்துள்ளது.

முன்னர் பல்வேறுபட்ட தமிழ் அமைப்புகள் பின்னர் புலிகள் இப்போது தமிழ்க் கூட்டமைப்பினர் எல்லோரும் ஒரே தவறையே செய்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளே தீர்வுகளைக் காணக்கூடிய நல்ல வாய்ப்புக்களையும் சீர்குலைத்துவிட்டுள்ளது.

ஆயுத ரீதியில் புலிகள் வெல்லப்பட்டாலும் தமிழ் மக்களின் விருப்பங்களை வென்றெடுப்பதற்கு அவர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காணவேண்டும் என்ற செய்தியைப் பெரும்பான்மை மக்களிடம் எடுத்துச் செல்ல தமிழ் கூட்டமைப்பின் இனவாதக் கருத்துக்களும், சவால் விடும் அணுகுமுறைகளுமே அதற்குத் தடையாக இருக்கின்றன.

இவ்வாறு இலங்கை அரசியல் தலைமை கருதுகின்றது. இவ்வாறான புரிதலானது நிலைமையை மேலும் சிக்கல் நிறைந்ததாகவே நீடிக்கச் செய்யும். இதையிட்டு நாம் வெற்று உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல் சிந்திக்கவேண்டும்.

யார் என்ன சொன்னாலும் இந்த நாட்டில் அரசியல் அதிகார மையத்தை தீர்மானிப்பவர்களாக பெரும்பான்மை மக்களாகவே இருப்பதால் அவர்களுக்கு ஏற்புடையதற்ற எதையும் அரசியல் தலைமைகள் செய்யப்போவதில்லை.

இலங்கையின் இறைமையை மதிக்கும் எந்தவொரு சர்வதேச சக்தியும் இலங்கையிலுள்ள பெரும்பான்மை மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்யமாட்டார்கள். இந்த உண்மையை புரிந்து கொண்டும் தமிழ் மக்களை தவறாக வழி நடத்தவே கூட்டமைப்பும் புலம்பெயர்ந்து வாழும் புலி ஆதரவுச் சக்திகளும் முயற்சிக்கின்றன.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# சர்வதேச இயலாமையை அம்பலப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்




**புலிகளுக்கும்** இராணுவத்துக்கும் நடந்த இறுதி யுத்தத்தில் புலிகளாலும் யுத்தத்தில் சிக்கிக் கொண்ட அப்பாவி மக்களாலும் சர்வதேசம் இறுதி நேரத்திலாவது தம்மைக் காப்பாற்றும் என்ற எதிர்பார்ப்பு மிக அதிகமாகவே இருந்தது. இந்தியா, அமெரிக்கா, நோர்வே, ஐ.நா பிரமுகர்கள், ஆகியோர் பல்வேறுமுனைகளில்அணுகப்பட்டிருந்தனர். ஏல்லா நம்பிக்கைகளையும் பொய்யாக்கிய இந்த சர்வதேச சக்திகள் பேரழிவுகள் இம்மண்ணில் நடந்தேறுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன என்றால் அது தகும்.

ஐ.நா. சார்பில் அதன் செயலாளர் நாயகமான பான் கீ மூனின் செயலாளர்களில் ஒருவரான நம்பியாருக்கும் இலங்கையின் ஐ.நாவுக்கான பிரதிநிதியான பாலித ஹோகன இருவருக்குமிடையிலான தொடர்புகள், தமிழகத்தின் தி.மு.க, எம்.பி கனிமொழி, திருமாவளவன் இலங்கை மற்றும் இங்கிலாந்தின் கத்தோலிக்க மதத் தலைவர்கள் ஆகியோருக்கிடையிலான தொடர்புகள், இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரம் மற்றும் புலிகளின் சர்வதேச ஆயுதக்கடத்தலில் பிரதிநிதிக்குமிடையிலான தொடர்புகள் மற்றும் நோர்வேயின் இறுதி நேரப் பதற்றங்கள் எனப் பல்வேறு அசுரத்தனமான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இலங்கை அரசின் இறுக்கமான தந்திரோபாயமும் புலிகள் புரிந்த கொடூரமான பயங்கரவாதச் செயற்பாடுகளால் உலகப் பரப்பில் உருவாகியிருந்த அருவருப்பான வெறுப்புகளின் உச்சமும் பேரவலத்திற்கு முகம் கொடுத்தேனும் முடிவொன்றைக் கண்டடையவேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தியது. அதுவே நடந்தும் முடிந்தது.

இன்று விக்கிலீக்ஸ் வெளிப்படுத்தும் தகவல்கள் பலருக்கு ஆச்சரியத்தையும் அச்சத்தையும் கொடுப்பதாக இருந்தாலும் பல பேரின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டியுள்ளது. அதேவேளை அமெரிக்க இராஜதந்திரிகளின் முதிர்ச்சியற்ற மதிப்பீட்டுப் பிழைகளையும் கயிறு விழுங்கும் இராச்சிய அணுகு முறைகளையும் வெளுத்துக் காட்டியுள்ளது. உதாரணமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சி இலங்கைப் படையினருக்கு பெண்களை வழங்கினார் என்று தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்றப் பிரதிநிதி ஒருவர் கூறினார் என்று அமெரிக்கத்தூதுவர் தனது அறிக்கையில் கூறியிருப்பதாக விக்கிலீக்ஸ் கூறியிருந்தது. அவ்வாறு ஒருவர் கூறியிருந்தால் அதுபற்றி உறுதிப்படுத்த முயற்சிக்காமல் தமது பக்கமாக வேணும் விரித்து அறியாமல் அல்லது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் அணுகுமுறைகள், அரசு மற்றும் படைகளுடனான உறவுகள் என்பவற்றை இராஜதந்திரி என்ற அறிவுக்குட்பட்ட விதத்திலேனும் தெரிந்து கொள்ளாமல் அவர் சொன்னார் நானும் சொல்கிறேன் என்றளவில் விழுங்கியதை கக்குவது போல் தகவல் அனுப்பி இருப்பதைக் குறிப்பிடலாம்.

விக்கிலீக்ஸ் இணையம் அண்மையில் வெளியிட்ட தகவல்கள் தமது நாடுகளில் இருக்கும் தூதரகங்கள் என்ன செய்கின்றன எவ்வளவுக்கு குறித்த நாடுகளின் இறைமைக்குள் தலையிடுகின்றன என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. குறிப்பாக அமெரிக்காவின் முகத்தை உலகுக்கு காட்டியுள்ளது.

இலங்கையில் யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்தபோது பாதுகாப்பு வலயம் என்று இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகள் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் அதை இலங்கை அரசுக்கு அமெரிக்கா சுட்டிக்காட்டியதாகவும் அதைக் கணக்கில் எடுக்க இலங்கை அரசின் உயர்பீடம் தாம் சுட்டிக் காட்டிய நிகழ்வுகளை செய்மதிக் காட்சிகளில் பார்த்து இரசித்ததாகவும் அமெரிக்கத் தூதரகத்தை மேற்கோள்காட்டி தகவல் வெளியிட்ட விக்கிலீக்ஸ் யுத்தம் முடிவுக்கு வந்து 48 மணிநேரத்துக்குள் இலங்கைக்கு வருகைதந்து யுத்தம் நடைபெற்ற பகுதிகளையும் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கப் பட்டிருந்த அகதி முகாம்களையும் பார்வையிட்டுவிட்டு திரும்பும்போது விமான நிலையத்தில் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்ததாகவும் அவர்களிடம் தான் பார்வையிட்ட காட்சிகளை விபரிக்க முடியாமல் திணறியதாகவும் இதுபோல் அவலக் காட்சியை இதற்கு முன்னர் தான் காணவில்லை என்றும் கூறியதாகவும் அமெரிக்கத் தூதுவர் தகவல் அனுப்பியதாகவும் விக்கிலீக்ஸ் கூறியிருந்தது.

அதுமட்டுமல்லாமல் அண்மையில் வெளியிட்டது அதாவது இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போரின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்களின் இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவும், எஞ்சியுள்ள போராளிகள் சரணடைவ்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் நடுநிலையாளர் ஒருவரை நியமிப்பதற்கு அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தது. இதனை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசு திட்டவட்டமாக மறுத்துவிட்டதே இதற்குக் காரணமாகும்.

2009 மே 17ஆம் திகதி இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் அமெக்க இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பிய தகவல் பரிமாற்றக் குறிப்பு ஒன்றிலேயே இது தொடர்பிலான தகவல் இடம்பெற்றுள்ளது. இலங்கையின் நிலைமை தொடர்பாக அனுப்பப்பட்ட இந்த அறிக்கையில் மே 17ஆம் திகதி இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போர் முடிந்துவிட்டதாக அறிவித்துள்ளதாகவும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை மே 19 ஆம் திகதி அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அன்றைய நாள் முழுவதும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம உள்ளிட்ட இலங்கை அதிகாரிளுடன் தான் தொடர்பில் இருந்ததாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார். பாதுகாப்பு வலயத்துக்குள் அதிக எண்ணிக்கையான மக்கள் இன்னும் இருப்பதாக மன்னார் ஆயர் தன்னிடம் தொடர்பு கொண்டு கூறியதாகவும் பிளேக்கின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் எஞ்சியுள்ள புலிகள் சரணடையத் தயாராக இருப்பதாகவும் அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டதாக நோர்வே தூதுவர் தன்னிடம் கூறியதாகவும் பிளேக் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் எஞ்சியுள்ள போராளிகளை சரணடைவதற்கான நடுநிலையாளர் ஒருவரை ஏற்க வைப்பது தொடர்பாகவே தான் இலங்கை அதிகாரிகளுடன் அன்றைய நாள் மூவதும் தொடர்பில் இருந்ததாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார் மே 17ஆம் திகதி அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவை நடுநிலையாளராக ஏற்றுக் கொண்டு விடுதலைப் புலிகளை சரணடைவதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமாறு கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து வேண்டுகோள் விடுத்ததாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் போர் முடிந்துவிட்டது என்று கூறி கோத்தபாய ராஜபக்ஷ அந்த நடுநிலை முயற்சியை ஏற்க மறுத்துவிட்டதாகவும், ஆனால் சரணடையும் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு படையினருக்கு தான் அறிவுறுத்தியிருப்பதாக அவர் கூறியதாகவும் பிளேக் அனுப்பிய குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, அன்றைய நாள் போர் வலயத்தில் இருந்து சடலங்களையும் காயம் அடைந்தவர்களையும் மீட்க அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவை அனுமதிக்குமாறு இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பஷில் ராஜபக்ஷவை தான் கேட்டுக் கொண்டதாகவும் பிளேக் குறிப்பிட்டுள்ளார். தனது வேண்டுகோளை நிராகரித்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கை அரசாங்கமே அதனைப் பார்த்துக்கொள்ளும் என்று கூறிவிட்டதாகவும் பிளேக் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது தோல்விகண்ட பலதரப்புகள் தமது இயலாமையை ஏற்றுக்கொண்டதற்கு பரிகாரம் காண்பதை விடவும், தமது முகத்தில் பூசப்பட்டிருக்கும் கரியை மறைப்பதற்காக தற்போது பலமுனையில் எத்தனிக்கின்றது என்பது மட்டும் புரிகிறது. இதைச் சரிவரப்புரிந்து கொள்ளாமல் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்காக கோவணம் கட்டிக்கொண்டு கோதாவில் குதித்துள்ளது என்று தமிழ் மக்களிடம் கதை விட்டுக் கொண்டு சிலர் குடும்ப வயிறு கழுவிக் கொண்டிருக்கின்றனர்.

# மக்களையும் போராளிகளையும் காப்பாற்றும் பொருட்டு சரணடைவது

## ஆனால் எமது தலைமை சரணடையும் என்று நாம் யாருக்கும் சொல்லவில்லை

புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்

தலைவர்களில் ஒருபகுதியினர் முதலில் சரணடைவர் என்றும் பின் அடுத்த கட்டம் பற்றி சொல்லுவதாகவும் உடனடியாக இதை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி பாதிரியாருக்கும் கே.பிக்கும் நமது தலைமை சார்பில் நடேசனால் கூறப்பட்டது.

இதனால் கே.பி ஆயுதங்களை இந்தியாவிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும், அது சாத்தியமில்லை என்றால் ஐ.நா ஏற்பாட்டில் ஒப்படைக்கிறோம் என்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தார்.

இந்தியா, அல்லது ஐ.நா.வின் முன்னிலையில் ஒரு தொகுதி பொறுப்பாளர்கள் முதலில் சரணடைவது என்ற புலிகளின் முடிவைச் கே.பி சொன்ன பொழுது, கால அவகாசமில்லை. இந்தியாவிடம் சரணடைவதற்கான சாத்தியப்பாடுகள் இப்பொழுது இல்லை. இலங்கை இராணுவத்திடமே சரணடைவதுதான் தற்போது சாத்தியமானது அதற்கு சம்மதமா? என நமது தலைமையை கேட்கும்படி சிதம்பரம் கூறியதாக மறுபடி சில மணித்தியாலங்களில் எமக்கு அந்த பாதிரியார் மூலம் செய்தி வந்தது. பல தரப்பட்ட விவாதங்களின் பின் நமது தலைமை மக்களைளையும் போராளிகளையும் காயப்பட்டவர்களையும் காப்பாற்றும் பொருட்டு, இலங்கை இராணுவத்திடமே சரணடைவது என்ற முடிவை நமது தலைமை எடுத்தது. ஆனால் இது நடைபெறுவதற்கு முன் நமது தலைமை,எமது சார்பாக மேற்குலக அரசுகளுடன் இறுதிநேர தூதுவராகச் செயற்பட்ட மேரி கெல்வினின் என்ற ஒருவர்மூலம் நாங்கள் எமது ஆயுதங்களைக் கீழே வைக்கிறோம் என்று நடேசன் மூலம் சொல்லியதுடன் அதற்கு அமெரிக்காவிடமிருந்தும் பிரித்தானியாவிடமிருந்தும் பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை நமக்கு பெற்றுத்தரும்படி கேட்கப்பட்டது. இலங்கை இராணுவத்திடம் சரணடைவது மிகவும் அபாயகரமானது என்று இதற்குக் எமது சார்பில் காரணம் சொல்லப்பட்டது. மேலும் நாம் எமது சமாதானச் செயலகத்தைச் சார்ந்த புலித்தேவன், நடேசன் போன்ற அரசியல் தலைவர்கள் மற்றும் சமாதானச் செயலகத்தைச் சார்ந்த 300-400 வரையான போராளிகளையும் காப்பாற்றுவதே எமது நோக்கமாக அப்போது இருந்தது. இதற்கு தலைவர் நேரடியாகவே உத்தரவு பிறப்பித்தும் இருந்தார். .அத்தோடு சில விடயங்களை ஐ.நா.விற்கு தெரிவிக்குமாறு நடேசன் மூலம் கோரப்பட்டது.

நாம் ஆயுதங்களைக் கீழே வைக்கின்றோம். எமக்கு ஒரு தீர்வு கிடைக்கவழி செய்தால் அவர்களிடம் நமது மற்றைய தலைவர்கள் சரணடைவது பற்றி கூறப்படும், அமெரிக்கா அல்லது பிரித்தானியாவிடம் இருந்து பாதுகாப்புக்கான உறுதி தரவேண்டும். எமது மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் அரசியல் தீர்வுக்கு இலங்கை அரசாங்கத்தை இணங்கச்செய்ய வேண்டும் என இன்னும் சில உறுதிமொழிகளை புலிகள் சார்பாக நாம் அவர்களிடம் நடேசன் மூலம் கோரியிருந்தோம்.

இது அநேகமாக 15 . 05.2009 நடைபெற்றதாக நினைக்கின்றேன். ஆனால் நமது தலைமை சரணடையும் என்று எவருக்கும் நாம் எப்பொழுதும் சொல்லியிருக்கவில்லை.

அதன்பின் ஐ.நா.வின் ஆசியாவுக்கான தூதர் விஜய் நம்பியாருடன் மேரி கொல்வினுக்கு தொடர்பை ஏற்படுத்தி நமது நிலைப்பாடான ஐ.நா.வின் உத்திரவாதத்தில் ஆயுதங்களை ஒப்படைக்கும் முடிவை விஜய் நம்பியாரிடம் சொல்லி அந்த விஜய் நம்பியார் நடேசனும், புலித்தேவனும் சரணடைந்தால் பாதுகாக்க தாம் இலங்கையுடன் தொடர்புகொண்டு பேசியதாகவும் அவர்கள் ஐநாவுக்கு உறுதியளித்துள்ளார்கள் என்றும் இலங்கை சார்பில் பாதுகாப்பு செயலருடன் பேசி முடிவெடுக்கப்பட்டதாகவும் நமது தலைமைக்கு அவசரமாகத் தகவல் சொன்னார்.

இது இவ்வாறிருக்க சமாதான முயற்சியில் ஈடுபட்ட இன்னொருவரான சந்திரநேரு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினருடனும் நாம் பேசி இதுபற்றி கேட்டபோது, அதுபற்றி அவர் தனக்கு தெளிவாக தெரியாது என அப்பொழுது சொன்னார். இந்த இறுதி நேர முடிவுகள் அனைத்தையும் இந்தியா தான் எடுத்தது. இந்த முடிவை ஏற்கச் சொல்லி ஜெகத் கஸ்பர் மூலமாக கே.பி.யை நிர்ப்பந்தித்தார்கள் இந்த பாதிரியும் சிதம்பரமும் சேர்ந்து. இந்தியாவின் விருப்பங்களை மீறி ஐ.நா. மற்றும் மேற்குலகம் இலங்கையில் எதையும் செய்துவிடாது என்பது நமது தலைமைக்கு நன்கு தெரிந்த விடயம்தான்.



> அமெரிக்கா அல்லது பிரித்தானியாவிடம் இருந்து பாதுகாப்புக்கான உறுதி தரவேண்டும். எமது மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் அரசியல் தீர்வுக்கு இலங்கை அரசாங்கத்தை இணங்கச்செய்ய வேண்டும் என இன்னும் சில உறுதிமொழிகளை புலிகள் சார்பாக நாம் அவர்களிடம் நடேசன் மூலம் கோரியிருந்தோம். இந்தியாவின் விருப்பங்களை மீறி ஐ.நா. மற்றும் மேற்குலகம் இலங்கையில் எதையும் செய்துவிடாது என்பது நமது தலைமைக்கு நன்கு தெரிந்த விடயம்தான்.

(தொடரும்...)

நன்றி : இணையம்

தமிழக அரசியல்

# வருகிறது உள்ளாட்சித் தேர்தல்! அட்டகாசம் காட்டுகிறது எதிர்க்கட்சி

தாரை தப்பட்டை, பொய்க்கால் குதிரை, கரகம் என்று, தலைவருக்கு முன் அட்டகாசம் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள், இக்கட்சிக் காரர்கள். அப்படியான கட்சி, இன்றைய நிலையில் எது? 'நான் யாருடைய முதுகில் 'நாலு' போடுகிறேனோ, அவருக்கு மக்கள் தாராளமாக வாக்குப் போடுவார்கள் என்று கூறிய விஜயகாந்தின் கட்சிதான் அது!

தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., வி.சிறுத்தைகள் என்று பலநாள் கட்சிகளே உள்ளாட்சித் தேர்தல்களை நினைத்து விழி பிதுங்கிக் கொண்டிருக்க, இவர்களில் அதிகப்படியான உற்சாகம் வித்தியாசமான காட்சியாக உள்ளது.!

விஜயகாந்தின் அரசியல் நடவடிக்கைகள் குழப்பமாகவும், சர்ச்சைக்கு உரிய விதத்திலும் ஒருபக்கமாக இருக்க, மறுபக்கமாக அவரது கட்சிக் காரர்கள் அதீத உற்சாகத்தில் உள்ளதாகத் தெரிகிறது. கட்சி ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்கள் பெரிதாகச் சொல்லிக் கொள்ளும் வகையில் எழுச்சி கொண்டிராத கட்சி இது. கடந்த சட்டசபைத் தேர்தலோடு பிரதான எதிர்க்கட்சியாக வந்து விட்டதில், ஏற்பட்ட உற்சாகம் இன்னமும் நீடிக்கிறது.



உள்ளாட்சி தேர்தலில், தே.மு.தி.க. சார்பில் போட்டியிட விரும்புபவர்களுக்கான விருப்ப மனு விண்ணப்பங்கள், கடந்த 4ஆம் திகதி முதல் வரும் 12ஆம் திகதி வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. கட்சியின் சார்பில் மேயர், மற்றும் உறுப்பினர் பதவிகளுக்காக, சென்னையில் போட்டியிட விரும்பும் கட்சிக்காரர்களுக்காக விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விண்ணப்பங்கள் கொடுப்பதில், அ.தி.மு.க.வுக்கு அடுத்தபடியாக சுறுசுறுப்பு காட்டும் கட்சியாக மாறியிருக்கிறது, தே.மு.தி.க.

சென்னை கோயம்பேட்டில் இவர்களுடைய கட்சி அலுவலகம் உள்ளது. தமிழகத்தின் எந்தக் கட்சி அலுவலகத்திலும் காணப்படாத அளவுக்கு கலகலப்பாக காணப்படும் அங்கு, கட்சித் தலைவர் விஜயகாந்த் அண்மையில் வந்திருந்தார். இதனால், ஏற்கனவே சுறுசுறுப்பு நிலையில் இருந்த கட்சிக்காரர்கள், ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று அசத்தி விட்டனர்.

விஜயகாந்த் கோயம் பேட்டு அலுவலகத்திற்கு வருகைதந்த தினத்தன்று காலை 10 மணி முதலே விண்ணப்பதாரர்கள் ஆர்வமாக வரத் தொடங்கினர். மற்றொரு வித்தியாசமான காட்சியாக, சிறிய பதவிகளுக்காக மனு கொடுக்க வந்தவர்களும்,

### ரிஷி

ஏதோ சட்டசபை தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்ய வருவதுபோல, தம்முடன் தொண்டர் படைகளை அழைத்து வந்திருந்தனர். அப்படி வரும்போது, தாரை தப்பட்டை, பொய்க்கால் குதிரை, கரகம் என்று தொடங்கி, விண்ணப்பப் படிவம் கொடுக்கும் நேரத்தில் பட்டாசு கொளுத்துவது வரை, கோயம்பேடு இடமே நேற்று அதிர்ந்தது.

தாரை, தப்பட்டையை நன்றாக அடிக்கட்டும். 'அடித்தால்' ராசி என்று கூறப்படும் கட்சியல்லவா? அடி மேளத்தில் விழுந்தாலென்ன, முதுகில் விழுந்தாலென்ன, ஜெயிப்பது தானே முக்கியம்?

Welcome

# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கம்...





# தோற்றுப் போகும் திருமணங்கள்


சமுதாயக் கட்டுக்கோப்பைப் பற்றிச் சொல்ல வந்த சிசேரோ (Cicero) ‘திருமணம் சமுதாயக் கட்டுக்கோப்பின் ஆணிவேர்’ என்றார். அன்று தொடங்கி இன்று வரை திருமணங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இன்றைய இளைய சமுதாயத்தினரின் எண்ணச் சுழற்சியால் அவர்களது எதிர்பார்ப்புகள் மாறி வருகின்றன. உலகின் பல பகுதிகளிலும் நாள்தோறும் நிகழ்கின்ற வியத்தகு நிகழ்ச்சிகளும், எழுச்சிகளும் அவர்களது சிந்தனை ஓட்டத்தை பாதிக்கின்றன.

தாங்கள் கற்ற கல்வியின் பயனாக விளைந்த கருத்துப் புரட்சிகள், பிற நாட்டினர், பிற மொழியினர் போன்றவர்களது வாழ்க்கை முறைகளை அறிந்து ஆராய்கின்ற போது நேர்கின்ற சிந்தனை மாற்றங்கள். இவை அனைத்தும் சேர்ந்து அவர்கள் உள்ளத்திலே கற்பனைகள், கனவுகள், எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துகின்றன. ஆனால் நடைமுறை வாழ்க்கையில் பெருத்த ஏமாற்றமே அவர்களை எதிர் கொண்டழைக்கிறது. இளந்தலைமுறையினரின் எதிர்பார்ப்புகளுக் ஏற்ப முன்னேறாத சமூக அமைப்பு, சாதிக்கட்டுப்பாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை, பெண்ணடிமை போன்ற பல அவலங்களை எதிர்த்துப் போராடச் சக்தியற்ற நிலையில், பெற்றோரைக் காரணங்காட்டி சாதி, மதம், ஜாதகம், சடங்குகள், சம்பிரதாயம், வரதட்சணை என்னும் சிக்கல்களுக்குள் தங்களைச் சிக்க வைத்துக் கொள்கின்றனர். என்றாலும் அவர்களது நெஞ்சத்தின் அடித் தளத்தில் ஏமாற்றம் என்னும் தீ கனன்று கொண்டே இருக்கிறது. இதன் விளைவுதான் அண்மைக் காலமாக நிகழ்ந்து வருகின்ற மண முறிவுகள்.

இந்த மண முறிவுகள் அனைத்தும் அறிவார்ந்த நிலையில் நடைபெறுகின்றனவா என்று ஆராய்கின்ற போது, சில மண முறிவுகள் அறிவு பூர்வமாகவும் பல மண முறிவுகள் அச்சம், சினம், ஆத்திரம், ஏமாற்றம் போன்ற உணர்ச்சி மேலீட்டாலும் நடைபெறுகின்றன என்ற உண்மை தெளிவாகும்.

# சேலை மேற்சட்டைகளுக்கான டிசைன்





# பருக்கள் இல்லாமல் போக...



என்னதான் குளித்து முடித்து உற்சாகமாக வந்தாலும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் எண்ணெய் வழிந்து சோர்வடைந்து விடுகிறீர்களா? உங்களின் துயரையும் எண்ணெயையும் சேர்த்தே துடைக்கிறது இந்த கடலை பருப்பு ‘பேக்’......

தோலுடன் இருக்கும் கடலைபருப்பு அரை கிலோ. துளசி இலை 50 கிராம். வேப்பங்கொழுந்து 5 கிராம்.... இவற்றை நிழலில் உலர்த்தி நன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். இதனுடன் இரண்டு துளி எலுமிச்சை சாறு சேர்த்து முகத்துக்கு ‘பேக்’ போட்டு ஐந்து நிமிடம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தைக் கழுவுங்கள். வாரம் ஒரு முறை இதைச் செய்து வந்தால், பளபளவென்று முகம் பிரகாசிக்கும். எண்ணெய் வடிகிற முகம் என்றாலே, பருக்களின் தொந்தரவும் இருக்கும். பரு தொல்லையால் அவதிப்படுகிறவர்களுக்கு கடலை பருப்பில் அட்டகாசமான சிகிச்சை இருக்கிறது.

கடலை பருப்பு 1 தேக்கரண்டி, ஒரு மிளகு இவற்றை எடுத்த ஒரு தேக்கரண்டி பாலில் ஊறவையுங்கள். இதனுடன் கால் தேக்கரண்டி முல்தானி மட்டி பவுடரைச் சேர்த்து கலக்குங்கள். பிறகு இதை முகத்தில் ‘பேக்’ ஆகப் போட்டு, உலர்ந்ததும் அலசுங்கள். பருக்கள் இருக்கும் இடத்தில் மட்டும் அவற்றை மூடுவது போல் கொஞ்சம் அதிகமாகப் பூச வேண்டும். தொடர்ந்து இப்படிச் செய்து வாருங்கள்.... பருக்கள் இருந்த இடம்தெரியாமல் மறைந்து போகும்.

## சமையல் குறிப்பு

# பேரீச்சம்பழக் கேக்

**தேவையான பொருட்கள்**

பேரீச்சம் பழம் - 1கப்(பொடியாக நறுக்கியது)
மைதா - இரண்டரை கப்
கண்டன்ஸ்டு மில்க் (condensed milk) 1/2 லீற்றர்
தூளாக்கிய சர்க்கரை-1/2 கப்
வெண்ணெய் - 1/2 கப்
பால் 1-1/2 கப்
பேக்கிங் பவுடர் 2 தேக்கரண்டி
வெனிலா எசன்ஸ் - 1தேக்கரண்டி

**செய்முறை:**

பேரீச்சம் பழத்துடன் 3 தேக்கரண்டி மைதா சேர்த்து கலந்து கொள்ளவும். பின் ஒரு பாத்திரத்தில் தூளாக்கிய சர்க்கரை, வெண்ணெய் சேர்த்து Electric beter கொண்டு நன்கு கலக்கவும். பின் அதனுடன் கண்டன்ஸ்டு மில்க், பால், மைதா, வெனிலா எசன்ஸ், பேக்கிங் பவுடர் சேர்த்து நன்கு கலக்கவும். பின் பேரீச்சம்பழம் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.
பின் றேயில் வெண்ணெய் தடவி மைதா லேசாகத் தூவி கலந்தவற்றை அவனில் ஊற்றி 180பாகை டிகிரியில் பேக் செய்யவும்.



# தாயின் சிறிய அதிர்வு கூட குழந்தையைப் பாதிக்கும்



நல்ல குழந்தைக்கு தாயின் மன நிலையே முக்கிய காரணமாகிறது. தாய் உறங்கும் வேளையில்கூட கருவில் இருக்கும் குழந்தை வெளியுலக சஞ்சாரங்களை கிரகித்துக்கொள்கிறது. இதனாலேயே கருவுற்ற பெண்கள் நல்ல வார்த்தைகளையும், மெல்லிய இசையையும் கேட்க வேண்டும் என்றும் அமைதியான சூழ்நிலையில் இருக்க வேண்டும் என்றும் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

கருவிலிருந்து குழந்தைகளை நோயின்றி பாதுகாத்து வருவது நல்லது என்று சித்தர்களும் கூறியுள்ளனர்.

தாயின் மனநிலை, உடல் நிலை இரண்டுமே குழந்தை வளர்ச்சிக்கு மிக முக்கியமானவையாகும். கருவுற்ற பெண்களை இதனால்தான் தாய் வீட்டிற்கு அனுப்புகிறார்கள். அங்கு அந்தப் பெண் ஒரு ராணி போல் தாயாரால் பராமரிக்கப்படுகிறாள். கருவுறும் காலத்திலிருந்து அந்த பெண்ணின் மன நிலை மகிழ்ச்சியுடனும் புத்துணர்வுடனும் இருந்தால்தான் குழந்தையை ஆரோக்கியத்துடன் பெற்றெடுக்க முடியும்.

கருவுற்ற பெண்கள் மனதில் தயக்கம், பயம், ஏக்கம் எதுவுமின்றி இருக்க வேண்டும். வேலை காரணமாக நகரங்களுக்கு சென்று தனிக்குடித்தனம் செய்யும் பெண்கள் கருவுற்ற காலத்தில் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்வது நல்லது. அப்போதுதான் அப்பெண்ணின் மனதில் தனக்கு போதிய பாதுகாப்பு இருப்பது போன்ற உணர்வு ஏற்படும்.

மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்தான உணவும், தேவையான ஓய்வும் வேண்டும். ஆனால் நவீன உலகில் இதை ஒரு பொருட்டாக எண்ணாமல் தங்களின் பொருளாதாரத் தேவையை எண்ணியே அலைகின்றனர். இதனால் பெரும்பாலான பெண்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை பிறக்கச் செய்யும் நிலை ஏற்படுகிறது.
இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்க அவ்வப்போது சிறிது உடற்பயிற்சி, நடைப்பயிற்சி செய்ய வேண்டும். எப்போதும் மனதையும் உடலையும் சுறுசுறுப்புடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

# வீட்டுக் குறிப்புகள்

- இட்லி இறுக்கமாக இருந்தால் நாலு பச்சை அப்பளங்களை தண்ணீரில் நனைத்து மிக்ஸியில் அடித்து மாவில் கலந்து வார்த்துப்பாருங்கள். இட்லி பூ மாதிரி இருக்கும்.
- உருளைக்கிழங்கு பொரிக்கும் முன்பு சிறிதளவு பயத்தம் மாவை தூவுங்கள். பொரியல் மொறு மொறுப்பாக, சுவை அசத்தலாக இருக்கும்.
- அரிசி களைந்த இரண்டாவது கழு நீரை சமையலுக்குப் பயன்படுத்தலாம். இதில் விற்றமின் B6 மற்றும் B12 இருக்கிறது. இந்த நீரில் புளி ஊற வைக்கலாம், காய்கறி வேக விடலாம்.
- மிளகாய் வத்தலை வறுக்கும் முன்பு, அதனுடன் அரை தேக்கரண்டி சாதாரண உப்பைச் சேர்த்தால் மூக்கைத் துளைக்கும் வாசனை வராது.
- கடலை மாவுக்குப் பதிலாக ஒரு பங்கு பச்சரிசியும், ஒரு பங்கு பச்சை பருப்பும் கலந்து மிக்ஸியில் சன்னமாக அரைத்து உப்பு காரம் போட்டு பஜ்ஜி செய்யலாம்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 286**

கேள்வி : கருவுற்ற பெண்களின் மனதில் இருக்கக் கூடாதவை?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 286**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **26.09.2011**
சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 284 இற்கான விடை:- இங்லக் ஷினவத்ரா.**
**பரிசு பெறும் அதிஷ்டசாலி:- செ.கதிர்காமதேவன், 61, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.**

286

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
..............................
தே.அ. அட்டை இல : ..............................
விடை : ..............................
கையொப்பம் : ..............................



# இலங்கைக்குள் படையெடுக்கும் போர்க் கப்பல்கள்

**இந்தியாவை உளவு பார்த்ததாக கூறப்படும் சீன கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்ததாக தகவல்கள் வெளியாகி யிருந்தன. இதனையடுத்து அதனை கண்காணிப்பதற்காக இந்திய கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு அவசர பயணம் ஒன்றை மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகின. இது அவசரகாலச்சட்டத்தை நீக்கியமைக்காக பல நாடுகளின் வரவேற்பை பெற்ற இலங்கை, மீண்டும் சர்ச்சைக்குள் சிக்கி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் அழுத்தம் கொடுக்க விரும்புகின்ற இன்னொரு வடிவமாக இலங்கைக்கு வருகைதந்த போர்க்கப்பல்களின் வருகை யையும் கருதலாம்.**

**ஐக்கிய** நாடுகளின் 18 ஆவது மனித உரிமைகள் பேரவை யின் அமர்வு ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ளது. இந்த அமர்வு கடந்த அமர்வுகளைவிட இலங்கையினால் குறிப்பாக இலங்கை அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் அமர்வாக அமையும் என்று கருதப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை-களை மேற்குலக நாடுகள் கோரி வருகின்றன.

எனினும் அதனை ஏற்றுக் கொள்ளாத இலங்கை அரசாங்கம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து செயற்படுத்தி வருகி றது. அதன் மூலம் இலங்கை யில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போவதாக தொடர்ந்தும் அது கூறிவருகிறது. எனினும் அதன் நம்பகத்தன்மை குறித்து மேற்குலக நாடுகள் இன்னும் திருப்திகொள்ளவில்லை.

அதன் வெளிப்படைத்தன்மை தொடர்பில் இன்னும் மேற்குலக நாடுகளுக்கு திருப்தி ஏற்படவில்லை. இந்தநிலையில், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அமைக்கப்பட்டு செயற்பட்டு நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்படுகிறது.

சர்வதேச மன்னிப்பு சபை கடந்த வாரத்தில் இந்த நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளை கண்டித்துள்ளது. அது இலங்கை அரசாங்கத்துக்கு சார்பாக நடந்துகொள்வதாக சர்வதேச மன்னிப்பு சபை குற்றம் சுமத்தி யுள்ளது. அதேநேரம் மேற்குலக நாடுகள், ஜெனீவா மாநாட்டின் போது இலங்கைக்கு எதிரான நடவடிக்கைக்கு சர்வதேச மன்னிப்பு சபை தயாராவதாகவும் தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

எனினும் இலங்கை அரசாங்கமும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து வருகிறது. இறுதிப்போரில் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்றுகூறி வரும் இலங்கை அரசாங்கம், 'சனல் 4' காணொளி யில் காட்டப்பட்ட காட்சிகள் யாவும் போலியானவை என்றுகூறி, தாம் தயாரித்த காணொளிகளை ஐக்கிய நாடுகள் சபையில் காண்பித்துள்ளது.

இதற்கிடையில் அமெரிக்காவின் தெற்காசிய பிராந்தியத்தின் பிரதி ராஜாங்க செயலாளர் றொபட் ஓ பிளேக் இலங்கைக்கு வருகை தந்தார். இவரின் வருகை ஏனைய காலங்களை விட முக்கியமானதாக கருதப்படுகிறது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நுலண்ட், கடந்த வாரம் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது இலங்கையின் நல்லிணக்கக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை செல்லவுள்ள பிரதி இராஜாங்க செயலாளர் றொபட் ஓ பிளேக் ஆராய்வார் என்று தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயத்துக்கும் ஜெனீவாவில் இடம்பெறப்போகும் மனித உரிமைகள் பேரவைக்கூட டத்துக்கும் இடையில் தொடர்புகள் உள்ளதாகவே கருதப்படுகிறது.

அத்துடன் அமெரிக்கா சொல்லாமலேயே இலங்கை விடயத்தில் தலையிடும் போக்கை மேற்கொள்கிறதா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இந்தநிலையில் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக போர்க்குற்றம் தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டால் அதனை எதிர்த்து இலங்கையை காப்பாற்ற ரஷ்யாவும், சீனாவும் முன்வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

எனினும் முக்கியமாக எதிர்ப்பார்க்கப்படும் இந்தியாவின் நிலைப்பாடு இன்னும் புதிராக உள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னரை விட தமிழகத்தில் இலங்கை அர சாங்கத்துக்கு எதிராக கொள்கை தீவிரமாகியுள்ள நிலையில் கடந்த ஜெனீவா மாநாட்டை போன்று இந்தியா இலங்கைக்கு ஆதரவாக செயற்படுமா? என்பதை அவர்கள் கேள்வியாக எழுந்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் றொபட் ஓ பிளேக் இந்தியாவுக்கும் பயணம் செய்யவுள்ளார். இதன் போது அவர் அமெரிக்காவின் நிலைப்பாட்டை இந்தியாவுக்கு மிக தெளிவாக கூறுவார் என்று கருதப்படுகிறது.

முன்னரைக்காட்டிலும் அமெரிக்காவும் இந்தியாவும் தற்போது நட்புநாடுகளாக செயற்பட்டு வருகின்றன. அத்துடன் இந்தியாவின் முதன்மை எதிரி நாடான பாகிஸ்தானுக்கு எதிராகவும் அமெரிக்கா நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எனவே இந்தியா, ஜெனீவாவில் இலங்கைக்கு சார்பாக நடந்து கொள்ளுமா? அல்லது அமெரிக்கா வையும் தமிழகத்தையும் திருப்திக் கொள்ளும் வகையில் நடு-நிலை வகிக்குமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இந்திய நடுவன் காங்கிரஸ் அரசாங்கம் தற்போதே உள்நாட்டு அரசியலில் தளம்பல் நிலையில் உள்ளமையால் தமிழகத்தின் வாக்குகளுக்கு எதிரான செயற் பாட்டை மேற்கொள்ளுமா? என்பதும் கேள்வியாக எழுப்பப்பட வேண்டிய விடயமாகும்.

லிபியாவில் கடாபியின் ஆட்சியை கவிழ்த்தமை மற்றும் ஒசாமா பின் லேடனை கொன்றமை போன்ற விடயங்களை பொறுத்தவரை அவை அமெரிக்காவுக்கு சர்வதேச மட்டத்தில் சக்தியை ஏற்படுத்தும் செயல்களாக கருதப்படுகின்றன.

எனவே சீனாவும் கூட அமெரிக்காவை நேரெதிராக பகைத்துக்கொண்டு இலங்கைக்காக செயற்படும் என்று கருதமுடியாது. மறுபுறத்தில் வீழ்ந்துபோயுள்ள அமெரிக்க பொருளாதாரம் காரண-மாகவே சீனாவே அதிகமாக பாதிக்கப்படும் நாடாக உள்ளது.

இதற்கு காரணம், அமெரிக்கா வின் அதிக கடன்பத்திரங்களை சீனாவே கொள்வனவு செய்துள்ளமையாகும். எனவே இலங்கைக்காக தமது பொரு ளாதார நட்பு நாட்டை சீனா பகைத் துக்கொள்ளுமா? என்பதும் கேள்விக்குரிய விடயமாகும்.

எனவே அடுத்து வரும் வாரங்கள் இலங்கைக்கு சவாலான காலமாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு மத்தியில் சர்வதேச ஆதிக்கம் இலங்கையில் தலையெடுத்து விட்டதோ என்ற காரணமும் தற்போது பேசப்படு கிறது.

இந்தியாவை உளவு பார்த்ததாகக் கூறப்படும் சீன கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து அதனை கண்காணிப்பதற்காக இந்திய கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு அவசர

**அமலன்**

பயணம் ஒன்றை மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகின. இதனை தவிர அமெரிக்காவின் பாரிய படைப்பிரிவைக் கொண்டுள்ள துருக்கியில் தரித்து நிற்கும் நேட்டோவின் கப்பல் ஒன்றும் இலங்கைக்கு வந்தது.

எனவே இங்கு கப்பல்கள் வந்தன. சென்றன என்ற பேச்சுகளுக்கு அப்பால், தற்போதைய முக்கிய சூழ்நிலையில் இந்தக்கப்பல்களின் வருகைகளின் முக்கியத்துவம் என்ன என்பதே கேள்விக்குரியதாக உள்ளது.

காரணங்கள் பல கூறப்பட்டாலும் ஒரு நாட்டின் உண்மையான பாதுகாப்பு காரணங்கள் வெளிப்படை யாக தெரிவிக்கப்படுவதில்லை.

எனவே கப்பல்களின் பயணங் கள் கப்பல்களின் அதிகாரிகளுக்கும் இலங்கை உயர் அதிகாரிகளுக்கும் மாத்திரமே தெரியும். இதற்கிடையில் இலங்கையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு அதன் சரத்துக்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இது அவசரகாலச் சட்டத்தை நீக்கியமைக்காக பல நாடுகளின் வரவேற்பை பெற்ற இலங்கை. மீண்டும் சர்ச்சைக்குள் சிக்கிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை அழுத்தம் கொடுக்க விரும்புகின்ற சர்வதேசத்தின் இன்னொரு வடிவமாக இலங்கைக்கு வருகைதந்த போர்க்கப்பல்களின் வருகையையும் கருதலாம்.



# அகதி அந்தஸ்து பறிக்கப்படும் சம்பூர் மக்கள்! விரைவில் குடியேறுவார்களா?

-லோகேஸ்வர்-

**திருகோணமலை,** சம்பூர் பிரதேசத்திலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மூதூர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் மீளக்குடியமர மறுத்தால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகதி அந்தஸ்து பறிக்கப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் மொகான் விஜேவிக்கிரம கடந்தவார இறுதியில் எச்சரித்திருக்கிறார். மீள்குடியேறுவதற்கான அனைத்து வசதி வாய்ப்புக்களும் அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இருந்தும் மீள்குடியேறுவதற்கு அவர்கள் இணங்கவில்லையாயின் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

2006ஆம் ஆண்டு கிழக்கில் நடைபெற்ற யுத்தம் காரணமாக சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 900 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மூதூரில் அமைக்கப்பட்டுள்ள 3 தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பில் திருமலையில் நடைபெற்ற ஆராய்வுகள் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தின் திருமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு பின்னர் பொருளாதார மத்திய நிலையமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. அதனால் அங்கிருந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இருப்பினும் அப்பிரதேசமே தமக்கு வேண்டும் என அப்பிரதேசத்தில் வாழ்ந்து தற்போது நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சிக்கலினால் தொடர்ந்தும் பிரச்சினைகள் நடந்த வண்ணமேயுள்ளன. இந்த நிலையில் ஆளுனரின் இந்த அறிவித்தல் அம்மக்கள் மத்தியில் ஒரு கலக்கத்தையே ஏற்படுத்தியிருக்கிறது.

இறுதிக்கட்ட யுத்தம் கிழக்கில் ஆரம்பித்த வேளையில், மூதூர், சம்பூர் உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அமைக்கப் பட்ட முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்தனர். அதன்பின்னர் 2009 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் திருமலை மாவட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அமைக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், 2006 ஆம் ஆண்டு சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் 5 வருடங்களாகியும் மீளக்குடியேற முடியாமல் துன்பங்களை அனுபவிப்பதாக மூதூர் இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் கே.நாகேஸ்வரன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்திருந்தார். மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஆணைக்குழுவின் அமர்வில் இவர் சாட்சியமளித்திருந்தார்.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதி சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து கதிரவெளி, வாகரைக்கு ஊடாக மட்டக்களப்புக்குச் சென்ற நாங்கள் அங்கு போகும்போது கடுமையான துன்பங்களை எதிர்கொண்டோம். நாம் சென்ற வழியெங்கும் கடும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றன. வழியில் இறந்தவர்கள் சிலரை அங்கேயே புதைத்தோம். சில சடலங்களை புதைக்காமல் விட்டுவிட்டு சென்றோம்.

மட்டக்களப்பில் 18 முகாம்களில் குடியமர்த்தப்பட்டோம். 2009 டிசெம்பர் வரை அங்கிருந்தோம். பின்னர் மூதூருக்கு அழைத்துவரப் பட்டு, கிளிவெட்டி பட்டித்திடல் மணற்சேனை, கட்டைப்பறிச்சான் என ஆகிய நான்கு முகாம்களில் குடியமர்த்தப்பட்டோம். 5 வருடங்களுக்கு மேலாக கஷ்டமான துயரமான நிலையை தாங்கிக் கொண்டிருக்கிறோம். இத்துயரத்திற்கு முடிவொன்றை பெற்றுத்தர வேண்டும். எமக்கு பின்னர் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். எம்மை ஏன் குடியேற்றவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கிடையில், சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு விரைவில் வீடுகளை நிர்மாணித்து குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்த முன்னாள் மீள் குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் இவர்களுக்கு நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்கத் தீர்மானித்துள்ளேன். சம்பூரில் வீடுகளை நிர்மாணித்து வழங்க முடியாது போனால் அதற்கு அயலிலுள்ள பிரதேசமொன்றிலாவது அம் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

நலன்புரி நிலையத்துக்குச் செல்லும் அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் கடந்த கால யுத்தம் காரணமாக சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படும் போது நாங்கள் எங்களது இடங்களில் குடியமர முடியாதா என்பதே சம்பூர் மக்களது கேள்வியாக இருந்து வந்தது.

இதற்காக அவர்கள் முன்வைக்கும் கருத்தாக சம்பூரில் 45 இற்கு மேற்பட்ட குளங்கள், 4000 விவசாய நிலங்கள் உள்ளன. அவற்றை எம்மால் இழக்க முடியாது, அத்துடன் எங்களுடைய தொழில் நிலங்கள், எமது தொழில் என்பனவும் வேறு இடங்களுக்குச் செல்வதனால் பாதிக்கப்படும். எனவே எங்களுடைய பிரதேசத்திலேயே குடியமர ஏற்பாடு செய்யுங்கள் என்பதாக இருந்தது.

உணவு, இருப்பிடம், கலாசாரப் பிரச்சினை, மருத்துவச் சிக்கல்கள், சுகாதாரச் சிக்கல்கள் எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் சம்பூர் மக்களின் பிரச்சினைகள் விரைந்து தீர்த்து வைக்கப்பட வேண்டியவைகளே ஆகும். அதற்காக பாரதூரமான முடிவுகள் எடுக்கப்படுவது அம்மக்களின் வாழ்வாதாரத்தினை அடிப்படை மனோநிலையைப் பாதிப்பதாக அமையும்.

ஒரு தடவை கிளிவெட்டியில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்த மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் வி.முரளிதரன் (கருணா அம்மான்) அனல் மின்நிலையத்தின் கதிர் வீச்சுகள் குடியிருப்பதற்கு உகந்ததாக இருக்காது என்பதனால் விவசாயம் செய்வதற்கான

> **நலன்புரி நிலையத்துக்குச் செல்லும் அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் கடந்த கால யுத்தம் காரணமாக சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படும் போது நாங்கள் எங்களது இடங்களில் குடியமர முடியாதா என்பதே சம்பூர் மக்களது கேள்வியாக இருந்து வந்தது.**
> **உணவு, இருப்பிடம், கலாசாரப் பிரச்சினை, மருத்துவச் சிக்கல்கள், சுகாதாரச் சிக்கல்கள் எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வரும் சம்பூர் மக்களின் பிரச்சினைகள் விரைந்து தீர்த்து வைக்கப்பட வேண்டியவைகளே ஆகும். அதற்காக பாரதூரமான முடிவுகள் எடுக்கப்படுவது அம்மக்களின் வாழ்வாதாரத்தினை அடிப்படை மனோநிலையைப் பாதிப்பதாக அமையும்.**

ஏற்படுகளுடன் வேறு இடங்களில் குடியிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருவதாக தெரிவித்திருந்தார். இவ்வாறான ஏற்பாடுகள் கூடப் பரவாயில்லை என்றிருந்த நிலையில் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மக்களைக் கலக்கத்துக்குள் தள்ளியிருக்கிறது.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அங்கு மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல் ஆகிய இடங்களில் குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சம்பூர் பிரதேச கிராமங்களை விட்டு வெளியேறிய மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமையால் சம்பூரில் இயங்கிய பல அரச அலுவலகங்களும் பிறஇடங்களில் இயங்குகின்றன. சில அரச அலுவலகங்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. சில அரச அலுவலகங்கள் மூடப்படும் நிலைக்குள்ளாகியிருந்தன.

சம்பூர் கமநல சேவைகள் நிலையம் அயற்கிராமமான கட்டைப்பறிச்சான் கிராமத்திலும், சம்பூர் பிரதேசத்திற்கான விவசாயிகள் முன்மாதிரி செய்கை நிலையம் கட்டைப்பறிச்சான் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திலும் இயங்கிவருவதாக அறியமுடிகிறது. அதேபோன்று பாடசாலைகள் ஏனைய சுகாதார நிலையங்கள் கூட வேறு இடங்களில் இயங்கிவருவதாக அறியமுடிகிறது.

இதற்கிடையில் சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் அவர்களின் சொந்தக் கிராமங்களில் சொந்த வீடுகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். மக்களின் பூர்வீகக்காணிகளில் அனல்மின்நிலையம் நிர்மாணிக்கக் கூடாது என்று திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கடந்த மாதம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதருடனான சந்திப்பின்போது தாம் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் சம்பூர் மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களிலிருந்து யுத்த காலத்தில் வெளியேற்றப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 1,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அனைத்தும் பூர்வீகக் காணிகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான உடன்படிக்கை இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே இந்த மாத ஆரம்பத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் சம்பந்தன் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் சொந்த கிராமங்களிலுள்ள சொந்த வீடுகளில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். தரிசாக கிடக்கும் நிலத்தை அனல் மின் நிலையம் நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தலாம். மக்களின் பூர்வீக காணிகளை அனல் மின் நிலையம் நிர்மாணிக்க பயன்படுத்த கூடாது என்பது அவரது கருத்தாக இருந்தது.

எது எவ்வாறாக இருந்தாலும் நாட்டின் அபிவிருத்தி பொருளாதார மேம்பாடு கருதி அரசாங்கத்தால் எடுக்கப்படும் முடிவுகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டின் நலன் பேணப்படுவதுடன் மக்களும் மேம்பாடு அடைவார்கள் என்பது பொருளாதார வல்லுனர்களது கருத்தாகும்.

30 வருடங்களுக்கும் மேலாக எமது நாட்டில் நடைபெற்ற யுத்தம் பொருளாதார, கல்வி, சுகாதார மற்றும் மனித மேம்பாட்டுத் துறைகளிலும் பல்வேறு பாதிப்புகளையும் இழப்புகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதனை ஈடு செய்து நாட்டை முன்னேற்றமான அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்காக மக்கள் முதல் முதல் அதிகாரிகள், அமைச்சர்கள், அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இதனைப் புரிந்துகொள்வதன் மூலமும் வாழ்க்கை, வாழ்நாட் காலம் இழப்புகள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய கணக்கினையும் சரிபார்த்து முடிவுகளுக்காக நம்மைத் தயார்ப் படுத்தி அனுசரித்துக் கொள்ளவும் வேண்டும். இல்லையானால் இறுதியில் எதுவுமே மிச்சமில்லை என்ற நிலை உருவாகிவிடும்.

அந்தவகையில் கிழக்கிலுள்ள அகதிகளுக்கு முடிவுகட்டத் திட்டமிட்ட ஆளுனர் சரியான முடிவை எடுத்திருக்கிறாரா, மக்கள் இதனை எவ்வாறு ஏற்கப் போகிறார்கள் என்பதனையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# அவலம் சுமந்த அகதிகள்

அவலம் 47



அத்திமுகத்தோன்

**ஒரு தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் இழப்புக்கள், இடம்பெயர்வுகள், அவலங்கள் போன்றன தவிர்க்க முடியாததாக இருப்பினும் தமிழீழத்துக்கான விடுதலைப் போராட்டத்தின் இலக்கு கடைசி நேரத்தில் திசைமாறிப் போனதன் நிமித்தம் அது மக்களின் ஆதரவை இழந்ததோடு, ஒட்டுமொத்த அவலத்தின் வெளிப்பாடுகளையும் தோற்றுவித்துவிட்டிருப்பதை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. தற்பொழுது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதான அவலங்கள்... சொத்தழிவுகள்... இடம்பெயர்வுகள்... உயிரழிவுகள்.. என்பன மதிநுட்பமற்ற... தூரநோக்குப் பார்வையற்ற... அறிவுபூர்வமாக சிந்தியது ஆயுதத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற குறு-கிய மனப்பாங்கோடு சிந்தித்ததன் விளைவே இன்றைய அவலத்துக்குக் காரணம்.**

"குசினிக்குள்ளை ரொட்டியைச் சுட்டு வைச்சிட்டு அக்கா வெளியால பிள்ளைக்குக் குளிக்க வார்த்துக்கொண்டிருக்க, ஆரோ கள்ளர் வந்து ரொட்டியையும் சீனி தேயிலைப் போத்திலையும் களவெடுத்துக்கொண்டு போட்டினம்..."

சின்னத்தங்கையின் வாயில் இருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு, முதலில் திகைத்துப்போனாலும், பிறகு சிரிப்புத்தான் வந்தது அவர்களுக்கு. அதிலும் மாமா சற்று வாய்விட்டே சிரித்துக்கொண்டாலும், மருமக்கள் பட்டினியாய் இருக்கினமே... என்ற கவலை அவருள் எழுந்துகொண்டது.

"சரி சாப்பாட்டுச் சாமான்தானே, நேற்று முழுக்க சாப்பாட்டுக்கு வழியில்லாமல் இருந்திருக்கும். மானம், மரியாதை போனாலும் பரவாயில்லையெண்டு ஆரோ துணிஞ்சு காரியத்தில இறங்கியிருக்கிறான். அவன் கூறியதைக் கேட்டு சகலன் சிரித்தான்.

"சனம் சாதி ஷெல்லுக்கை அம்பிட்டுச் சாகிறதைவிட சாப்பாட்டுக்கு வழியில்லாமல் சாகப்போகுதுகள்." மாமா கூறிக்கொள்கிறார்.

"கொக்கா சாப்பிட்டவளே பிள்ளை...?" அவன் கேட்டான்.

"இல்லை அத்தான். பிள்ளைக்குக் குளிக்கவாத்திட்டு சாப்பிடுவம் எண்டு இருந்தவவாம். அதுக்கிடையில இப்பிடி நடந்திட்டுது. பிறகு கடையில பிஸ்கட் வாங்கி தனக்கும் வைச்சிட்டு உங்களுக்கும் தந்துவிட்டவா..."

சின்னத்தங்கை கூறிக்கொண்டே, தான் கொண்டு வந்த பையொன்றிலிருந்து மலிபன் பிஸ்கட்டுக்களையும் தேநீர்ப் போத்தலையும் எடுத்து வெளியில் வைத்துவிட்டு, தேநீர்க் கோப்பைகளில் தேநீரை வார்த்துக்கொடுத்தாள். சகோதரர்கள் இருவரும் பிஸ்கட்டுக்களை எடுத்துக்கொண்டார்கள். மாமாவுக்கு சில பிஸ்கட்டுக்களை அவன் கொடுக்க முனைந்தபோது, அவர் வேண்டாமென மறுத்துவிட்டார்.

"பசிக்கிற வயித்துக்கு உது என்னத்தைக்காணப் போகுது...? நிலைமை போற போக்கைப் பார்த்தால், இனி மனிசரை வெட்டித்தின்னுற நிலை வரப்போகுது..." மாமா வி[illegible]தியாகக் கூறிக்கொள்கிறார்.

"உதுதானே இப்ப நடக்குது..." பதிலுக்கு இளைய சகலன் கூறிக்கொண்டான். நேரம் பத்துமணிக்கு மேலாகி விட்டிருந்தது. சின்னத்தங்கை பிஸ்கட்டையும் தேநீரையும் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள். சகலன் திரும்பவும் வலைகளுக்கு மேல் அமர்ந்தபடி கண்ணயர்ந்து கொண்டிருந்தான். வேப்பமரத்தின் கீழ் கிடுகுகளால் வேயப்பட்டு, கிடுகுத் தட்டிகளால் சுற்றிவர அடைக்கப்பட்ட நிலையில் நிலத்திற்கு சீமெந்து தரை போடாமல் வெறும் குருகு மணலாகவே இருந்ததினால் குசினிக்குள் இருப்பதற்கு சுகமாக இருந்தது.

பிஸ்டல்காரன் விட்டுத் துரத்தியதால் ஓடிய களைப்பும், வெயிலுக்குள்ளால நடந்து வந்ததிலும் உடல் அசதி கொண்ட நிலையில் இளைய சகலன் நித்திரை கொள்வது அவனுக்குப் புரிந்தது. அவனுக்கும் குடிசையை விட்டு வெளியே செல்ல மனமில்லாதிருந்தது. தெருவினிலே ஒரு பெண் குளறியபடி கப்பல் றோட்டில் கடற்கரைப் பக்கம் செல்வது தெரிந்தது.

அந்தப் பெண்ணுக்கு என்ன அவலம் நேர்த்திருக்குமோ... என்று அவன் யோசித்துக்கொண்டிருக்கையில், மாமா படுத்திருந்த நிலையில் கேட்டார்.

"என்ன ஆரோ குளறிக்கொண்டு போகுமாப் போலக் கிடக்குது...?"

"ஓம் மாமா... என்ன பிரச்சினையெண்டு தெரியேல்லை..." அவன் கூறினான்.

மாமா எதுவும் கூறவில்லை. மௌனமாகப் படுத்திருந்திருந்தார். மாமாவின் உடல் நிலையை நினைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது. எண்பது வயது கடந்த நிலையில், அவருக்கும் இப்படியொரு அவலம் ஏற்பட வேண்டியதாகிய சூழ்நிலையையிட்டு அவன் தனக்குள் வருத்தப்பட்டுக்கொண்டான். மாமாவைப் போன்று இன்னும் எத்தனை எத்தனை வயோதிப உள்ளங்கள் இந்தக் கடற்கரை வெயிலில்... தரப்பாள் வெக்கைக்குள் கிடந்து அவதிப்படுகிறார்களோ யார் கண்டது...? படுக்கையில் இருந்து எழும்பி நடமாடுவதற்கும் இயற்கை உபாதைகளைத் தணிப்பதற்கும் இயலாதவர்களாக தங்கள் மன உணர்வுகளை வெளியே சொல்லமுடியாதவர்களாகத் தமக்குள்ளே மனம் புழுங்கி அவதிப்படுவதை போராட்டத்தின்பால் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

ஒரு தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தில் இழப்புக்கள், இடம்பெயர்வுகள், அவலங்கள் போன்றன தவிர்க்க முடியாததாக இருப்பினும் தமிழீழத்துக்கான விடுதலைப் போராட்டத்தின் இலக்கு கடைசி நேரத்தில் திசைமாறிப் போனதன் நிமித்தம் அது மக்களின் ஆதரவை இழந்ததோடு, ஒட்டுமொத்த அவலத்தின் வெளிப்பாடுகளையும் தோற்றுவித்துவிட்டிருப்பதை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. தற்பொழுது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறதான அவலங்கள்.. சொத்தழிவுகள்... இடம்பெயர்வுள்.. உயிரழிவுகள்.. என்பன மதிநுட்பமற்ற... தூரநோக்குப் பார்வையற்ற.. அறிவுபூர்வமாக சிந்தியது, ஆயுதத்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற குறுகிய மனப்பாங்கோடு சிந்தித்ததன் விளைவே இன்றைய அவலத்துக்குக் காரணம் என்பதை அவனால் விளக்கிக்கொள்ளமுடிந்தது.

இராணுவமே நிலத்தைப் பிடிக்கின்ற பேரவாவிலும், இயக்கமோ எஞ்சியுள்ள மக்களைக்கொண்டு இராணுவத்தை விரட்டியடிக்கும் செயற்பாடுகளிலும் அதிவேகம் காட்டியதால் பொதுமக்களிடத்தில் இருபகுதி மீதான வெறுப்பும் விரக்தியும் மேலோங்கிக் கொண்டிருந்தன.

புலிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு இராணுவம் மேற்கொள்ளும் ஷெல் வீச்சுக்களினாலும், முடக்கப்பட்ட வாழ்க்கையோடு போராட முடியா-மல், இராணுவத்திடம் சரணடை-யச் சென்ற பொதுமக்களைப் புலிகள் சுட்டுக்கொல்வதாலும், மக்களின் உயிரிழப்பு வீதம் அதிகரித்துக் கொண்டிருந்தன. இந்த அராஜகத்தனத்தின் நிமித்தம் ஏற்படும் இழப்புக்களை போராட்டத்தின் பால் ஏற்படும் இழப்புக்கள் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"அண்ணை சங்கக்கடைக்குப் போவமே..?" இளைய சகலனின் குரலில் அவனது சிந்தனை கலைந்தது. அவன் திரும்பிப் பார்த்தான்.

தூங்கி வழிந்த நிலையில் இளைய சகலன், பெரிதாக ஒரு கொட்டாவி விட்டபடி... வலைக்கம்பிகளிலிருந்து எழுந்துகொண்டான்.

"நீர் வர வேண்டாம். நான் மட்டும் போட்டு வாறன்." அவன் கூறினான்.

"ஏன் அண்ணை...?"

"இப்ப இரண்டு பேரும் ஒரே இடத்தில நிற்கிறது எனக்கு அவ்வளது நல்லதாகப் படுகுதில்லை. அடிவாங்கின பிஸ்டல்காரன் இனிச் சும்மாயிருக்கமாட்டான். அவனோடை சேர்ந்து ஒரு பட்டாளமே எங்கள் இரண்டு பேரையும் பிடிக்கிறதுக்குத் திரியும். உனக்கொண்டு நடந்தால் நான் தப்பித்துக்கொள்ளலாம். அல்லது சங்கக்கடையில நான் மட்டும் நிண்டால் நீர்வீட்டில தப்பித்துக்கொள்ளலாம்..." இப்ப நாங்கள் இருக்கிற சூழ்நிலையில ஞானமாச் சிந்தித்து நடக்கிறதுதான் நல்லது..."

இளைய சகலனுக்கு அவன் கூறியது சரியெனவாகப்பட்டது. சகலன் எதுவும் கூறவில்லை.

"சரியண்ணை... கவனமாப் போயிட்டு வாங்கோ. நானும் வீட்டை போறன்..." கூறிக்கொண்டே சகலன் எழுந்துகொண்டான்.

"மாமாக்குச் சொல்லிப்போட்டுப் போவம். பிறகு காணேல்லையெண்டதும் குழம்பிவிடுவார்..." அவன் கூறினான்.

"மாமா... மாமா..." இளைய சகலன் மாமாவை அழைத்தான்.

மாமாவிடமிருந்து எந்தவிதமான பதிலும் எழவில்லை. அவர் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதை அவதானித்த இருவரும் குடிசையை விட்டு வெளியே வந்தார்கள். சாலையோரப் படலையைத் திறந்து நிலைமையை அவதானித்தார்கள்.

'பிக்கப்' வாகன நடமாட்டம் எதுவும் தென்படவில்லை. மக்கள் அன்றாட வாழ்வுக்கான செயற்பாடுகளில் இயங்கிக்கொண்டிருந்தார்கள்.

"சரியண்ணை நீங்கள் போட்டு வாங்கோ. நான் போட்டு வாறன்..." இளைய சகலன் கூறிவிட்டு கப்பல் றோட்டில் கடற்கரைப் பக்கமாக நடக்கத் தொடங்க, அவன் சங்கக்கடையை நோக்கிச் சென்றான்.

சங்கக்கடை வாசலில் மக்கள் நிறையக் குழுமியிருந்தனர். சங்கக்கடை முகாமையாளர், கிராமசேவகர் மக்களுக்குக் கொடுத்த துண்டினை வாங்கி தனது பதிவேட்டில் விபரங்களைப் பதிந்துவிட்டு வேறு ஒரு சிறுதுண்டில் அங்கத்தவர் தொகை, தொகைக்குரிய உணவுப்பொருட்களின் அளவுகளைச் சிட்டையில் பதிந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

அவனுக்குக் கடைக்கு முன்பாக குழுமியிருக்கும் மக்களின் எண்ணிக்கையைப் பார்த்ததும் யோசனையாக இருந்தது. முகாமையாளரிடம் பதிவதற்கு ஒரு வரிசையும், அவரிடம் பதிந்தபின் பொருட்களைப் பெறுவதற்கு இன்னொரு வரிசையுமாக மகள் நின்றிருந்தார்கள். கடைவாசலின் முன்பாக 'ப' வடிவத்தில் உணவு மூட்டைகள் மக்களின் பாதுகாப்புக்காக அடுக்கப்பட்டிருந்தன. சங்கக்கடை வாசலின் முன்பு இலந்தை மரம் ஒன்றைத் தவிர வேறு மர நிழல்கள் எதுவுமில்லாத நிலை யில், மக்கள் வெயிலில் வாடிவதங்கி, தண்ணீர்த்தாகத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்..

அவனும் வேறு வழியின்றி ஒரு-வரிசையில் இணைந்து 'கொண்டான். வரிசையில் மக்கள் மெல்ல மெல்ல் நகர்ந்து கொண்டிருந்தது. பகல்பொழுது உச்சியையும் தாண்டி, இறங்கிச் செல்ல ஆரம்பித்துக்கொண்டது. பிற்பகல் 3.30 மணியைத் தாண்டிய நிலையில்தான் அவன் பொது முகாமையாளரின் மேசைக்கு அருகில் செல்ல முடிந்தது. சூரிய வெப்பம் மெல்லக் குறைந்து கொண்டிருந்த அவ்வேளையில், நிவாரணச் சாமான்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றை தோளில் வைத்தடி... பார்வையை நன்கு கூர்மையாக்கிய நிலையில் அவதானமாக நடந்துகொண்டிருந்த அவன் மாமா, தங்கியிருந்த வீட்டை அடைந்தான்.

"இப்புதானே சங்கக்கடையால வாறியள்...?" அவனைக் கண்டதும் மாமா கேட்டார்.

"ஓம் மாமா.. சரியா சனம்.. அதுதான் பிந்திப் போச்சுது..."

"உந்தச் சாமான்கள் எத்தனை நாளைக்குக் காணப்போகுது...?"

மாமாவின் குரலில் விரக்தியும் வேதனையும் தென்பட்டது. அவன் அவரது கட்டிலின் தலைமாட்டில் இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து இரண்டு மிடறு நீரைக் குடித்துவிட்டு, போத்தலை திரும்பவும் அதேயிடத்தில் வைத்துவிட்டு, கடற்கரைப் பக்கம் உள்ள தனது இளைய சகல-னது வீட்டை நோக்கிப் புறப்பட ஆயத்தமானான்.

"நான் போட்டு வாறன் மாமா..."

அவன்...மீண்டும் உணவுப் பொதியைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு சாலையோரப் படலையைத் திறந்து கப்பல் றோட்டில் ஏறி நடக்கத் தொடங்கினான். அன்று மாலை ஒரு பாரிய அனர்த்தம் நடக்கப்போவதை அறியாமல்.

**(அவலம் தொடரும்...)**



சம்பாதிக்க வேண்டியவை கல்வி, செல்வம், புண்ணியம்.

ஆதிசங்கரர்

## வாரம் ஒரு திருக்குறள்




**வாய்மை**

**"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்"**

புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரினால் ஏற்படும். அதுபோல், அகத்தே தூய்மையாக விளங்குதல் வாய்மையால் உண்டாகும்.

குறள்:297

## அமில மழையால் உண்டாகும் ஆபத்து



பெற்றோலிய எரிபொருட்களை எரிப்பதாலும், தொழிற்சாலைக் கழிவுகளின் மூலமாகவும் சல்பர்டை-ஒக்சைட் வாயுவும், நைட்ரஜன் ஒக்சைட்களும் காற்றில் பெருமளவில் கலந்துவிடுகின்றன. இந்த வாயுக்களை மழை நீர் கரைத்து வருவதால் சல்பியூரிக் அமிலமும், நைட்ரிக் அமிலமும் மழைநீரின் அமிலத்தன்மையை அதிகரிக்கின்றன. இந்த மழையின் பி.எச். மதிப்பு 5.6க்கும் குறைவாக இருப்பதால் அது அமிலத்தன்மையுடன் காணப்படுகிறது. இப்படி பெய்யும் மழைக்கு 'அமில மழை' என்று பெயர். சுற்றுச்சூழல் மாசுபடுவதுதான் அமில மழை பொழிய முக்கிய காரணமாக உள்ளது.

அமில மழை, இந்தியாவில் மட்டுமல்ல. வெளிநாடு-களையும் விட்டுவைக்க வில்லை. சுவீடனில் காட்டு மரங்களின் வளர்ச்சியைப் பாதித்து வருகிறது. அமெரிக்காவில் நூற்றுக் கணக்கான ஏரிகளில் மீன் வளர்க்க முடியாத அளவிற்கு அமிலத்தன்மையை ஏற்படுத்தி உள்ளது.

## 'ஓ.கே' வந்தது எப்படி?



நாம் செல்போனில் பேசும்போதும் சரி, நேரில் பேசும்போதும் சரி, அலுவலகங்களில் அதிகாரிகளிடம் பேசும் போதும் சரி, பணியாளர்களிடம் பேசும் போதும், தினமும் எப்படியாவது நிறையப் பேர் 'ஓ.கே' என்று சொல்வதை பார்த்திருப்போம். ஆண்ட்ரு ஜாக்சன் என்ற அமெரிக்கர்தான் இந்த 'ஓ.கே'க்குச் சொந்தக்காரன். இவர் 1828இல் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிட்டார். கல்வி அறிவு இல்லாத இவர் மக்களிடம் எனக்கு வாக்குப் போடுங்கள். 'ஓ.கே.,ஓ.கே.' என்று இவரே சொல்லி, அடுத்த இடத்திற்கு வாக்கு சேகரிக்கச் செல்வாராம். இப்படித்தான் ஓ.கே. அறிமுகமானது. என்ன 'ஓ.கே.'வா குட்டீஸ்?


## ஆசிய பழுப்பு மேகம்



கோடிக்கணக்கான மோட்டார் வாகனங்களும், இலட்சக்கணக்கான தொழிற்சாலைகளும் வெளிவிடும் நச்சு வாயுக்கள் வான்வெளியை நிரப்பி வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். எரிபொருட்களின் கழிவுகளான இந்த வாயுக்கள் ஆசியப் பகுதிகளின் வான்வெளியில் பெரும் மேகத்திரளாகச் சூழ்ந்திருப்பதாக ஐ.நா.வின் சுற்றுச்சூழல் திட்டம் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியா உட்பட இலங்கை வரை ஏறத்தாழ ஒரு கோடி சதுர கிலோமீற்றர்கள் வரை பரவி இருக்கும் இந்த வாயுக்களையே 'ஆசிய பழுப்பு மேகம்' என்று பெயர் வைத்துள்ளனர். மேலும் இந்த ஆபத்தான மேகம், சூரியஒளியை 15 சதவீதமும், மழையின் அளவை 40 சதவீதம் வரையும் குறைத்துவிடுமாம்.

## வாரம் ஒரு நாடு





## ஈராக்

**தலைநகர்:** பக்தாத்
**பரப்பளவு:** 4 இலட்சத்து 38 ஆயிரத்து 317 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை:** 3 கோடியே 12 இலட்சத்து 34 ஆயிரம்.
**மொழி:** அராபிக், குர்திஷ்
**நாணயம்:** ஈராக்கிய தினார்
**மதம்:** இஸ்லாம்
**எழுத்தறிவு:** 40.4 சதவீதம்
**அமைவிடம்:** மேற்கு ஆசியாவில் உள்ள நாடு. மேற்கில் ஜோர்டானும், வடமேற்கில் சிரியாவும், வடக்கில் துருக்கியும், கிழக்கில் ஈரானும், தெற்கில் குவைத்தும் சவுதி அரேபியாவும் அமைந்துள்ளன. ஈராக்கில் யூப்ரடீஸ், டைகிரிஸ் நதிகள் பாய்கின்றன.
**விளைபொருட்கள்:** கோதுமை, அரிசி, பேரீச்சை, பருத்தி, கரும்பு.
**தொழில்:** பெற்றோலிய உற்பத்தியில் 5ஆவது இடம் வகிக்கும் நாடு, இரசாயனம், துணி உற்பத்தி, சீமெந்து சுத்திகரிப்பு ஆலைகள், கால்நடைகள் பராமரிப்பு.

## பாப்பா முரசு சிறுகதை



# பலமறிந்து செயற்படு!

காட்டு வழியாக ஒரு பூனை சென்று கொண்டிருந்தது. அவ்வழியில் இருந்த புதர் ஒன்றில் இருந்து ஏதோ சப்தம் வந்தது. அதைக் கேட்டு, பூனை புதருக்குள் கூர்ந்து பார்த்தது. புலி ஒன்று பெரிய மானை வேட்டையாடி, அதன் மாமிசத்தை ருசித்துக் கொண்டிருந்தது.

பூனை பயத்துடன் மெதுவாக புலியின் அருகில் சென்றது. பிறகு சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "புலி நண்பா, எனக்கும் இதில் கொஞ்சம் சாப்பிடத் தருவாயா?" என்று பவ்யமாகக் கேட்டது.

முதலில் உறுமிய புலி, பின்னர், தன்னைப் போன்ற தோற்றத்துடன் இருந்த பூனையின் மேல் பரிதாபப்பட்டது. அதனால், "சரி, சாப்பிடு" என்றது, புலி.

பூனை ஓரமாக அமர்ந்து, மான் இறைச்சியை சுவைத்தது.

சிறிது நேரத்தில் புலிக்கு பசி அடங்கியது. சிறிது நேரம் இளைப்பாறியது. அப்போது, பூனை புலியிடம், "நண்பா, எனக்கும் இதுபோல் வேட்டையாடக் கற்றுக் கொடுப்பாயா?" என்று கேட்டது.

இதைக் கேட்ட புலிக்கு சிரிப்பு வந்தது. பூனையின் இந்த பேராசையை நினைத்து, அதற்கு இதுபற்றி சற்று விளக்கமாக பதில் சொல்ல நினைத்தது. அதனால், "பூனையே நீங்கள் எங்களைப் போலவே இருப்பது உண்மைதான். ஆனால், எங்கள் அளவிற்கு நீங்கள் பலசாலி கள் இல்லை. உன்னால், எலி போன்ற சிறிய உயிரினங்களைத் தான் கொன்று சாப்பிட முடியும். அந்த அளவுதான் உன் இனத்திற்கு பலம் இருக்கிறது" என்று புலி விளக்கமாக எடுத்துச் சொல்லியது.

"அப்படி சொல்லாதீர்கள், புலி நண்பரே, என்மேல் இரக்கம் காட்டுங்கள். நீங்கள் பெரிய விலங்குகளை எப்படி வேட்டையாடுகிறீர்கள் என்று மட்டும் எனக்குக் கற்றுத் தாருங்கள். அந்த உத்தியைப் பயன்படுத்தி பெரிய மான் சிக்காவிட்டாலும், சிறிய மான்குட்டிகளையாவது நான் பிடித்து விடுவேன். இல்லையா?" என்று பூனை, புலியிடம் விடாமல் கேட்டு நச்சரித்தது.

"சரி, எப்படி சொன்னாலும், புரிந்து கொள்ளமாட்டாய் நீ. பட்டால் தான் உனக்குப் புத்தி வரும்" என்று மனதில் நினைத்துக் கொண்டு, புலி பூனைக்கு வேட்டையாடும் விதத்தைக் கற்றுக் கொடுத்தது.

"நன்றி, நண்பரே. நான் இப்போதே வேட்டைக்குச் செல்கிறேன்" என்று ஒரே தாவலில் பாய்ந்து சென்ற பூனை, மான் கூட்டத்தை நோக்கி வேகமாகச் சென்றது.


புதர் மறைவில் பதுங்கி, ஒரு மான்குட்டியைக் குறி வைத்தது. சரியான நேரத்தில், அதன்மேல் பாய்ந்தது, பூனை. இந்த திடீர் தாக்குதலை எதிர்பாராத அந்த சிறிய மான்குட்டி, பயந்து போய் அபயக்குரல் எழுப்பியது.

உடன் வந்த தாய்மானும், பிற பெரிய மான்களும் குட்டிக்கு ஏதோ ஆபத்து நேர்ந்து விட்டது என்று திரும்பிப் பார்த்தன. அங்கே பூனை ஒன்று மான்குட்டியைக் கவ்வி இழுத்துச் செல்வதைக் கவனித்துவிட்டன.

"இந்த சாதாரண பூனை, நம் குட்டியை கடிக்கிறதா?" என்று மான்கூட்டம் முழுவதும் ஆக்ரோஷத்துடன் பூனை மேல் பாய்ந்தன. கொம்புகளால், பூனையைக் குத்தி காயப்படுத்தின. எதிர்பாராத இந்த தாக்குதலால் பூனை நிலைகுலைந்தது. மான்குட்டி பூனையின் பிடியில் இருந்து விடுபட்டது. உடல் முழுவதும் பலத்த காயமடைந்த பூனை சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தது.

அப்போது அந்த வழியாக புலி வந்தது. பூனையின் முனகல் சத்தம் கேட்டு அதன் அருகில் சென்றது. நிலைமையை விசாரித்தது.

"பூனையே நம்மிடம் இயற்கையாக இருக்கும் பலம் எவ்வளவு என்று தெரிந்துகொள்ள வேண்டும். அதன்பிறகு தான் எந்த ஒரு காரியத்திலும் இறங்க வேண்டும். நான் அவ்வளவு சொல்லியும் கேட்க மறுத்தாய். இப்போது உன் நிலைமையை பார்த்தாயா?" என்று சொன்ன புலி, பூனைக்காகப் பரிதாபப்பட்டு, அதற்கு மருந்து போட்டது.



## வேறுபட்ட வாத்து எது?

கீழ்க்கண்ட வாத்துக்களில் ஒன்று மட்டும் மற்றவற்றில் இருந்து வேறுபட்டுள்ளது. அது எது என்று சரியாக கண்டுபிடியுங்கள்.

## விசிறினால் குளிர்ச்சியாக இருப்பது ஏன்?

வெயில் காலத்தில் அதிகமாக வியர்த்துக் கொட்டும். அப்போது மின்விசிறி சுவிட்சை அழுத்துவோம். காற்றுப் பட்டவுன் குளிர்ச்சியாக இருக்கும். ஏன் தெரியுமா, குட்டீஸ்?

வெயிலில் அலைந்துவிட்டு வியர்வையோடு நாம் வீட்டுக்கு வந்து இருப்போம். அப்போது நம் முகத்தைச் சுற்றிலும் உள்ள காற்று சூடாகும். அந்த காற்றுத் தான் நம் முகத்தைச் சூடாக்குது. அப்போது, நம் முகம் அதன் வெப்பத்தை வெளியிட முடியாமல் தவிக்கும்.

அதனால் முகத்தைச் சுற்றியுள்ள வெப்பமான காற்றை நாம் வேக வேகமாக விசிறியை வைத்து விசிறித் தள்ளுகிறோம். அப்போது இந்தப் புதிய காற்று நம் முகத்தில் மோதி, வெப்பக்காற்றை விரட்டுகிறது. அந்த நேரத்தில்தான் வெப்பத்தை வெளிவிடுகிறது. இதனால் நமது முகத்தின் வெப்பநிலை குறைந்து, நமக்கு குளிர்ச்சியாக இருக்கிறது.


## நோபல் பரிசு



உலக அமைதி, சேவை இரண்டிலும் ஆர்வம் காட்டுபவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படும் இந்தப் பரிசை இதுவரை அதிகமாக பெற்ற சமூக சேவை அமைப்பு சர்வதேச செஞ்சிலுவை சங்கம். இதற்கு 1917, 1944, 1963 ஆகிய ஆண்டுகளில் அதன் சேவையைப் பாராட்டி நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. நோபல் பரிசை மூன்று முறை பெற்ற ஒரே அமைப்பு இதுதான்.



சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.09.2011

**வர்ணம் தீட்டும் போட்டி இல.907**

தினமுரசு வாரமலர்

த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 905

**பரிசுக்குரியவர்:** ம.அபிஷன், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. க.மிதுலன், தோணிக்கல், வவுனியா.
02. எஸ்.சரவணன், கடற்கரைவீதி, திருகோணமலை.
03. கு.வைஸ்ணவி, வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.
04. கே.மருதா, ஆரையம்பதி, மட்டக்களப்பு.
05. கு.ராகேஸ், நெல்சீன் பிளேஸ், கொழும்பு-06.
07. ப.பிருந்தா, தம்பலகாமம், திருகோணமலை.
08. எஸ்.ரமணி, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு.
09. எம்.எச்.பஸ்னா, புத்தளம்.

# தவிர்க்க கூடாத பத்து உணவுகள்



**எமது** உடல் பாதுகாப்பாக இயங்கப் பத்து நல்ல உணவுகள் உள்ளன. காற்று, நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றைப் படுசுத்தமான மனிதர் கூடத் தடுக்க முடியாது. நாம் சாப்பிடும் முக்கியமான உணவு வகைகள், நம் உடலில் சேரும் இத்தகைய நோய் நுண்மங்களை எளிதில் தடுத்து அழித்துவிடும். நோய் பரவுவதைத் தடுக்கும் அந்தப் பத்து உணவுகள்.

**வெள்ளைப் பூண்டு:**

பண்டைய எகிப்திலும் பாபிலோனியாவிலும் அற்புதங்களை விளைவித்துக் குணமாக்கிய மண்ணடித் தாவரம் இது. கிரேக்கத் தடகள வீரர்கள் விரைந்து ஓட ஊக்கம் தரும் மருந்தாக வெள்ளைப் பூண்டை கைகளில் அழுத்தித் தடவிக் கைகளைக் கழுவினார்கள்.

இதனால் நோய் நுண்மங்கள் அழிந்தன. குடலில் உள்ள புழுக்களிலிருந்து மற்றும் தலைவலி முதல் புற்றுநோய் வரை பல நோய்களையும் குணமாக்க வெள்ளைப் பூண்டு பயன்படுத்தப்படுகிறது. அறிவியல் முடிவுகளால் கூட வெள்ளைப் பூண்டு பயன்படுத்தப்படுகிறது.

உடலில் நன்மை செய்யக்கூடிய கொலாஸ்டிரல் உருவாக பூண்டின் பங்கு மகத்தானது.

**வெங்காயம்:**

வெள்ளைப் பூண்டுடன் சேர்ந்து வல்லமை மிக்க, புகழ்மிக்க மருந்தாக வெங்காயம் செயல்பட்டு வருகிறது. ஜலதோஷத்தை ஏற்படுத்தும் நச்சு நுண்மங்களையும், புற்று நோய்களையும், இதய நோய்களையும் தடுத்து நிறுத்துகிறது.

நோய்த்தொற்றைத் தடுத்து உடலில் நோய்எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. வெங்காயத்தில் உள்ள அலிலின் என்ற இரசாயனப் பொருள்தான் பக்ரீரியாக்கள், நச்சு நுண்மங்கள், காளான் போன்றவை உடலில் சேரா-மல் தடுக்கின்றன. இத்துடன் புற்றுநோய்க் கட்டிகள் வளராமலும் தடுக்கின்றன.

**கரட்**

நோய் எதிர்ப்புச் சக்தி வேலிகள் நன்கு உறுதிப்பட கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் உதவுகிறது. குறிப்பாக நம் உடல் தோலிலும், சளிச் சவ்விலும் நோய் எதிர்ப்புப் பொருள்கள் நன்கு செயல்படும்படி தூண்டிக் கொண்டே இருப்பது கரட்தான

**ஒரேஞ்சு:**

விற்றமின் சி ஒரு முகப்படுத்தப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பழத்தில் இன்டர்பெரான் என்ற இராசயனத் தூதுவர்களை அதிகம் உற்பத்தி செய்வது விற்றமின் சி. காற்று மற்றும் நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றுக் கிருமிகளை இந்த இன்டர்பெரான்கள் எதிர்த்துப் போராடி உடலில் அவை சேராமல் அழிக்கின்றன. ஒரேஞ்சு கிடைக்காத போது எலுமிச்சம்பழச் சாறு அருந்தலாம்.

**பருப்பு வகைகள்**

பாதாம் பருப்பு, வேர்க்கடலை போன்ற கொட்டை வகைகளில் உள்ள விற்றமின் ஈ, வெள்ளை இரத்த அணுக்கள் சிறப்பாகச் செயல்படத் தூண்டிவிடுகின்றன. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது.

**கோதுமை ரொட்டி**

நரம்பு மண்டலமும், மூளையும் நன்கு செயல்படவும் புதிய செல்கள் உற்பத்தியில் உதவும் மண்ணீரலும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். தைமஸ் சுரப்பியும் விரைந்து செயல்பட ப்ரௌன் (கோதுமை) ரொட்டியில் உள்ள பைரிடாக்ஸின் (B4) என்ற விற்றமின் உதவுகிறது. இத்துடன் கீரையையும், முட்டையையும் தவறாமல் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**இறால் மீன் மற்றும் நண்டு**

அழிந்துபோன செல்களால் நோயும், நோய்த்தொற்றும் ஏற்படாமல் தடுப்பதில் இவற்றில் உள்ள துத்தநாக உப்பு உதவுகிறது. எனவே, வாரம் ஒரு நாள் இவற்றில் ஒன்றைச் சேர்த்து சாப்பிட்டு வரவும்.

**தேநீர்**

தேநீரில் உள்ள மக்னீசியம் உப்பு நோய் எதிர்ப்புச் செல்கள் அழிந்துவிடாமல் பாதுகாப்பதில் செயல்படுகிறது. சூடான தேநீர் ஒரு கப் அருந்துவதால் நோய்த் தொற்றைத் தடுத்துவிடலாம்.


**பாலாடைக்கட்டி**


சீஸ் உட்பட பால் சம்பந்தப்பட்ட பொருட்களில் உள்ள கல்சியம், மக்னீசியம் உப்புடன் சேர்ந்து கொண்டு உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை அமைப்பு கருதி தவறாமல் ஆற்றலுடன் செயல்பட உதவுகிறது.

**முட்டைக்கோஸ்**

குடல் புண்கள் ஆறு மடங்கு வேகத்தில் குணம் பெற முட்டைக் கோஸில் உள்ள குளுட்டோமைன் என்ற அமிலம் உதவுகிறது. உணவின் மூலம் உள்ளே சென்றுள்ள நோய்த்தொற்று நுண்மங்கள் முட்டைக் கோஸால் உடனே அகற்றப்படுகின்றன.

இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. முட்டைக் கோஸு"க்குப் புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் உண்டு. மேற்கண்ட உணவுப்பொருட்களில் ஏழு உணவுப் பொருட்களாவது தினமும் நம் உணவில் இடம்பெற வேண்டும். இதைச் செய்து வந்தால் நம் மருந்துவச் செலவு குறைந்துவிடும்.





# 71 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? ஓர் ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் பிரசுரிக்கப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றன.**

"பாவி! மகாபாவி! நான் எப்படி பயந்துபோனேன் தெரியுமா? எப்படி கலங்கிப்... பாவி... பாவி!" என்று அவன் கழுத்தை என் இரு கைகளாலும் நெரித்தேன்.

மல்லா இப்போதும் கண்களால் சிரித்தான். கண்களால் மயக்கினான்.

"பூலான் நீ சாதாரண பெண் அல்ல. நீ அவதாரம். நீதான் புத்லிபாய்! நீதான். நீயேதான் புத்லிபாய்" என்று முனகிக்கொண்டே என் நெஞ்சில் முகத்தால் உரசி-னான்.

மல்லா புத்லிபாயின் கதை சொன்னான். அவன் சொல்லச் சொல்ல எனக்குப் பிரமிப்பாக இருந்தது. எனக்குள் புதிய சக்தி பிறந்துவிட்டாற்போல் இருந்தது.

புத்லிபாய் - ஆக்ராவில் முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த அழகான பெண். ஆரம்பத்தில் ஒரு நடனக் குழுவில் இருந்தாள்.

புத்லி ஆடுகிறாள் என்றால், பணக்காரர்களும், பண்ணையாளர்களும் அங்கே மொய்த்துக் கிடப்பார்கள்.

போதையேறச் சிவந்த விழிகளால் அவள் எழில்களைப் பருகிக் கொண்டிருப்பார்கள்.

கட்டுக்குலையாத உடலையும், சேலை தழுவிக் கிடக்கும் வனப்பான எழில்களை நாமும் தழுவிக்கொண்டால் என்னவென்று வெறியோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

நோட்டுக்களை வீசியெறிவார்கள். தரையில் சிதறிக் கிடக்கும் நோட்டுக்கள் மீது நின்று புத்லிபாய் ஆடிக்கொண்டிருப்பாள்.

ஒரு முறை, ஒரே ஒரு முறை புத்லி கிடைத்தால் போதும், கட்டுக்கட்டாகப் பணத்தைக் கொட்டித் தருகிறோம் என்று காத்துக்கிடப்பார்கள்.

புத்லிபாயின் தாயாருக்கு தன் மகளை தாரைவார்க்க ஆசைதான்.

"கட்டுடலை விருந்தாக்கினால் கொட்டுமடி பணமழை" என்று ஆசை காட்டினாள்.

இரவு-உறவு-வரவு கசக்குமா?

"கண்ணே! சம்மதி!" என்றாள்.

சினந்தாள் புத்லிபாய். சீறினாள் புத்லிபாய்.



வீட்டை விட்டு வெளியேறி-னாள் புத்லிபாய்.

கொள்ளைக்கடத்தல் தலைவன் சுல்தானுடன் சேர்ந்தாள்.

"பலருக்குப் படுக்கை விரிப்பதைவிட உன்னுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்கின்றேன் வா சுல்தான் வா!"

சுல்தானும் புத்லிபாயும் ஒன்றாகினர். கொள்ளைக் கோஷ்டியில் புத்லிபாயும் ஒருத்தியானாள்.

சுல்தான் பொலிசாருடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டான். புத்லிபாய் கொள்ளைக் கோஷ்டித் தலைவியானாள்.

'பாயும் பெண் புலி' என்று புத்லியை நினைத்து பொலிசார் நடுங்கினார்கள்.

'கொள்ளை ராணி' என்று முதன் முதலாகப் பட்டம் சூட்டப்பட்டாள்.

1950 ஆம் ஆண்டுகளில் புத்லிபாய் கோஷ்டி சம்பல் பள்ளத்தாக்கில் பிரபல்யமாக இருந்தது.

புத்லிபாய் காளியின் அவதாரம் என்று கிராம மக்கள் கொண்டாடினார்கள். அவள் சாகசங்களை வைத்துப் பாடல்கள் புனைந்தார்கள்.

உயிரோடு அல்லது பிணமாக புத்லியைப் பிடிக்குமாறு உத்தரவிட்டது அரசாங்கம், ஒரு நாள் சம்பல் பள்ளத்தாக்கு அருகே ஓடிக்கொண்டிருக்கும் குன்வாரி ஆற்றைக் கடந்து கொண்டிருந்தது புத்லி குழு. பதுங்கியிருந்த பொலிசார் புத்லிபாயைச் சுட்டுக்கொன்றனர்.

சாகும்போது புத்லிபாய்க்கு இருபத்தொன்பது வயது.

புத்லி செத்துப்போனாள் என்பதை அவளை நேசித்த கிராம மக்கள் நம்ப மறுத்தனர்.

'புத்லி வாழ்கிறாள்!'

'புத்லி அவதாரம்!'

'காலம் காலமாக அவள் பல உருவில் அவதாரம் எடுத்துக்கொண்டே இருப்பாள்!'

'தீயவர்களை ஒழித்துக் கட்டுவாள், கொடியவர்களைச் சுட்டுத்தள்ளுவாள்! என்றுதான் சம்பல் பள்ளத்தாக்குக்

> **"ஒரு முறை, ஒரே ஒரு முறை புத்லி கிடைத்தால் போதும், கட்டுக் கட்டாகப் பணத்தைக் கொட்டித் தருகிறோம் என்று காத்துக்கிடப்பார்கள். புத்லிபாயின் தாயாருக்கு தன் மகளை தாரைவார்க்க ஆசைதான். "கட்டுடலை விருந்தாக் கினால் கொட்டுமடி பணமழை" என்று ஆசை காட்டினாள். "கண்ணே! சம்மதி!" என்றாள். சினந்தாள் புத்லிபாய். சீறினாள் புத்லிபாய். வீட்டை விட்டு வெளியேறினாள் புத்லிபாய். கொள்ளைக்கடத்தல் தலைவன் சுல்தானுடன் சேர்ந்தாள்."**

கிராமங்களில் உள்ள மக்கள் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

சம்பல் பள்ளத்தாக்கு மலைகளில் அந்த நம்பிகை எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

மல்லா புத்லிபாயின் கதையைச் சொன்னபோது பூலான் தன் மனக் கண்களால் புத்லிபாயைக் கற்பனை செய்து பார்த்தாள்.

இத்தனை நாளாக புத்லிபாயைப் பற்றித் தெரியாமல் இருந்துவிட்டேனே என்று நினைத்தாள்.

"பூலான் நீதான் புத்லிபாயின் அவதாரம். நீதான். நீயேதான்!" என்றான் மல்லா.

என்னமோ தெரியவில்லை, மல்லா சொன்னதை மறுக்க வேண்டும் என்று பூலானுக்குத் தோன்றவில்லை.

அடுத்து வந்த சில நாட்களில் அங்கே பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

"பூலான் தனக்கு அடுத்த இடத்தில் இருப்பவள். அவளுக்கு மதிப்பளிக்க வேண்டும்" என்று மல்லா சொல்லிவிட்டான்.

(திருப்பங்கள் தொடரும்...)

# விஜயின் சந்திப்பில் சீமான்

சீமான் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'பகலவன்' படத்தின் பணிகள் எப்போது துவங்கும் என்று தமிழ் திரையுலகில் பரபர பட்டிமன்றமாக அடிபட்டது. இந்நிலையில் விஜய்யிடம் இருந்து சீமானுக்கு திடீர் அழைப்பு. உடனடியாக விஜய்யை சந்தித்தார். ஒளிப்பதிவாளர் ஏகாம்பரம் உடன் இருக்க, மூன்று மணி நேரம் சந்திப்பு நீண்டது.

'பகவலன்' படத்தின் கதையை ஏற்கனவே விஜய் கேட்டு விட்டார். அதன் க்ளைமாக்ஸ் 'வேலாயுதம்' படத்தின் காட்சியை போலவே இருந்ததால் அதை மாற்றக் கோரினார். அதன் பிறகு கௌதம் மேனன் இயக்கத்தில் விஜய் நடிக்க இருப்பதாக விளம்பரம் வெளியாக, சீமான் அப்செட். இதற்கிடையில் தயாரிப்பாளர் தாணு, சீமானை சமாதானப்படுத்தி கதையை மாற்றி எழுதுங்கள். தம்பி விஜய் உங்கள் இயக்கத்தில் நடிப்பது உறுதி என நம்பகம் வார்த்தார். இதையடுத்து, அடுத்த ஒரு சில நாட்களிலேயே க்ளைமாக்ஸை அட்டகாசமாக மாற்றி எழுதினார் சீமான். இது தாணுவிற்கு மிகவும் பிடித்துவிட, அது குறித்து விஜய்யிடம் சிலாகித்து பேசி இருக்கிறார். அதன் பிறகே சீமான் - விஜய் சந்திப்பு நடந்து இருக்கிறது. உள்ளாட்சி தேர்தலில் காங்கிரஸிற்கு எதிராக பிரசசார வேலைகளை முடித்த உடனேயே 'பகலவன்' படப்பிடிப்பு ஆரம்பமாகும், என்கிறார்கள் சீமானின் நெருங்கிய புள்ளிகள்.

# வருத்தத்தில் மங்காத்தா குழுவினர்

ஓகஸ்ட் 31 அன்று உலகம் முழுவதும் அஜித் நடித்த 'மங்காத்தா' திரைப்படம் வெளியானது. இதில் அஜித்துடன் அக்ஷன் கிங் அர்ஜுன், த்ரிஷா, ஆன்ட்ரியா, லட்சுமி ராய், அஞ்சலி உள்ளிட்ட பலரும் நடித்திருக்கின்றனர். இதில் கெட்டவன் கேரக்டரில் வந்து அசத்தியிருப்பார் அஜித். இது அவரது 50ஆவது படம் என்பது குறிப்படத்தக்கது. இப்படம் தமிழில் வெளிவந்ததை அடுத்து, விரைவில் 'கேம்ப்ளர்' என்ற பெயரில் தெலுங்கில் வர இருக்கிறது. தற்போது கிடைத்துள்ள தகவலின்படி, மலையாளத்திலும் இப்படத்தை டப் செய்து வெளியிட இருக்கிறார்கள். தெலுங்குப் படம் செப்டெம்பர் 9 அன்று திரைக்கு வந்துவிட்டது. மலையாளப் படம் இதையடுத்து வெளியாக உள்ளது. இதனால் சந்தோஷமாக இருந்த படக்குழுவுக்கு பேரிடியாக அமைந்தது இந்த செய்தி, 'மங்காத்தா' படம் வெளியான ஆறாவது நாள் அதன் 'பக்கா' பிரிண்ட் நூற்றுக்கும் மேற்பட்ட இணையத்தளங்களில் உலா வர ஆரம்பித்துவிட்டது. இதனால் படத்தின் வசூல் பாதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பொலிசில் புகார் அளிக்க படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர். இணையத்தளங்களில் திருட்டுத்தனமாக புதிய படங்களை ஒளிபரப்புவது திருட்டு டி.வி.டியை விட மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.





'அழ
'கந்தசாமி', வி
மகளாக 'ஜக்குபா
பல படங்களில் ந
ஆரம்பித்தார்.
ஆனால் 'இந்திர
வேலுவுடன் இணை
னார். அதன் பின்
குறைய ஆரம்பித்
திரையுலகில் கவ
ழில் வாய்ப்புகள்
ஸ்ரேயா சென்னை
வந்துவிட்டது என்
வட்டாரத்தில்
கன




# சிகரத்திற்கு கிடைத்தது தாதா சாகிப் பால்கே விருது

இந்திய சினிமா வளர்ச்சிக்கு பாடுபட்டதற்காக, இயக்குநர் சிகரம் கே.பாலசந்தருக்கு ஜனாதிபதி பிரதீபா பட்டீல் அவர்களினால், தாதா சாகிப் பால்கே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. சிறந்த சினிமா கலைஞர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி, டில்லியில் உள்ள விஞ்ஞானபவனில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், ஜனாதிபதி பிரதீபா பட்டீல் பங்கேற்று விருதுகளை வழங்குகிறார்.

இந்திய அரசு வழங்கும் மிக உயர்ந்த விருதுகளில் ஒன்றான தாதா சாகிப் பால்கே விருது, 2010ம் ஆண்டுக்காக டைரக்டர் கே.பாலசந்தருக்கு வழங்கப்படுகிறது. விருதுடன் தங்கத் தாமரை, ரூ.10 லட்சம் ரொக்கம், மற்றும் பொன்னாடையை கே.பாலசந்தருக்கு, ஜனாதிபதி பிரதீ பட்டீல் வழங்கினார். இதேபோல சிறந்த நடிகருக்கான நடிகர் தனுசுக்கு வழங்கப்படுகிறது. இவருக்கு விருதுட தாமரை மற்றும் ரூ.50 ஆயிரம் ரொக்கமும் கிடைக்கும்




# மேற்சட்டை இல்லாத படம் நியாய அடித்துக் கூறுகிறது பத்திரிகை ந

எப்.ஹெச்.எம். என்ற பத்திரிக்கையின் அட்டைப் படத்தில் காஜல் அகர மேற்சட்டை இல்லாத படம் சமீபத்தில் வெளியானது. இதைப் பார்த்து அ சினிமாவில் முத்தக்காட்சியில் கூட நடிக்க மாட்டேன் என்று கூறிய காஜ இப்படி போஸ் கொடுத்திருக்கிறார், என்று முகம் சுழித்தனர். இதையடுத்து காஜலின் தங்கை தனது அக்காவுக்காக மறுப்பு வெளியிட்டார். பின்னர் கா மறுப்பு தெரிவித்தார்.

அந்த பத்திரிகைக்கு நான் டிரஸ்சுடன் தான் போஸ் கொடுத்தேன். அவ செய்து வெளியிட்டுவிட்டனர். அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடு என்றெல்லாம் கூறினார் காஜல். இந்நிலையில் பத்திரிகை நிர்வாகம் தரப் மறுப்புக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில், எந்த ஒரு பிரபலத் வையும் நாங்கள் இதுவரை மார்பிங் செய்ததும் இல்லை, செய்யப்போவத நாங்கள் கடந்த மாதம் 18ஆம் திகதி மும்பையில் வைத்து தான் காஜல் அ எடுத்தோம். அப்போது உதவியாளர்கள், ஸ்டைலிஸ்ட்கள், மேக்அப் ஆர் புகைப்படக்காரர்கள் மற்றும் பலர் அங்கு இருந்தனர். அவர்கள் தான் க டொப்லெஸ்ஸாக போஸ் கொடுத்ததற்கு சாட்சி. நாங்கள் மார்பிங் செய் என்பதை நிரூபிக்க விரைவில் இணையத்தளத்தில் அவரது போட்டே வெளியிடவிருக்கிறோம். இதுதவிர போட்டோவை வெளியிட காஜல் ஆவணம் எங்களிடம் உள்ளது. மார்பிங் செய்யப்பட்டுள்ளது என்று கூ பத்திரிக்கையையும், அவரது ரசிகர்களையும் அவமதிப்பதாகும், என் யார் சொல்வது உண்மை, யார் சொல்வது பொய் என்ற பட்டிமன்றம் ஒ நடந்தாலும் காஜலுக்கும், அவரது ரசிகர்களுக்கும் இந்த சர்ச்சை என்னவோ இலாபம்தான்.



# காலை வாரியது ரௌத்திரம் பறந்து போனார் ஸ்ரேயா

அண்மையில் வெளியான 'ரௌத்திரம்' படத்தைத்தான் பெரிதும் எதிர்ப்பார்த்தார் ஸ்ரேயா.

நல்ல கதாபாத்திரம் அமைந்தும் படம் படுதோல்வி அடைந்ததால் ஸ்ரேயாவின் கடைசி நம்பிக்கையும் தகர்ந்து போனது. இந்நிலையில் சென்னை வளசரவாக்கத்தில் தங்கியிருந்த ஆடம்பரமான வாடகை பங்களாவை காலி செய்தார் ஸ்ரேயா.

தமிழில் 'எனக்கு 20 உனக்கு 18' படத்தின் மூலம் அறிமுகமானவர் ஸ்ரேயா. ஆனால் அவரை தமிழில் நாயகியாக அடையாளம் காட்டி திருப்புமுனை தந்த படம் 'மழை'. தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார் ரஜினி ஜோடியாக 'சிவாஜி', தனுஸ் ஜோடியாக 'திருவிளையாடல் ஆரம்பம்', விஜய் ஜோடியாக 'அழகிய தமிழ்மகன்', விக்ரம் ஜோடியாக ...ாமி', விஷால் ஜோடியாக 'தோரணை', சரத்குமார் ...ஜக்குபாய்', ஆர்யா ஜோடியாக 'சிக்கு புக்கு' என ...களில் நடித்து முன்னணி நடிகையாக வலம் வர ...தார்.

'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' படத்தில் வடி...ன் இணைந்து ஒரு பாடலுக்கு குத்தாட்டம் ஆடி...ந்ன் பின்பு இவருக்கு தமிழ் படவாய்ப்புகள் ...ஆரம்பித்தன. இதனால் மீண்டும் தெலுங்கு, இந்தி ...கில் கவனம் செலுத்தி வந்தார். தற்போது தமி...ப்புகள் சுத்தமாக இல்லாத நிலையிலேயே ...சென்னையை காலி செய்ய வேண்டிய நிலை ...டது என்கிறார்கள், அவரது மக்கள் தொடர்பாளர் ...டாரத்தில். ஆனால் தமிழில் ஸ்ரேயாவுக்கு கனவுக் கதாபாத்திரங்கள் என்று எதுவும் அமையவில்லை என்பதுதான் சோகம்.




...பதி பிரதீபா ...ருக்கான விருது, ...விருதுடன் வெள்ளித் ...கிடைக்கும்.

## ...நியாயமானது ...கை நிறுவனம்

...காஜல் அகர்வாலின் ... பார்த்து அவரது ரசிகர்கள், ...கூறிய காஜல் அகர்வாலா ...இதையடுத்து முதலில் ... பின்னர் காஜல் அகர்வாலே ...

...த்தேன். அவர்கள் மார்பிங் ...படிக்கை எடுப்பேன், ...ர்வாகம் தரப்பில் காஜலின் ...ஒரு பிரபலத்தின் போட்டோ ...செய்யப்போவதும் இல்லை. ...ன் காஜல் அகர்வாலை படம் ...மக்அப் ஆர்டிஸ்ட்கள், ...ர்கள் தான் காஜல் ...மார்பிங் செய்யவில்லை ...ரது போட்டோவை ...யிட காஜல் கையெழுத்திட்ட ...து என்று கூறுவது எங்கள் ...தாகும், என்று கூறியுள்ளார். ...ட்டிமன்றம் ஒருபுறம் ...த சர்ச்சை

# தயாரிப்பாளர் மீது செக்ஸ் புகார்!

தமிழ் சினிமா தயாரிப்பாளர் தனது ஆசைக்கு இணங்கும்படி செக்ஸ் டார்ச்சர் செய்கிறார் என்று பொலிவூட் கவர்ச்சி நடிகை ஒருவர் பரபரப்பு புகார் கூறியிருக்கிறார். பொலிவூட்டில் கவர்ச்சி வேடங்களில் நடித்து வருப-வர் நிஷா யாதவ் (வயது 22). இவர், சென்னையை சேர்ந்த பட அதிபர் ராம்நாத் ஆனந்தன் என்பவர் மீது, குரார் பொலிசில் பரபரப்பு புகார் ஒன்றை கொடுத்துள்ளார். அதில் கூறி இருப்பதாவது, கடந்த ஜூன் மாதம் மும்பையில் உள்ள ஒரு பாரில், ராம்நாத் ஆனந்தன் என்னை சந்தித்தார். அவர் தன்னை சென்னையை சேர்ந்த தமிழ் பட தயாரிப்பாளர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். தனது புதுப்படத்தில் கவர்ச்சி வேடம் ஒன்றில் நடிப்பதற்கு வாய்ப்பு தருவதாக அவர் கூறினார். அதைத்தொடர்ந்து சினிமாவில் நடிக்க வாய்ப்பு வேண்டுமானால், தன்னுடைய ஆசைக்கு இணங்க வேண்டும் என்று ராம்நாத் ஆனந்தன் தொந்தரவு செய்தார். அவரு-டைய ஆசைக்கு நான் சம்மதிக்க மறுத்துவிட்டேன். இதனால் அவர் என்னை மிரட்ட தொடங்கினார். சில நாட்களுக்கு முன்னர் ஆனந்தன் எனக்கு போன் செய்து சென்னைக்கு வருமாறும் அங்கு வந்து தன்னுடன் தங்கியிருக்க வேண்டும் என்றும் கூறினார். இதனால் கோபமடைந்த நான், ஆனந்தனுடன் உள்ள தொடர்பை துண்டித்துவிட்டேன்.

ஆனாலும் அவர் எனக்கு மீண்டும், மீண்டும் போன் செய்து தன்னுடன் வசிக்காவிட்டால் உன்னுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும், என்று மிரட்டினார். எனக்கு தொந்தரவு கொடுத்து வரும் ஆனந்த் ராம்நாத் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று புகாரில் கூறியிருந்தார். நடிகை நிஷாவின் புகாரை ஏற்றுக்கொண்ட பொலிசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.



படம் - நீதான் என் பொன்வசந்தம்

# வருகிறது தயாரிப்பாளர் சங்கத் தேர்தல்

தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்துக்கு வருகிற அக்டோபர் 9ஆம் திகதி தேர்தல் நடக்கிறது.

தேர்தல் அதிகாரியான வழக்கறிஞர் சந்திரகுமார் இதுபற்றி தெரிவிக்கையில், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் வருகிற 23ஆம் திகதி தொடங்கி, 27ஆம் திகதி வரை நடைபெறும். வேட்பு மனுவை வாபஸ் பெறுவதற்கு வருகிற 30ஆம் திகதி கடைசி நாள். ஒக்டோபர் 9ஆம் திகதி தேர்தல் நடைபெறும். அன்று காலை 9 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி, மாலை 4 மணிவரை நடைபெறும். 4.15 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கி, அன்று இரவே முடிவுகள் அறிவிக்கப்படும், என்று கூறினார்.

# நடிகர்கள் மீது கொதிக்கிறார் தயாரிப்பாளர்

'சூப்பர் டீம் சினிமாஸ்' என்ற நிறுவனத்தின் சார்பில் எம்.கோவிந்தராஜ், எம்.நாகராஜ், ஜி.பூபால் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கும் படம் 'நந்தா நந்திதா'. இப்படத்தின் பாடல்களின் வெளியீடு சென்னை பிரசாத் லாப்பில் நடைபெற்றது.

இதில் கேயார், பஞ்சு அருணாச்சலம், எஸ். பி.ஜனநாதன், நாசர் ஆகியோர் கலந்துகொண்டு பாடல்கள் குறுந்தகட்டை வெளியிட்டார்கள். நிகழ்ச்சியில் பேசிய கேயார், இன்றைய சினிமா வர்த்தக நோக்கம் கொண்ட நிறுவனங்களால் சீரழிந்து வருகிறது. அதனால் இவ்வாறான நிறுவனங்கள் படம் தயாரிக்க யாரும் ஒத்துழைக்கக் கொடுக்க கூடாது. அவர்களுக்கு பெரும்பாலும் நடிகர்கள்தான் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் அதிகமான பணத்திற்காக நடிகர்கள் நடிக்க சம்மதம் தெரிவிக்கிறார்கள்.

நடிகர்களை அறிமுகப்படுத்தி அவர்களை வளர்த்துவிடும் தயாரிப்பாளர்களை மறந்து விட்டு இப்போது வந்த நிறுவனங்களுக்கு வெறும் பணத்திற்காக நடித்து கொடுக்கும் நடிகர்கள் சினிமாவை விட்டு விட்டு வேறு ஏதாவது தொழில் செய்யலாம்.



# தேன் கிண்ணம்

## பட்டமரமாகிப் போகிறேன்

நீ
என் காதலை மறுத்த போது
வாழ்வை வஞ்சித்து
சாவையழைத்தேன்
வராத போதிலும்
காதலியே
இன்னுமின்னும் என்னை
மிதிக்காதே
நான் கொஞ்சம் கொஞ்சமாக
உதிரும் இலையாக இருக்கிறேன்
நாளை நானாகவே
பட்டமரமாகிவிடுவேன்...

ஜே.பிரோஸ்கான்,
கிண்ணியா.

## குடையின் அழகை

நாங்கள்
வெயிற்காலம்
வேலை செய்பவர்கள்.

மழைக்காலம்
சளைக்காது
உழைப்பு செய்பவர்கள்.

இரண்டுமில்லா
இரவும்... மாலையும்
இனிதே ஓய்வு
கொள்பவர்கள்.

இப்போ...
மாலைப் பொழுதுகளிலும்
வேலை செய்கிறோம்
காதல் லீலை செய்யும்
காதலர்க்கு
மறைவிடமாகி....

யோ.புரட்சி, வள்ளுவர்புரம்.

## அன்பால் ஆகாதது ஒன்றுமில்லை



அன்பு என்ற வார்த்தைக்கு நிகரேது. அதனால் தான் அன்பின் பெருமையை எடுத்துக்கூறும் விதமாக திருவள்ளுவர் அன்பு டைமை பற்றி தனி அதிகாரமே எழுதியுள்ளார். அன்பில் இடைவெளி விழுவதால்தான் கணவன் - மனைவி இடையே பிரிவினை ஏற்படுகிறது. பந்தங்கள் பலவீனமடைகின்றன. அதனை அன்பின் மூலமாக மட்டுமே சரிசெய்ய முடியும். பிறருக்காக இரக்கப்படுவது மட்டும் அன்பாகிவிடாது. தன்னை நேசிக்கத் தெரிந்தவர்களால் மட்டுமே மற்றவரை நேசிக்க முடியும் என்று தெரிவித்துள்ளனர் அறிஞர்கள்.

தூய அன்புடன் உணர்வுபூர்வமான உறவை உருவாக்க அன்புகாட்டுதல், அக்கறை கொள்ளல், புரிந்து கொள்ளல், மதித்தல், பாராட்டுதல், ஏற்றுக்கொள்ளல், நம்பிக்கை வைத்தல் போன்ற 7 பண்புகள் வேண்டும் என்கிறார் ஜான்கிரே.

அன்பிலும் பல வகை இருக்கிறது. நட்பு, காதல் சார்ந்த அன்பு இருக்கிறது. என்னுடையது விட்டுத்தரமாட்டேன் என்பது வெறித்தனமான அன்பு. ஒரே பின்னணி பார்த்து வருவது செயல்பூர்வமான அன்பு. தியாகம் செய்வது தன்னலமற்ற அன்பாகும். அன்பு என்பது ஒன்றிணைக்கும் மனோபாவம். இரண்டு தனித்தீவுகளை இணைக்கும் உறவுப்பாலம். பயமுறுத்தினாலும் பணியாது அன்பு. சிறைப்படுத்தினாலும் இணங்காது, துக்கத்தை வெல்லும் தன்மையுடையது அன்பு.

அக்கறை செலுத்துவது என்பது அன்பின் மற்றொரு படிநிலை. சின்னச் சின்னத் தேவைகளிலும் ஆழமான கவனம் செலுத்தி அவற்றை நிறைவேற்ற உதவுவதே அக்கறையாகும். மற்றவர்களின் முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தி, சோகத்திலும் உடனிருப்பது அவர்களுக்கு உங்கள் ஆதரவை எப்போதும் தருவது அக்கறை மிகுந்த அன்பாகும். எவர் ஒருவர் நேசிப்பவருக்காக மட்டுமல்லாது வெறுப்பவர் மீதும் அக்கறையை செலுத்துகின்றனரோ அவரே அன்பின் சிகரமாவார்.

புரிதல் இல்லாதவர்கள் சேர்ந்து வாழவே முடியாது. துணைவர் மற்றும் மற்றவர்களின் உரிமைகள், ஆசைகள், தேவைகளை அறிந்து நடப்பதும், அவற்றை மதித்து அவருக்கு உதவுவதுமே புரிந்து கொள்ளல் ஆகும். புரிந்துகொள்ளுதல் இல்லாததால் எத்தனையோ குடும்ப உறவுகள் சிதைந்திருக்கின்றன. மற்றவர் உங்களை புரிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணுவதற்குப் பதிலாக முதலில் நீங்கள் மற்றவரை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். மனைவி கணவரை மதிப்பதுபோலவே கணவரும் மனைவியை மதித்தால் குடும்பத்தில் பிரச்சினையே இல்லை.

பாராட்டு தொடரும்போது அன்பு இன்னும் ஆழமாகிறது. புகழ்வதெல்லாம் பாராட்டாகிவிட முடியாது. இயல்பை விளக்கி, முழுமையை அங்கீகரிப்பதே பாராட்டாகும் என்பதை மறந்துவிடாதீர்கள். பாராட்டுவதால் மனித மனம் மகிழ்வுறுகிறது. ஒருவரின் முயற்சிகள் அல்லது நடத்தையை அங்கீகரித்து பாராட்டுவது அவருக்கு ஊக்கத்தைத் தருகிறது. ஒருவரை ஊக்குவிப்பது இணக்கம் அதிகமாகும். நம்பிக்கை என்பது அன்பின் பரிசாகும். நம்புதல் ஏற்படும்போது அன்பு தானாக மலர்ந்துவிடும். நேர்மை, ஒழுக்கம், உண்மையாயிருத்தல் போன்றவை மற்றவர்க்கு நம்மீது நம்பிக்கை ஏற்படுத்தும் பண்புகளாகும். கணவரின் நடத்தையை நம்பி ஏற்றுக்கொள்ளும்போது சந்தேகப் பேய் ஒழிந்து குடும்பத்தில் சந்தோஷம் கூடுகிறது.

ஒருவரை புரிந்துகொண்டு அப்படியே ஏற்றுக் கொள்வது உண்மையான அன்பாகும். ஏற்றுக் கொள்ளல் என்பது தவறுகள் உள்ளிட்ட எல்லாவற்றையும் அனுமதித்தலை குறிப்பதல்ல. குறைகளை மன்னிப்பதாகும். குறைகூறுவதை கைவிடுங்கள், கோபத்தோடு படுக்கச் செல்ல வேண்டாம். மன்னியுங்கள். மன்னிப்புக் கேளுங்கள். மகிழ்ச்சி பெருகும்.

கணவன் - மனைவி அன்புறவு நீடிக்கவேண்டுமெனில் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று கூறுங்கள். வரவேற்கவும், விடைபெறவும், நன்றிகூறவும் அன்புத் தழுவலை கொடுங்கள். அன்புடன் அணைத்தல் என்பது உறவின் முதலீடு, பிரிவின் தடுப்புக்கோடு. நல்ல துணைவரைத் தேடுவதைப்போலவே நல்ல துணைவராக இருப்பது மிகவும் நல்லது. கருத்து வேறுபாடு ஒருவர் மற்றவரை சாதாரணமாக எடை போட வைக்கும். இந்த முரண்பாட்டை முரட்டு வார்த்தைகளால் வெளிப்படுத்தாதீர்கள்.

அகந்தையும், மற்றவரின் உதவாத அறிவுரைகளும் குழப்பத்தை உண்டு பண்ணும். உயர்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும் மகிழ்ந்திருந்தால் இல்லறம் நல்லறமாகும்.

சாதனை படைக்க முற்பட்டால் வேதனைகளைத் தாங்கும் மனோபலமும் தைரியமும் கட்டாயம் தேவை என்பதை மறந்துவிடாதீர்கள்.

## காலம் தின்ற கவிஞன்

உண்மைப் பாத்தியின்
உரமிட்ட வாழ்வுக்கு
வயதாகிப் போன
புதுமைகள் நேற்றைய
ஜனனங்களில் மெழுகு
பூசப்படடுக் கவிதை
பாடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பொய்க் கனவுகளின்
புதுமை விளிம்புகள்
ஈரமான வாழ்வுக்கு
தூரமாய் நின்று வழிவகுக்க
காலக் கவிஞன்
பேனாக் குருதியை
உரமாக்கிக் கொண்டிருக்கிறான்.

பொய்க் கற்பனைகளை
மாதிரி உண்மைகளாய்
ஊருக்கு உபதேசம்
செய்து உறவு
கொள்ளும் நாளின்
ஏகோபித்த சிந்தனைகள்
சந்தி பிரிக்கப்பட்ட
நாட்கள் என்றும்
நீண்டு கொண்டிருக்கிறது.

நியாயத் தீர்ப்புக்கு
நிர்க்கதியாகி
செதில் கலன்ற
காவியங்களின் நேற்றைய
வருடக் கணிப்புக்களைக்
கணித்தவன்
நீதியற்ற வாழ்வுக்கு
வழிசமைத்தக் கொண்டிருக்கிறான்.

நஸார் இஜாஸ், கிண்ணியா-05.

## நினைவுகளில் நிலாவாகினாய் நீ

என்னின
மனவெளியில்
பூக்களாய்
பரவிக் கிடந்தாய்
ஞாபகங்களாய்.

உன்னி ளமைதனை
அழகேயலங்கரித்தது
அகத்தினழகானாய்
முகத்தில் முழு நிலவாய்.

என்னன்பையுனக்கு
எடுத்துச் சொன்னபோது
உன்னதம் கலந்த
உவப்புடனேற்றாய்.

என் ஆற்றலின்
புள்ளியில் அசைந்தாய்
அன்பைப் பரிமாறி
பரிவாகினாய் பரவசமாய்.

நகலின் சாயல்
படிவதையும் தவிர்த்து
தூயவன்பையே எனக்கென
தந்தாய் நிதம்.

அன்பின் பரிசாய்
என் இதய வானத்தில்
இளவரசியாகினாய்
இதமான நேசத்தின் வடிவமாகினாய்.

ஆறுதல்களின்
அரவணைப்பும் மனம்
தேறுதல்களுக்கான
உன்னர்பணிப்பும்
என்னாத்மாவில் இடம்
தந்துற்று உனக்கென.

உன்னன்பின்
கிரணங்களில் என்
உள்ளமெல்லாம் கனிந்து
நினைவுகளில் நிலாவாகினாய்
நீ.


இன்ஹாம், விடத்தல் தீவு.

## எட்டுமில்லாமல் இழவுமில்லாமல் எங்கே போய் சேர்ந்தீர்கள்?

போரின் கோரப்பசிக்கு
இரையாகிப் போனோரிங்கு
ஏராளம் என்றறிக.
வாழ்விடங்கள் அழிந்து...
வருங்காலக் கனவுகள் சிதைந்து....
போக்கிடமின்றி; மண்ணுள்
புதைந்து போனவையெல்லாம்
இனியொரு புதிய வரலாறாகட்டும்!
வலைஞன் மடத்து வடலிப்பனைகளே!
உங்களுக்கு வாய் பேசும் திறன் இருந்தால்
நடந்ததைக் கூசாமல் நாளெல்லாம்
சொல்லியழுங்கள்.
உறவுகளை இழந்த உள்ளங்களை
இங்கே தேற்றுவார் எவருமில்லையென
நந்திக்கடலே! நீ திசைதிரும்பி நன்றாகப் பாடு.
உப்புத்தரவையிலே உயிர் நீத்த உடன்பிறப்புக்களே!
'எட்டு'மில்லாமல்; 'இழவு'மில்லாமல்
முகம்தெரியாமல்; முன்னறிவிப்பும் இல்லாமல்
கொள்ளியுமில்லாமல்; குளறியழ யாருமில்லாமல்
குழிக்குள் போன கொடுமையென்ன?
யார் செய்த பாவமோ? நாம் யாரைத்தான் நோவதோ?
'வழி அடைத்த நிலையில்'
வெட்டவெளி தெரியாமல் வெளிச்சமின்றி வாழ்ந்த எம்மை
அழிக்க நினைத்தோரெல்லாம்
அணு அணுவாய் அனுபவித்து
அப்படியே சாகட்டும்; பாவமூட்டை
அவனவன் பரம்பரைக்கும் அப்படியே போய் சேரட்டும்.

அலெக்ஸ் பரந்தாமன்.
புதுக்குடியிருப்பு.

# காசநோய் பற்றிய விழிப்புணர்வு






**Dr.சி.ஜமுனானந்தா**

நேரமில்லை எனக் கூறி இருமல் இருப்பவர்கள் சளிப்பரிசோதனை செய்ய பின்நிற்கக் கூடாது. பிறகு பார்ப்போம் என இருமல் இருப்போர் காலங்களைக் கடத்தக் கூடாது. காசநோய்க் கட்டுப்பாட்டில் ஈடுபடுவோரும் நாளாந்தத் திட்டம், மாதாந்தத் திட்டம் காலாண்டுக்கான திட்டம், வருடாந்தத் திட்டங்களை வரையறுத்து வேலை செய்தல் வேண்டும்.

கடந்த காலத்தை மீளாய்வு செய்வதால் எதிர்வரும் காலங்களில் செய்யவேண்டியவற்றை இலகுவாகவும், சரியாகவும் செய்யலாம். நேரம் விரயமாகாது. இருப்பதற்காக, சிறப்பாகத் திட்டமிட்டு செயற்படல் வேண்டும்.

**தொடர்பாடல் திறமையும், காசநோய்க்கட்டுப்பாடும்**

காசநோய் தொடர்பான செய்தி அனைவருக்கும் கிடைக்கும்போது காசநோய்க் கட்டுப்பாடு இலகுவானதாக அமையும். குறிப்பாக வேலை செய்யும் இடங்களில் இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் இருப்பின் காசநோயாக இருக்கலாம் என்ற செய்தியினை ஊழியர்கள், அதிகாரிகள், உரிமையாளர்கள் அறிந்து இருத்தல் வேண்டும். இத்தகையவர்களுடன் விசேட சலுகை களாக விடுமுறை, சிறிய இடைவேளை, ஊக்குவிப்புப் பணம் கொடுத்துச் சளிப்பரிசோதனை செய்தல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் காசநோய் பற்றிய விழிப்புணர்வுகளை குடும்பத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என்பவர்களிற்கு ஏற்படுத்த வேண்டும். கிராமத்தில் தொடர்பாடல் குறைந்த வயோதிபர்கள், தனிமையில் வாழ்பவர்கள் தினமும் பகல் வேலைக்குச் செல்பவர்கள் என்பவர்களிற்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும். தொடர்பாடல்களிற்கு பல ஊடகங்கள் இருப்பினும் தனிமனித செய்தித் தொடர்பு மிகவும் பெறுமதியானது. மேலும் நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்று சமூகத்தினைப் பின்னூட்டல் அவசியம்.



காசநோயினால் குணமடைந்தவர்கள் மூலம் சமூகத்தில் ஏனையவர்களிற்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் வேண்டும். சமூகத்தில் மக்கள் தாமாகவே முன்வந்து சளிப்பரிசோதனை செய்யும் நிலையினை அதிகரிக்க வேண்டும்.

**சமுதாய நேரடிக் கண்காணிப்பிலான சிகிச்சை (Community DOTS) காசநோய் நலன் பேணலில் சமூகத்தின் பங்கு**

01.நோய் அறிகுறி உடையவர்களை அடையாளம் காண உதவுதல்.

02.நோய் அறிகுறி உடையவர்களின் சளியினைச் சேகரித்து மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு சளிப் பரிசோதனைக்குக் கொண்டுவர உதவுதல்.

03.காசநோய்க்குரிய மருந்துகளை விநியோகிக்க உதவுதல்.

04.மருந்து எடுக்கத்தவறிய காச நோயாளிகளை தேடிக் கண்டுபிடிக்க உதவுதல்.

05.காசநோயாளிகள் மருந்தினை ஒழுங்காக எடுத்தலைக் கண்காணித்தல்.

06.மருந்து எடுக்காமல்விட்ட காச நோயாளிகளை மீளவும் மருந்து எடுக்கச் செய்தல்.

07.காசநோய்க்குரிய மருந்துகளைப் பாதுகாப்பதில் உதவுதல்.

08.நோயாளிகள் மருந்து உட்கொள்வதனை நேரில் அவதானித்தல்.

09.காசநோய் அறிகுறி உடையவர்களிற்கு மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தில் மருத்துவ ஆலோசனை பெற வகை செய்தல்.

10.காசநோயாளிகள் கிரமமாக மருந்துகளை எடுக்கின்றனரா எனக் கண்காணித்தல்.

11.காசநோய் தொடர்பாக ஏனையவர்களிற்கு விழிப்பூட்டல்.

12.காசநோய் தொடர்பான சமூகவடுவினைக் குறைத்தல்.

13.காசநோயாளிகளிற்கும் இலவசமாக சுகாதார சேவை இலகுவில் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்.

14.காசநோய்களுக்கு தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் மருந்து எடுப்பதன் அவசியத்தினை ஏற்றுக்கொள்ளச் செய்தல்.

15.காசநோயாளிகளிற்கு அவர்களது குடும்பத்திற்கும் ஆதரவு நல்குதல்.

16.காசநோய் குணமடைந்தவர்களிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவுதல்.

17.வேலை செய்யும் இடங்களில் காசநோய் அறிகுறிகள் உடையோர் காணப்படின் அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு உதவுதல்.


18.இரண்டு கிழமைகளிற்கு மேல் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை செய்வதற்கு தனிப்பட்ட ஆய்வுகூட வசதிகள் உருவாக்குவதற்கு உதவுதல்.

,19.காசநோயாளிகளுடன் தொடர்புடையோர் உடனடியாக 0,6,12,18,24, ஆகிய மாதங்களில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல்.

(தொடரும்...)

# கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - ௭



185

என்னை எவன் விரும்பவில்லையோ, அவனைத்தான் மணப்பேன் என்றாள்.

அவளை விரும்பாதது மாதிரி தேவர்களால் நடிக்கக்கூட முடியவில்லை.

ஏழு உலகங்களிலும் நடந்தாள், மகாலட்சுமி.

கடைசியில் பாற்கடலில் நடந்தாள்.

அங்கே பள்ளி கொண்டிருந்தது ஒரு கரிய திருமேனி.

மகாலட்சுமியை அது இலட்சியம் செய்யவே இல்லை.

என்ன உங்களுக்கு, ஆசையே இல்லையா? என்று கேட்டாள் மகாலட்சுமி.

நீ யாரம்மா? என்று கேட்டது திருமேனி.

நான்தான் மகாலட்சுமி என்றாள்.

அப்படியென்றால்...? என்று அது திருப்பிக் கேட்டது.

மகாலட்சுமிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

உன்னை அறிவதுதான் என் வேலையா? உலகத்தில் எனக்கு வேறு வேலை இருக்கிறது என்றார் திருமால்.

அவர் கழுத்தில் மாலையைப் போட்டுக் காலடியிலேயே உட்கார்ந்துவிட்டாள் மகாலட்சுமி.

உலக ரட்சகன் எதிலும் மயங்கிவிடுவதில்லை என்பதையும் மனிதனும் அப்படி மயங்காமல் இருக்கும் வரைதான் மரியாதை என்பதையும் இந்தக் கதை எவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஒரு அரண்மனை, அதன் மேன்மாடத்திலே ஒரு ராஜா. அவர் பக்கத்திலே அழகான ராணி. இருவரும் பழங்களை உரித்துத் தின்றபடி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். சுளைகளைத் தின்றுவிட்டு தோல்களை வெளியே எறிகிறார்கள்.

ஒரு சந்நியாசி, அவனுக்கோ பசி. வெளித் திண்ணையில் அவன் உட்கார்ந்திருக்கிறான். ராஜா தூக்கியெறிந்த தோல்களை எடுத்து அவன் தின்றான். சேவகர்கள் பார்க்கிறார்கள். சந்நியாசியை இழுத்துக்கொண்டுபோய் ராஜா முன்னால் நிறுத்துகிறார்கள்.

அவனைச் சவுக்கால் அடிக்கும்படி ராஜா ஆணையிடுகிறான்.

அடி விழ, அடி விழ சந்நியாசி சிரிக்கிறான்.

ஏன் சிரிக்கிறாய் என்று ராஜா கேட்டான்.

அரசே தோலைத் தின்றவனுக்கே இவ்வளவு அடி என்றால் சுளையைத் தின்றவனுக்கு எவ்வளவு அடி என்று எண்ணிப் பார்த்தேன் சிரிப்பு வந்துவிட்டது என்றார் சந்நியாசி.

பாவத்தின் அளவுக்கே தண்டனை என்பதற்கு இதைவிடவா வேறு.

ஸ்ரீகிருஸ்ண பரமாத்மாவுக்கு துலாபாரம்.

துலாபாரம் என்றால் இந்தக் காலம் போல வெங்காயம், விறகு பத்துக்காசு நாணயம் அல்ல. தங்கத்திலே துலாபாரம்.

சத்தியபாமா தன் நகைகளை எல்லாம் கழற்றி வைக்கிறாள்.

தான் செல்வம் படைத்தவள் என்பதைக் காட்டத் தாய்வீட்டுச் சீதனங்களையெல்லாம் கொண்டு வந்து வைக்கிறாள்.

தட்டு நகரவில்லை.

மெதுவாக வருகிறாள் ருக்மணி.

ஒரு துளசி தளத்தைக் கொண்டு வந்து கிருஷ்ணபரமாத்மாவின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு, அதைத் தட்டிலே வைக்கிறாள்.

என்ன ஆச்சரியம் தராசு சமமாகிறது.

ஆணவத்தோடு கொடுக்கப்படும் தங்கத்தைவிட அன்போடு கொடுக்கப்படும் இலை தழைகளுக்கு சக்தியும்,மரியாதையும் அதிகம் என்பதை இந்தக் கதை நிரூபிக்கவில்லையா?

பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் ஒருவர் வந்தார்.

சுவாமி! ஒரு சந்தேகம் என்றார்.

என்ன என்று கேட்டார் பரமஹம்சர்.

நீங்கள் விஷ்ணு என்கிறீர்கள். சிவன் என்கிறீர்கள், அதே விஷ்ணுவின் அவதாரம் தான் இராமனும், கிருஷ்ணனும் என்கிறீர்கள். ஒரே விஷ்ணுவுக்கு இத்தனை வடிவங்கள் எதற்கு? ஏன் ஒரே கடவுளாக வைத்துக் கொண்டால் என்ன? என்று கேட்டார்.

அதற்கு பரமஹம்சர் உடனே. ஐயா! ஒரு விடயம் நீங்கள்தான் ஒருவர்தான். ஆனால் உங்கள் அப்பாவுக்கு மகன்- மகனுக்கு அப்பா. மனைவிக்கு கணவன், மாமனாருக்கு மாப்பிள்ளை, மாப்பிள்ளைக்கு மாமனார். மைத்துனனுக்கு மைத்துனன், பாட்டனுக்குப் பேரன், பேரனுக்குப் பாட்டன். உங்கள் ஒருவருக்கே இத்தனை வடிவங்கள் இருக்கும்போது ஈஸ்வரனுக்கு இருக்கக் கூடாதா என்றார்.

கேள்வி கேட்டவர் முகத்தில் அசடு வழிந்தார்.

பல தெய்வ வணக்கம் நியாயம் என்பதற்கு இதற்கு மேல் ஒரு உதாரணம் தேவையா?

இந்தப் பல தேவதை வணக்கத்தைப் பற்றி காஞ்சிப் பெரியவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

மனுஷ்யர்களின் மனப்பான்மைகள் பல தினுசாக இருக்கின்றன. ஒவ்வொரு விதமான மனப்பான்மை உள்ளவர்களையும் ஆகர்ஷித்து. அவர்களைப் பக்தி செலுத்த வைத்து, அவர்களுடைய மனத்தைச் சுத்தம் செய்து, சித்தத்தை ஏகாக்ரப் (ஒருமைப் படுத்தவே பரமாத்மா பற்பல தேவதா ரூபங்களாக வந்திருக்கிறது.


இந்த ஹிந்துக்களுக்கு எத்தனை கோடிச் சுவாமிகள்! என்று அந்நிய மதஸ்தர்கள் நம்மைக் கேலி செய்வதுண்டு. உண்மையில் ஒன்று மேற்பட்ட ஸ்வாமி இருப்பதாக விடயம் தெரிந்த எந்த ஹிந்துவும் எண்ணவில்லை. இந்த வைதிக மதம் ஸ்வாமி ஒருவரே என்ற கண்டது மட்டுமில்லை. இந்த ஜீவனம்கூட அதே ஸ்வாமிதான் என்று வேறெந்த மதமும் கண்டுபிடிக்காததையும் கண்டு பிடித்திருக்கிறது. எனவே பிரபஞ்ச வியாபாரத்தை நடத்துகிற மகாசக்தியாக ஒரு ஸ்வாமி தான் இருக்கிறது என்பதில் எந்த விஷயமறிந்த ஹிந்துவுக்கும் சந்தேகமில்லை. ஆனால் அந்த ஸ்வாமி பல ரூபத்தில் வரமுடியும். அப்படிப்பட்ட யோக்கியதையும் கருணையும் அதற்கு உண்டு என்று இவன் நம்புகிறான்.

ஒரே ஸ்வாமி நம் தேசத்தின் மகா புருஷர்களுக்கும் பல ரூபங்களில் தரிசனம் தந்திருக்கிறார். அந்தந்த ரூபங்களுக்குரிய மந்திரம், உபாசனா மார்க்கம் எல்லாவற்றையும் அந்த மகா புருஷர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள். இவற்றை முறைப்படி அனுஷ்டித்தால் நாமும் அந்தத் தேவதை அனுக்கிரகத்தை பெற முடியும். எந்தத் தேவதையாக இருந்தாலும் சரி, அது முடிவில் பரமாத்மாவே! ஆகையால் நாம் சந்தேகம் கொள்ளாமல் பூரண சிரத்தையோடு பக்தி வைத்தால் அது நமக்கு சம்சார பந்தத்திலிருந்து விடுதலை தரும். இந்த விடுதலைக்கு நாம் பக்குவப்படுவதற்கு முன் நம் லௌகீக வேண்டுதலைக் கூட நிறைவேற்றி அனுக்கிரகிக்கும்.


தொடரும்...


# நினைப்பதும் நடப்பதும்

தென்கொரியாவின் டேகு நகரில் பதின்மூன்றாவது IAAF தடகள சாம்பியன் ஷிப் போட்டிகள் முடிவடைந்துவிட்டன. மொத்தம் 203 நாடுகள் மற்றும் பிராந்தியங்கள் இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டன. பொதுவாகத் தடக-ளப் போட்டிகளில் எதிர்பார்க்கப்படுவது சாதனை முறியடிப்புக்கள் தான். ஆனால் டேகுவில் எதிர்பார்த்த அளவிற்கு எதுவும் நடைபெறவில்லை. மூன்று உலக சாம்பியன்ஷிப் சாதனைகள் ஏற் படுத்தப்பட்டன. பதி னேழு அதிசிறந்த தட கள செயற்பாடுகள் பதியப்பட்டன. ஆனால் உலக சாதனை எதுவும் முறியடிக்கப்படும் என்று போட்டிகளின் இறுதி நாள்வரை எதுவித நம்பிக்கையும் இருக்க வில்லை.









ஆனால் இறுதிநாளில் ஜமேய்க்கா அணியின் 4X400 மீற்றர் அஞ்சலோட்ட அணியினர் அந்தச் சாதனையைச் செய்தார்கள் அது ஜமேய்க்காவின் இதுமட்டுமே டேகுவில் பெறப்பட்ட ஒரேயொரு உலக சாதனையாக அமையப்பெற்றது. ஜமேய்க்காவின் 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்ட அணியின் வீரர்கள் நெஸ்ரா கார்ட்டர், மைக்கல் பிரேட்டர், யொகான் பிளேக் மற்றும் முடிசூடி மன்னன் உசேன் போல்ட் இவர்கள் இந்த நிகழ்வை 37.04 செக்கன்கள் நேரத்தில் ஓடி முடித்தார்கள். இதில் என்ன ஆச்சரியம் வேடிக்கையும் என்னவென்றால், 2008 பீஜிங்





ஒலிம்பிக் போட்டிகளில் அப்போது கலந்து கொண்ட ஜமேய்க்கா நாட்டின் அஞ்சலோட்ட அணி இதே நிகழ்வை 37.10 செக்கன்களில் தங்கம் வென்று சாதனை நேரமாகப் பதிவு செய்திருந்தார்கள். தற்போது தமது நாட்டு வீரர்களால் ஏற்படுத்தப்பட்ட சாதனையை ஜமேய்க்காவைச் சேர்ந்தவர்களே முறி யடித்துள்ளார்கள்.

இதேவேளை மகளிர் மரதன் ஓட்டத்தில் கென்ய மகளிர் முதல் மூன்று இடங்களையும் வென்று சாதனை படைக்க, கென்ய ஆண் களும் விட்டேனா பார் என்று மரதன் ஓட்டப் போட்டிகளில தங்கம், வெள்ளி என முதல் இரண்டு பதக்கங்களையும் வென்றுவிட் டார்கள். இதில் இரண்டாம் நிலைக்குத் தள் ளப்பட்டுப்போன நாடு கென்யாவின் சகோதர ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாதான்.

ஆனால் டேகு போட்டிகளில் அதிர்ச்சி கரமான தோல்விகள் என்று மூன்று நிகழ்வுகள் பதியப்பட்டுள்ளன. ஒன்று 100 மீற்றர் குறுந்தூர ஓட்டத்தை ஜமேய்க்காவின் உசேன் போல்ட் தவறவிட்டமை. அடுத்தது. அமெரிக்க வீராங்கனை ஜேர்மன் கைட்லர் HAMMRE YHROW நிகழ்வில் தனது சாதனைத்துரமான 79.42 மீற்றரில் இருந்து ஏறத்தாழ மூன்று மீற்றர்கள் குறைவாக வீசி இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டது. மூன்றாவது மிகப்பெரும் அதிர்ச்சி, கோல் ஊன்றிப் பாய்தலில் சகலவிதமான சாதனை-களையும் தன்னகத்தே கொண்டு தன் சாதனைகளைத்தானே முறியடிக்கும் ரஷ்ய வீராங்கனை இசின் பயேவா இம்முறை தங்கப் பதக்கத்தைத் தவறவிட்டமை. இம் மூவரையும் பொறுத்தவரை மிக இலகுவில் தங்கம் வெல்வார்கள் என்று உலகம் எதிர் பார்த்தது. ஆனால் வேறு சில தடகள வீர, வீராங்கனைகளும் தமது முத்திரையைப் பதிக்கத் தயாராகிவிட்டார்கள் என்று மைதா-னம் நிரூபிக்கிறது.

# விடைதெரியா வினாக்கள்

கிரிக்கெட் போட்டிகளின் போது சில முடிவுகளை அல்லது தீர்ப்புக்களை உறுதிசெய்து கொள்ள தொழில்நுட்ப உதவிகளை நாடுவது அநே-கமாக எல்லா சர்வதேச கிரிக்கெட் நாடுகளாலும் ஏற்றக்கொள்ளப்பட்டாலும், இந்தியா அதன் மீதான கொண்ட நம்பிக்கைக் குறைவின் காரணமாக இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தே வந்துள்ளது. எனி னும் ICC யின் தொடர் வேண்டுகோளுக்கு இணங்க மைதா-னத் தொழில்நுட்பத்தை இந்தியாவும் அரைமனே-தாடு ஏற்றுக்கொண்டுள்ளது. UDRS என்று முன்னர் அழைக்கப்பட்ட இத்தொழில்நுட்ப முறை U என்பது நடுவர்களைக் குறிப்பதாகவும், அவர்களைத் தனித்துச் சுட்டிக்காட்டுவதை நடுவர்கள் தகுதிக் குறைவாக நினைப்பதால் அந்தச் சொல் நீக்கப்பட்டு Decision Review System என்று தற்போது அழைக்கப்படுகிறது.

இம்முறையின் கீழ் பின்பற்றப்படும் தொழில்நுட்ப முறைகளில் நான்கு முறைகள் பிரதானமானவை, Hawk eye, Ultramotion, Hotspot, Snicko Meter என்பவையே அவை. எனினும் Hot spot கமராக்களை இலகுவாகவும் அமோ-கமாகவும் பெற்றுக்கொள்ள இயலாதென்பதால் எல்லா ஆட்டங்களிலும் இந்தத் தொழில்நுட்பத்தைக் கையாள்வது கஷ்டம். அதோடு இது செலவு மிகுந்ததொரு விடயமும் ஆகும். உதாரண-மாக இந்தியா - இங்கிலாந்து ஆட்களில் Hot spot பின்பற்றப்பட்டாலும் சிம்பாப்வே, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, இலங்கை தொடர்களில் இதனைப் பெற்றுக்கொள்வது கடினமானதாகவே இருக்கிறது. ஏனெனில் Hot spot கமெராக்கள் 4-6 வரையே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறதாம். அதோடு DRS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிரிக்கெட் ஆட்டங்களைக் காட்சிப்படுத்தும் போது 38 கமெராக்களுக்குப் பதிலாக 42 கமெராக்கள் பயன்படுத்தப்பட வேண்டுமாம். மேலும் மேலதிக Hot spot கமெராக்களுக்கான செலவு ஒரு நாளைக்கு பதினைந்தாயிரம் அமெரிக்க டொலர்களாம். அதோடு DRS தொழில்நுட்பத்தைப் பாவிக்கும் போது இன்னும் சில விடயங்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் ICC உறுதிபடத் தெரிவித்துள்ளது. அதாவது Stump mikes, Ultra Stereo, Motion Cameras.

நாங்கள் சுகமாக இருந்து ஆட்டங்களைப் பார்த்துவிடுகிறோம். ஆனால் இதில் எத்தனை தொழில்நுட்ப விடயங்கள் இருக்கின்றன என்று பார்க்கும்போது பெரிதாக விளங்காவிட்டாலும் வியப்பாக இருக்கிறதல்லவா.

என்றாலும் எமது அறிவின் மட்டத்துக்கு இணங்க முதலாவது இங்கிலாந்து இந்திய ஒரு நாள் போட்டியில் இன்றைய நிலையில் ஒரேயொரு நம்பிக்கை நட்சத்திரமான ராகுல் ராவிட்டுக்கு அநியாயம் நடந்துவிட்டது என்பதை மறுக்க முடியவில்லை. ஏனெனில் மிகமிக நம்பிக்கையான Hot spot முறையில் பந்து ராவிட்டின் துடுப்பில் படவேயில்லை என்பது துல்லியமாகத் தெரிகிறது. அதன் பின் Snicko Meter (பந்து படும் சத்தத்தை உறுதிப்படுத்துவது முடிவைப் பார்த்து, அதுவும் நீண்ட தயக்கத்தின் பின் திடீரென அவுட் கொடுத்தது அபஸ்வரமாகப்பட்டது. இப்பொழுதுள்ள கேள்வி Hot spot தொழில்நுட்பம் பிழையா? அல்லது இதனைவிட Snicko Meter சரியானதா? அல்லது இந்தியா (**BCCI**) ஐ உறுதியாக இருப்பது போல மைதானத் தொழில்நுட்பமே நம்பிக்கையீனமானதா? அப்படி எதுவும் இல்லாதுவிட்டால் ஒரு சில மைதமான நடுவர்களாவது தகுதி இல்லாதவர்களாக இருக்கிறார்களா? எது எப்படி என்றாலும் அந்த ஆட்டத்தில் ராவிட்டுக்கு நடந்தது அநியாயம். இதனைப் பொறுக்க முடியாத படியால் வர்ணபகவான் மாரியாகக் கொட்டி அந்த ஆட்டத்துக்கு அர்த்தமேயில்லாமல் பண்ணிவிட்டாரா?



# விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

பல ரசிகர்களின் மனதில் விடைதெரியா-மல் எழுந்து அடங்கும் வினாவொன்றிற்கான விடையை ஒரு கிரிக்கெட் விமர்சகர் அழகாக எடுத்துக்காட்டுகிறார். அவர் சர்வதேச கிரிக்கெட் அணிகள் பற்றிப் பேச முன்வராவிட்டாலும் இலங்கை கிரிக்கெட் அணி பற்றிப் பேச முற்படுகிறார். தேவை கிரிக்கெட் ஆர்வமும், ஆசையும் கொண்ட பதினொரு பேர் என்று செல்கிறது அவரது கட்டுரை.

குறிப்பாக எந்தவொரு நாட்டையும் விட அவுஸ்ரேலியாவிடம் இலங்கை அணி தோற்பது என்பது ஜீரணிக்க இயலாத விடயம் என்பது அவர் வாதம். அவரது வாதம் சரி. ஏனெனில் ஏதோ காரணங்களுக்காக அவர்களால் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் அவமதிக்கப்பட்டுள்ளோம். இதனை அணி ரீதியாக, தனிநபர் ரீதியாக பல உதாரணங்கள் காட்டி நிறுவலாம். உதாரண-மாக அர்ஜுன ரணதுங்க முரளிதரன் சார்ந்த விடயங்களை ஒரு நல்ல வலிதான உதாரணமாக எடுத்துக்காட்டலாம். ஆனால் எமது தற்போதைய கிரிக்கெட் வீரர்களுக்கு இதெல்லாம் தெரியுமா? தெரிந்தும் சொரணை அற்றுப்போய் இருக்கிறார்கள் என்று கேள்வி எழுப்புகிறார். ஏனெனில் தற்போதைய போட்டிகளில் அவுஸ்ரேலியா எப்படியும் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற அந்த வெஞ்சினம் எமது வீரரிடையே காணப்படுவதில்லை என்பது அவரது தார்மீகக் கோபம். ஒரு ஆஷஸ் தொடரை இழந்தால் எல்லாமே போனது போலத் தவித்துப் போகின்ற இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலிய அணி அல்லது இந்திய பாகிஸ்தான் அணி கள் சந்திக்கும்போது காணப்படுகின்ற அந்த மைதானப் போர்க்குணம் எல்லாம் எமது அணியிடம் இல்லாமல் போய்விட்டதே என்ற ஆதங்கம் அவருக்கு. அதுமட்டுமல்ல எமது கிரிக்கெட் பணம் பண்ணும் தொழிலா கப் போய்விட்டது என்று ஆரம்பித்து IPL பற்றியும் எடுத்துக்காட்டுகிறார். காரணங்கள் நியாயமானதாகவே இருக்கின்றன. இப்பொழுதெல்லாம் ஒரு உயர்தர கிரிக்கெட் வீரன் எத்தனை செஞ்சுரிகள் அடித்தான் எத்தனை விக்கெட்டுக்கள் எடுத்தான் என்ற வரைவிலக்கணத்துக்கு அப்பால் சென்று எத்தனை மில்லியன் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டான் என்பதைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றான் என்று கடுமையாக விமர்சிக்கிறார்.

மேலும் தோல்வியடையும் நிலை யில் கூட வீரர்கள் புன்னகை புரிந்த வண்ணம் ஏதோ நம்மால் இயன்றதைச் செய்துவிட்டோம். இதுபோதும் என்று எண்ணும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார். இது முற்றிலும் உண்மைதான். வீரர்கள் மிக இலகுவாக Bad days என்ற பொதுவான சொல்லைக் கூறிவிட்டு தத்தம் வேலையைப் பார்க்கிறார்கள். ஒரு கவலையோ, துக்கமோ, அவர்கள் முகத்தில் இல்லை. இதற்குக் காரணம் அர்ப்பணிப்பு இன்மை, சோம்பல் தனம், நீரூற்றாகப் பெருகிக்கொண்டிருக்கும் பணம் போன்றவைதான் என்று விமர்சிக்கப்படுவதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன் இந்தியாவில் கான்பூர் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை இந்திய டெஸ்ட் போட்டியொன்றில் இலங்கை இனிங்ஸ் 144 ரண்களில் படுதோல்வி கண்டது. அந்தப் படுதோல்வியின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் பம்பல் அடித்துக்கொண்டு உல்லாசமாக உதைபந்தாட்டம் விளையாடிக்கொண்டிருந்தார்களாம். இதனைத்தானும் இன்னும் ஐந்து பத்திரிகையாளர்களும் மிகவும் வேதனை யுடன் பார்த்துக்கொண்டிருந்தோம் என்று நியாயபூர்வமாகக் கவலைப்படுகிறார் இவர். தைரியமாக பல வீரர்களின் பெயர்களைக் குறிப்பிட்டே கட்டுரையை எழுதியுள்ளார். இவரது கருத்துக்கள் ஒரு சாதாரண ரசிகன் பார்வையில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகத்தான் இருக்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு ஆட்டத்தின் முடிவிலும் இலங்கை அணி சிறப்பாகச் செய்ய வேண்டும் என்றே இலங்கை ரசிகன் விரும்புகிறான். ஆனால் எமது வீரர்கள் ஒன்றுக்கும் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. வென்றால் என்ன தோற்றால் என்ன, இங்கு இல்லாது போனால் அயல்நாட்டில் அவர்களுக்கு மில்லியன் கணக்கில் கிடைக்குமே.

நிபந்தனையற்ற பணம், இவர்களுக்கு ஈடுஇணையாக யாரும் இல்லை என்ற சூழ்நிலை இருக்கும் வரை இந்த நிலமை மாறப்போவதில்லை. பாவம் ரசிகர்கள் அவர்களின் துயரம் அவர்களோடு.

# ஆட்டுவிக்கும் விளையாட்டு



# பயங்கரவாதமும் இல்லை அவசர கால சட்டமும் இல்லை

# அடுத்தது என்ன ?

**இப்பொழுது பயங்கரவாதமும் அவசர காலச் சட்டமும் இல்லாத ஒரு சூழ்நிலையில் அடுத்தது என்ன என்ற நிலை தோன்றியிருக்கின்றது. கடந்த கால யுத்தத்தினால் பல் வேறு துன்பங்களைச் சுமந்து இழப்புக்களைச் சந்தித்து நிர்க்கதியாகி நிற்கின்ற மக்கள் மீண்டும் தமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஆக வேண்டிய காரியங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும். உறவுகளை இழந்து எதிர்காலம் பற்றிய சந்தேகத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற அப்பாவி மக்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு பூரணமான மீள்குடியேற்றமும் புனர்வாழ்வுமே ஒரே தீர்வாக அமையும். இதைப் புரிந்துகொண்டு உரியவர்கள் அதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.**

ஏ.எச்.ஏ.ஹுசைன்

இப்பொழுது இந்த நாட்டில் சுமுக நிலை தோன்றியுள்ளதால் இந்த அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நான் விடமாட்டேன். தொடர்ச்சியாக இந்த அவசரகாலச் சட்டத்தை வைத்திருப்பது முறையல்ல. எனவே இதனை நீக்குவது சரியானது என்று நான் நினைக்கின்றேன். இந்த நாட்டில் இளைய சமுதாயத்தினால் புதிய பரி-மாணம் ஏற்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை என்று கடந்த 25 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு வருகை தந்து அவசரகாலச் சட்டத்தை நீக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க பிரேரணை-யைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். இவ்வாறு ஜனாதிபதி வரலாற்றுத் திருப்பமாக திடீரெனப் பாராளு மன்றத்தில் தோன்றி இந்த அறி விப்பைச் செய்தமையானது நாட்டில் சமீபகாலமாக மக்களைக் கிலி கொள்ள வைத்த 'கிறீஸ்' பூத சலசலப்புக்கு ஒரு முடிவு கட்டியுள்ளது.

அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்காகவே அரசு இந்த கிறீஸ் பூதங்களைக் கட்டவிழ்த்து விட்டு பூச்சாண்டி காட்டுகிறது எனப் பலர் அரசைச் சாடியிருந்தார்கள். அத்தகையவர்கள் இப்பொழுது அவசர காலச்சட்டமே தேவையில்லை என்று ஜனாதிபதியவர்கள் ஆணையிட்டதன் பின்னர் வாயடைத்துப்போய் நிற்கின்றார்கள்.

இலங்கையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் ஒரு ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்ற அனைத்தையும் செய்யும் என்று அதனை விமர்சிப்பவர்கள் கூறுவதுண்டு.

இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கும் அபிவிருத்தியைப் மேற்கொள்வதற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக செயற்படாது மக்களின் நன்மதிப்பைப் பெற்று மக்களுக்காக ஜனநாயக வழி யில் இந்த நாட்டை முன்னெடுத்துச் செல்லும் ஜனாதிபதி என்ற வகையில் எனக்குப் பெருமையளிக்கிறது என்று ஜனாதிபதி அவசர காலச் சட்டத்தை நீக்கும் போது பாராளுமன்றத்தில் கூறியுள்ளது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் பற்றிய கடுமையான விமர்சனங்கள் பொய்த்துப் போய் விட்டதாக, எதிர் விமர்சனங்களை நிராகரிப்போர் திருப்திப்பட்டுக் கொள்கின்றனர்.

நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் மற்றைய ஜனாதிபதிகளை விட கூடுதலான தடவைகள் பாராளுமன்றத்திற்கு சமூகமளித்த பெருமையும் மக்களின் அபிலாசைகளைப் புரிந்துகொண்டு அமைச்சர்களோடு பாராளுமன்றத்திற்குச் சமூகமளித்த பெருமையும் தன்னையே சாரும் என்றும் அதேபோல் அனைத்து வரவு செலவுத் திட்ட அறிக்கைகளையும் சமர்ப்பித்த பெருமையும் தனக்கே உரித்தாகும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

அவசர காலச் சட்டத்தின் தோற்று வாயும் அதன் நீடிப்பும் பற்றிய பின்ன ணிகளையும் விளக்கிய ஜனாதிபதியவர்கள் 1983 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த அவசரகாலச் சட்டம் தொடர்ச்சியாக 2002ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தது. 1983 ஆல் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி கொண்ட எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகள் இந்த நாட்டில் தீவிரவாதத்தை முன்னெடுத்துச் சென்றார்கள். அது ஒரு புறமிருக்க 1988, 1989களில் தெற்கில் ஜே.வி.பி. 'யின் கொள்கைகளைப் பயன்படுத்தி அரசியல் தலைவர்களைப் பழி வாங்கும் செயலை அரசியலுக்காக முன்னெடுத்துச் சென்ற காலமும் இருந்தது.

2002ஆம் ஆண்டு புலிகளின் பேச்சுவார்த்தைக்கு அமைவாக சமா தான உடன்படிக்கையின் போது இந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. இவ்வாறு இந்த அவரகாலச் சட்டத்தை நீக்கியதன் காரணமாக எல்.ரீ.ரீ.ஈ. இனர் அதனைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு பல்வேறு விதத்தில் இந்த நாட்டில் கலவரங்களை ஏற்படுத்தினார் கள். நாம் பதவிக்கு வந்து லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட பின்பு மீண்டும் இந்த அவசர காலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தோம்.

அன்று தொடக்கம் இன்று வரை நாம் அவசர காலச் சட்டத்தை அமுல் செய்து வந்தோம். மாவிலாறு தொடங்கி கெப்பித்தி கொல்லாவையைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் எனப்பலர் புலிகளி-னால் கொல்லப்பட்டது உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று கூறிய ஜனாதிபதி அவர்கள் அவசரகாலச் சட்டத்தின் மூலம் அடையப் பெற்ற அனுகூலங்களையும் விளக்கினார்.

வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்குப் பங்கம் விளைவித்து பல்லாயிரக்கணக்கான மக்களை நிர்க்கதியாக்கிய புலிப்பயங்கரவாதி களை ஒழிப்பதற்கு இந்த அவசர காலச் சட்டம் உதவியாகவும் இலகுவாகவும் அமைந்திருந்தது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த மூன்று இலட்சம் மக்களில் சுமார் எண்பதாயிரம் பேர் மாத்திரமே இன்னும் அகதி முகாம்களில் இருக்கின்றார்கள். இந்த மக்களை மீளக்குடியமர்த்து வதற்கு முன்பு இந்தப் பகுதிகளிலிருந்த கண்ணிவெடிகளை அகற்றவும் இந்தப் பகுதிகளை மீள அபிவிருத்தி செய்யவும் இந்த அவசரகாலச் சட்டம் எங்களுக்குப் பேருதவியாக இருந்தது.

2006 இல் இருந்து 2009 மே மாதம் வரை வடக்கு கிழக்கிலிருந்த தீவிரவாதிகளை முற்றாக அழித்து ஒழித்த பின்பு அங்கிருக்கின்ற வளங்களைச் செயவ்வனே அபிவிருத்தி செய்து வருகின்றோம். பாடசாலை கள், சுகாதார வசதிகள், விவ சாய அபிவிருத்திகள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் போக்குவரத்து என அனைத் தும் அபிவிருத்தி செய்யப்பட்டு வரு கின்றன. அத்துடன் விவசாயம், துறைமுகம், நெடுஞ்சாலைகள் அபி விருத்தி என இவ்வாறு பல்வேறுபட்ட அபிவிருத்திகளால் எமது நாடு வளர்ச்சி கண்டுள்ளது.

மேலும் வடக்கு-கிழக்குப் பகுதிக-ளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட துறைமுகங்கள், கல்விக்கூடங்கள், நவீன சந்தைகள், நெடுஞ்சாலைகள், இன்னும் கோயில்கள் தேவாலயங்கள், கலைக்கூடங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசாங்கம் இரண்டாயிரம் மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது என்று கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்' அவர்கள் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் வடக்கு-கிழக்குப் பகுதி இன்னும் ஓரிரு வருடங்களில் யுத்த சுவடுகள் இல்லாத பூமியாக மாற்றமடையும் என்பதில் தனக்கு ஐயமில்லை என்றும் நம்பிக்கை வெளியிட்டார். இன்னும் இரண்டு வருடங்களில் இந்தப் பகுதிகள் அபிவிருத்தியில் முற்றாக முன்னேற்றமடைந்து விடும் என்பதை இந்த வேளை யில் உறுதியுடன் 'தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் தீவிரவாதத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டு வதற்கு முப்படையினரும் பூரண ஒத்துழைப்பை நல்கியிருக்கின்றார்கள். இந்த நாட்டு மக்கள் யுத்தத்தை முன்னெடுத்து பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மிகவும் பொறுமை காத்து ஒத்தாசை வழங்கினார்கள் என்றும் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து அவசரகாலச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார் ஜனாதி-பதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்.

பயங்கரவாதம் தலை கால் தெரி யாமல் கட்டு மீறி அராஜகங்களைப் புரிந்து தாண்டவமாடியபோது அதனைக் கட்டுக்குள் கொண்டு வந்து அப்பாவி மக்களைக் காப்பாற்ற வேண்டிய தேவை துன்பப்பட்ட எல்லோராலும் உணரப்பட்டிருந்தது.

இப்பொழுது பயங்கரவாதமும் அவசர காலச் சட்டமும் இல்லாத ஒரு சூழ்நிலையில் அடுத்தது என்ன என்ற நிலை தோன்றியிருக்கின்றது. கடந்த கால யுத்தத்தினால் பல் வேறு துன்பங்களைச் சுமந்து இழப்புக்களைச் சந்தித்து நிர்க்கதியாகி நிற்கின்ற மக்கள் மீண்டும் தமது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஆக வேண்டிய காரியங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும். உறவுகளை இழந்து எதிர்காலம் பற்றிய சந்தேகத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற அப்பாவி மக்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு பூரணமான மீள்குடியேற்றமும், புனர்வாழ்வுமே ஒரே தீர்வாக அமையும். இதைப் புரிந்துகொண்டு உரியவர்கள் அதற் கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, கடந்த முப்பது வருட காலங்களாக இந்த நாட்டில் பயங்கரவாதம் என அழைக்கப் பட்ட ஆயுதப்போராட்டமும் அவசரகாலச்சட்டமும் தோன்றுவதற் கான காரணிகளுக்குத் தீர்வு காண வேண்டியது இன்றியமையாததாகும்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சீ...)




ஸ்ரீ ராம ஜெயம்

**உண்மை சேவைக்கு ஒரு எடுத்துக்காட்டாக எமது நிறுவனங்களின் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட இலக்கங்கள்**

- எமது வரையறுக்கப்பட்ட கம்பனிப் பதிவு இலக்கம் P.V 8189
- ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய பதிவு இலக்கம் HA/6/CBO/99
- இந்து பிரீரஸ்ட் பதிவு இலக்கம் HA/4/2/IC/285
- மலையாள மாந்திரிக (CERTIFICATE) பதிவு இலக்கம் W/A 40262
- விளம்பரம் செய்வதற்கான அனுமதி பதிவு இலக்கம் W/A 38324
- அகில இலங்கை சமாதான நீதவான்

எனக்குக் கிடைத்த கௌரவப் பட்டங்கள்: ஜோதிட ஆராய்ச்சி மையம். பங்களாதேஷ் சோதிட தத்துவ ஞானி, தேச பந்து, பேராசிரியர், கலாநிதி.

காதல் கைகூட, கணவன் -மனைவி பிணக்குத் தீர, பிரிந்தவர் ஒன்று சேர, கல்விஞான கவசம் பெற, கடன் தொல்லை தீர, குபேர வாழ்வு பெற, குடிபோதையிலிருந்து விலக, அந்நியோர் உதவிகிட்ட, திடீர் திருமணம் கைகூட, வெளிநாட்டு பிரயாண தடை நீங்க, வெளிநாட்டவருக்கு விஷேட வசிய அச்சரங்கள் பெற, தெட்டத் தெளிவான ஜாதக குறிப்பு கணிக்க.

**இது 45 வருடகாலம் சேவை செய்யும் நிறுவனம்!**

**MALAYALA MANTHIRIKAM**

**UCHADA PEEDAM**

No.23,Mayfield Road, Kotahena-Colombo 13. Tel:0112342463
நுவரெலியா கிளை-No. 33, Daily Fair Complex 052-2222508

C/922




ம்ஹும்... எந்த ஒரு பயனுமில்லை.

அப்போதுதான் புரபசர் டிக்சனுக்காக நியமிக்கப்பட்டுள்ள டாக்டரின் நினைவு கப்டனுக்கு வந்தது.

உடனே கப்டன், புஷ்பராஜின் அறைக்கு விரைந்தார். கப்டன் அவருடன் பேசினார்.

டாக்டர் சுதீரின் பட்டியல்படி, புஷ்பராஜ் மருந்து ஒன்றைக் கலக்கி கப்டனுக்குக் கொடுத்தார்.

அந்த மருந்து கப்டனின் வயிற்று வலியை அரை மணி நேரத்துக்குள் அகற்றியது. அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவே கப்டன், புஷ்பராஜைத் தன்னுடன் உணவருந்த அழைத்தார்.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், நாம் கப்பலின் மேற்புற டெக்கில் காற்றாட அமர்ந்து பேசலாமே." கப்டன் அழைப்பு விடுத்தார்.

இருவரும் மேல்தளத்துக்கு வந்து சேர்ந்தனர். அங்கும் இயந்திரத் துப்பாக்கி ஏந்திய காவலாளி ஒருவர் இருந்தார். கப்டனைப் பார்த்ததும் அந்தக் காவலாளி சல்யூட் அடித்தார்.

அந்தக் காவலாளி தன்னை அடையாளம் தெரிந்து கொள்ளட்டும் என்பதற்காகச் சற்று நேரம் அங்கு நின்று லைட்டரால் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தார்.

"இவர்தான் தற்போதைய டாக்டர். திரு. ஷெரீப்.!" கப்டன் காவலாளியிடம் அறிமுகப்படுத்தினார்.

புஷ்பராஜ் அங்கிருந்தபடி சற்றுமுற்றும் பார்த்தார்.

சுற்றிலும் ஒரே நீர்ப்பரப்பு. ஆகாயத்தில் நட்சத்திரங்களும் நிலாவும். அவற்றில் சில கடலில் உதிர்ந்து கிடப்பதைப் போல் தண்ணீரில் பிரதிபலித்தன.

"இந்தக் கப்பல் எங்கே போகிறது கப்டன்?" புஷ்பராஜ் இயல்பான குரலில் கேட்டார்.

"பயங்கரமான ஒரு கேள்வி இது!" கப்டன் மர்மமான முறையில் பதிலளித்தார்.

"கப்டன் நீங்கள், இன்ன இடத்துக்கு என்று தெரியாமலா கப்பலைச் செலுத்துகிறீர்கள்?"

"உண்மைதான். எனக்கு இது எங்கே போகிறது என்று தெரிந்திருக்க வேண்டும். ஆனால், எனக்குத் தெரியாது. கப்பல் பயணமாகிறது... அவ்வளவுதான். நீங்கள் இப்படிக் கேட்கக் காரணம்?"

"நான், எனது சூழ்நிலையைக் குறித்து யோசித்ததால் கேட்டேன். உண்மையைச் சொன்னால், இது ஒரு நீண்ட பயணமாக இருக்குமென்று எனக்குத் தெரியாது. நான் மிகவும் பரபரப்புடன் செயல்படும் ஒரு பேர்வழி. என் நண்பர் கேட்டுக்கொண்டதால்தான் இந்த வேலையை ஏற்றுக்கொண்டேன்."

"இதில் நீங்கள் பயப்படவோ, குழப்பம் கொள்ளவோ எதுவுமில்லையே?"

கேள்விகேட்ட கப்டனை புஷ்பராஜ் ஏறிட்டுப் பார்த்தார்.

நல்ல உயரமும் அதற்கேற்ற உடல்வாகம் கொண்டவர் கப்டன். இயல்பிலேயே கட்டளை பிறப்பிக்கும் கண்கள் கொண்டவர். அந்தக் கப்பல் அவரது கட்டளைப்படிதான் இயங்க வேண்டும். ஆனால், இங்கு நிலைமை அப்படி அல்ல. அப்படியானால், வேறு ஏதோ சக்தி ஒன்று அவரையும் இந்தக் கப்பலையும் இயக்குகிறது என்று பொருள்.

"உண்மைதான்! எனது ஒவ்வொரு நாளைக்கும் நியாயமான ஊதியம் கிடைக்கும் என்பதிலும் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. எனினும், இதற்குள் நான் ஒரு கைதியாக இருப்பதாக என் மனம் சொல்கிறது கப்டன்!"

"பொதுவாகக் கப்பல் பயணமே அப்படிப்பட்ட ஒன்றுதான். இது ஏதாவது ஒரு கரையை நெருங்குவது வரை நாமெல்லாரும் ஒரு வகையில் கைதிகள்தான். இது மனிதர்களுக்கு இயல்பாக ஏற்படும் ஓர் உணர்வுதான்!" கப்டன் கூறினார்.

அப்போது கிழக்குத் திசையிலிருந்து வெளிச்சம் ஒன்று அவர்களை நோக்கி வருவதை கவனித்தனர்.

"சற்று நேரம் நீங்கள் இங்கேயே இருங்கள்... நான் உடனேயே வருகிறேன்..." கப்டன் கீழ்த்தளத்தை நோக்கி ஓடினார்.

விஷயம் என்னவென்று விளங்காததால் கப்டன் சென்ற வழியையே பார்த்துக்கொண்டு நின்றார் புஷ்பராஜ்.

கப்டன் நேராக ஜான்ஸனின் அறைக்கு வந்தார்.

ஜான்ஸன் அப்போது ரேடியோ டிரான்ஸ்மீற்றரைப் பயன்படுத்தி எவருடனோ பேசிக்கொண்டிருந்தான்.

கதவைக் கூடத் தட்டாமல் நேராகத் திறந்துகொண்டு அறைக்குள் நுழைந்திருந்தார் கப்டன். அதைப் பார்த்த ஜான்ஸன் திகைப்பு அடைந்தான்.

"என்ன கப்டன்?" விசாரித்தான்.

"மோட்டார் படகு ஒன்று நமது கப்பலை நோக்கி வருகிறது."

"அப்படியானால் நாம் எமது ரேடியோ அறைக்குச் செல்லலாம்.

இருவரும் அந்த அறையில் இருந்து வெளியேறினர்.

இருவரின் முகத்திலும் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு பளிச்சிட்டது. அந்தப் பயணத்தின் இப்போதுதான் முதன்முறையாக இப்படியொரு சம்பவம் நடைபெறுகிறது. இதுவரை யாரும் அவர்களைக் கவனித்ததாகத் தெரியவில்லை. முதன்முறையாகப் படகு ஒன்று சந்தேகத்துடன் அவர்களை நெருங்குகிறது.

வானொலி மூலமாக அந்த மோட்டார் படகுடன் தொடர்புகொள்ள கப்டன் முயற்சி செய்தார்.

ஜான்சனின் தலைமையகம் அனுப்பியுள்ள படகாக அது இருக்கக் கூடுமோ என்பது அவர்களின் மற்றொரு சந்தேகமாக இருந்தது. அதற்காகவே வானொலி மூலம் தொடர்புகொள்ள முயற்சி செய்தனர். அந்த அறையில் நவீனமான எல்லா வசதிகளும் இருந்தன.

கப்டன் ரிச்சர்டு எவ்வளவோ முயன்றும், அதில் அவரால் வெற்றிபெற முடியவில்லை. அப்படியானால் அது அந்நியரின் படகு என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

உடனே அந்தப் படகைச் சுட்டுத்தள்ள கப்டன் உத்தரவிட்டார்.

(தொடரும்...)

# அபலைகளுக்கு சமூகம் ஆதரவுக்கரம் நீட்டவேண்டும்

**- வாகரை வாணி -**

**மழை** விட்டும் தூவானம் நிற்கவில்லை என்பது போல நாட்டையும் நாட்டு மக்களையும் அழிவுக்குள்ளாக்கிய கொடிய ஆயுத வன்முறைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் அதனால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் இன்னமும் துயர வடுக்களாகத் தொடர்கின்றன.

ஆயுத வன்முறைகள் அதிகமாக பெண்கள் மீதே அழிவுகளைத் தோற்றுவித்தது என்பது வெளிப்படையான விடயம். இதன்விளைவாக பல நூற்றுக்கணக்கான பெண்கள் விதவைகளாகவும், அங்கவீனர்களாகவும், அநாதைகளாகவும் அபலைகளாகவும் ஆகிப்போயுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல ஆயிரங்களைத் தொட்டுவிட்டிருக்கிறது. பெண்களுக்குண்டான பாதிப்புக்கள் வெறுமனே அவர்களை மட்டும் பாதித்திருக்கவில்லை. நேரடியாக அவர்களில் தங்கி வாழும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளைப் அதற்கடுத்தபடியாக அவர்களது பெற்றோரையும் உறவினர்களையும் பாதித்திருக்கிறது.

சில பெண்கள் ஒற்றைப்பாதிப்புக்கு அதாவது கணவனை மட்டும் இழந்திருக்கிறார்கள். மற்றப்படி இவர்களது நிலைமை ஒப்பீட்டளவில் பரவாயில்லை என்று சொல்லலாம். இன்னும் சில பெண்கள் தமது கணவரையும் பிள்ளைகளையும் இழந்திருக்கிறார்கள். வேறு சிலரோ கணவரையும் பிள்ளைகளையும் வீடுவாசல்களையும் யுத்தத்தின் காரணமாக இழந்திருக்கின்றார்கள். இதனையும் விட இன்னும் சிலர் எல்லா வகையான இழப்புக்களையும் ஒருங்கே சந்தித்து எதிர்காலத்தைத் தொலைத்துவிட்டவர்களாக அநாதைகளாகி பேதலித்துப் போய் நிற்கின்றார்கள்.

அதாவது தமது பிரதான உழைப்பாளியான கணவர், வீடு வாசல், சொத்துக்கள், பூர்வீகமாக வாழ்ந்த இடம், பிள்ளைகள், இன்னும் போதாக்குறைக்கு அங்கவீனப்பட்டுப் போயும் அபலைகளாய் உள்ளார்கள். இவர்களது நிலைமைதான் மிகவும் பரிதாபத்திற்குரியது. அதேவேளை சமூகம் ஒட்டுமொத்தமாக இத்தகையோரில் பலரை இன்னமும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை என்கின்ற அதிருப்திகளும் நிலவுகின்றன.

பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செய்து வருகின்றன என்பது ஒரு புறமிருக்க பாதிப்பின் தன்மையையும் அதன்பின் விளைவுளையும் இன்னமும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்து அதற்கான உடனடித் தீர்வுகளுக்கும் நீண்ட காலத் தீர்வுகளுக்கும் திட்டங்கள் வகுக்கப்படவில்லை என்பது கவலையளிப்பதாக உள்ளது. இதன்விளைவாக நாம் முன்னரே கூறியபடி இந்தப் பாதிப்புக்களுக்கு பாதிக்கப்பட்ட பெண்கள் மாத்திரம் முகங்கொடுக்கப் போவதில்லை. அபலைகளும் அவர்களைச் சார்ந்திருக்கின்ற இளம்பராயத்தினரும் கிட்டிய எதிர்காலத்தில் இப்பொழுது இருக்கும் நிலையிலிருந்து இன்னமும் கீழ் நிலைக்குச் செல்ல வாய்ப்பிருக்கின்றது.

பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு உதவிகள் உரியவர்களுக்கு இன்னமும் சென்றடையவில்லை என்கின்ற அதிருப்திகள் நிலவுகின்றன.

அதேவேளை ஒப்பீட்டளவில் குறைவாகப் பாதிக்கப்பட்டோரும் எதுவித பாதிப்புக்கும் உள்ளாகாதோரும் கூட நிவாரண உதவிகளையும் இன்ன பிற சலுகைகளையும் தமக்குள்ள செல்வாக்குகளைப் பயன்படுத்திப் பெற்றிருக்கின்றார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மைகள் இல்லாமலில்லை. இத்தகைய போக்குகள் பாதிக்கப்பட்டோரை இன்னமும் நொந்து போகச் செய்வதற்கும், அவர்கள் சமூகத்தின் மீது நம்பிக்கையிழந்து ஒதுங்கிக் கொள்வதற்கும் வழிசமைக்கும்.

பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட ஒருத்தர் தனது இயலாமையும் சமூகச் செல்வாக்குகளும் இன்மை காரணமாக உதவிகள் கிடைக்கப் பெறாத நிலையில் இருக்கின்ற அதேவேளை பாதிக்கப் படாத ஒரு பிரிவினர் தாம் பாதிக்கப் பட்டதாகக் காட்டி முன்னுரிமைப் பட்டியலில் முழு உதவிகளையும் பெற்றிருக்கின்றார்கள். இத்தகையதொரு சமூகப் பொறுப்பற்ற உதவி வழங்கல் உதவி வழங்கப்பட்டது என்பதற்குப் பதிலாக உபத்திரவத்தையே உண்டாக்க வல்லது.

பாடசாலையிலிருந்து பலாத்காரமாகப் பிடித்து வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டு வாழ்க்கை நாசமாக்கப்பட்டவர்களில் மட்டக்களப்பு வாகரையைச் சேர்ந்த ஜமுனாவும் ஒருவர். நாலு வயதை எட்டிப் பிடிக்கும் ஒரு கைக்குழந்தையோடு இன்று அபலையாகி நிற்கிறார். கணவர் வலது காலை இழந்து ஒரு கை ஊனமுற்ற நிலையில் வெலிக்கந்தை இராணுவத் தடுப்பு முகாமில்


> **ஆயுத வன்முறைகள் அதிகமாக பெண்கள் மீதே அழிவுகளைத் தோற்றுவித்தது என்பது வெளிப்படையான விடயம். இதன்விளைவாக பல நூற்றுக்கணக்கான பெண்கள் விதவைகளாகவும், அங்கவீனர்களாகவும், அநாதைகளாகவும் அபலைகளாகவும் ஆகிப்போயுள்ளனர். பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செய்து வருகின்றன என்பது ஒரு புறமிருக்க பாதிப்பின் தன்மையையும் அதன்பின் விளைவுளையும் இன்னமும் ஆழமாகப் பகுப்பாய்வு செய்து அதற்கான உடனடித் தீர்வுகளுக்கும் நீண்ட காலத் தீர்வுகளுக்கும் திட்டங்கள் வகுக்கப்படவில்லை என்பது கவலையளிப்பதாக உள்ளது.**

புனர்வாழ்வளிக்கப்படுகின்றார். எப்போது அவர் விடுவிக்கப்படுவார் என்கின்ற விவரம் தெரியாத போதும் தனது கணவர் எப்போதென்றாலும் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒருவராகத் திரும்பி வருவார் என ஜமுனா நம்பிக் கொண்டிருக்கின்றார்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)

# மனதுக்கு நிம்மதி

# நேர்மை அழகுடன் பழகுங்கள்!



**மனித வாழ்க்கைக்கு முக்கிய மானவை பொருளா தாரமல்ல, மனித மதிப்பீடுகளே. நல்ல மதிப்பீடுகளின் மேல் கட்டமைக்கப்படும் வாழ்க்கையே சமூக வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் ஆதாரம்.**

ஆபிரகாம் லிங்கன் தனது இளம் வயதில் ஒரு கடையில் வேலை பார்த்தார். வாடிக்கையாளர்களிடம், அன்பாகவும், பணிவாகவும், நேர்மையாகவும் இருப்பதில் அவர் வல்லவர்.

நமது ஓட்டப்பந்தயம் பெரும்பாலும் செல்வம், புகழ் எனும் மைல் கற்களை நோக்கியே அசுர ஓட்டம் பிடிக்கிறது. கடைசியாய் நேர்மையைப் பற்றி எப்போது படித்தோம்? ஒரு வேளை ஆரம்பப் பாடசாலையின் நீதிக் கதைகளிலாய் இருக்கலாம்.

அப்படிச் சின்ன வயதில் கற்றுக் கொண்ட நேர்மை ஏன் காணாமல் போகிறது தெரியுமா? நம்மைச் சுற்றி இருக்கின்ற மக்கள் காட்டும் தவறான வாழ்க்கை முறை. குழந்தைகளுக்கு நேர்மையைப் பற்றிப் போதித்து விட்டு நாமே நேர்மையற்றவர்களாய் இருந்தால் அந்தப் போதனை வெறும் ஏட்டுச் சுரைக்காயாய், கறிக்கு உதவாமலேயே போய்விடும்.

மனிதர்களிடம் இயல்பாகவே இருக்க வேண்டிய நேர்மை இன்று வியப்பூட்டும் அபூர்வச் செயலாகிவிட்டதைத்தானே இது காட்டுகிறது. அப்படியானால் நேர்மைவாதிகள் அருகிவரும் அபூர்வ இனமாகிவிட்டார்களா?

நேர்மையை விதைப்பவர்கள் மட்டுமே நம்பிக்கையை அறுவடை செய்ய முடியும். ஆனால் நேர்மையாய் இருப்பதும், உண்மையாய் இருப்பதும் எளிதா? இல்லை என்பதுதான் உடனடிப் பதில். இதைப் பின்பற்ற வேண்டுமானால் உறுதியான மனம் ரொம்ப அவசியம்.

அந்த உறுதி பல வேளைகளில், பல காரணங்களுக்காக நம்மை விட்டுப் பறந்து போய் விடுகிறது. குழந்தையின் கையிலிருந்து அறுந்து போன பட்டம் போல அது இலக்கில்லாமல் ஓடி மறைகிறது. பல்வேறு காரணங்களுக்காக நம்முடைய நேர்மையை கை கழுவி விடுகிறோம்.

'நான் தப்பு செய்யவில்லை' என சாதிக்க நினைக்கும் எண்ணம் பல வேளைகளில் நம்மிடமிருக்கும் நேர்மையைப் பறித்து விடுகிறது. நான் நல்லவன் என்பதைப் பிறருக்குக் காட்ட பொய்களின் கைகளைப் பிடிக்கிறோம். அல்லது அடுத்த வர்களுடைய தோள்களில் பழியைச் சுமத்த நேர்மையை கைவிடுகிறோம். தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் எளிய வழி நேர்மையைக் கைவிடுவதுதான் என முடிவுகட்டி விடுகிறோம்.

சிலசமயம், பிறருக்கு முன்னால் அவமானப்படக் கூடாதே என்பதற்காகவும் பொய் முகமூடி போடுகிறோம்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில், கருத்து வேற்றுமை வரக் கூடாதே என்பதற்காக பொய்க்கு வக்காலத்து வாங்கி மௌனமாய் இருக்கிறோம்.

பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க வேண்டும் என்பதற்காகக் கூட உண்மையை மறைக்கவும், நேர்மையை விலக்கவும் செய்கிறோம்.

இப்படி பல வேளைகளில் நம்முடைய மனதின் உறுதி கொஞ்சம் ஒளிந்து கொள்ள, நேர்மையும் கூடவே காணாமல் போய் விடுகிறது.

மனித வாழ்க்கைக்கு முக்கியமானவை பொருளாதாரமல்ல, மனித மதிப்பீடுகளே. நல்ல மதிப்பீடுகளின் மேல் கட்டமைக்கப்படும் வாழ்க்கையே சமூக வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் ஆதாரம்.

நேர்மையாய் இருக்க வேண்டுமென நீங்கள் முடிவெடுத்தால், நேர்மை உங்களை வந்து ஆக்கிரமிக்கும். உங்களுக்கே உங்களுடைய தடுமாற்றத் தளம் புரிந்து விடும். அது ஒரு குறிப்பிட்ட சூழலாய் இருக்கலாம், அல்லது குறிப்பிட்ட நபரிடமாய் இருக்கலாம். எங்கே தடுமாறுகிறீர்கள் என்பதைக் கண்டுபிடிப்பது, அங்கே நேர்மையையும், உண்மையையும் வலுப்படுத்திக் கொள்ள உதவும்.

உதாரணமாக, பண விஷயத்தில்தான் நேர்மையற்று இருக்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அதை விலக்க என்னென்ன செய்யவேண்டும்? நமது அன்றாட வாழ்க்கை முதல் எல்லாவற்றையும் பட்டியலிடுங்கள். மன்னிப்புக் கேட்கவோ, உங்களுக்குச் சொந்தமில்லாததை திருப்பிக் கொடுக்கவோ தயங்கவே தயங்காதீர்கள்.

பயத்தின் பிள்ளைதான் பொய். மிகுந்த தைரியசாலிகளே நேர்மையாளர்களாய் இருக்க முடியும். உங்களுடைய பலவீனத்தை ஏற்றுக் கொள்ளும் தைரியமானாலும் சரி, மேலதிகாரியிடம் உண்மையைச் சொல்லும் கம்பீரமானாலும் சரி, நேர்மையின் பின்னால் தைரியம் இருக்கிறது. அச்சமற்ற மனதில் மட்டுமே நேர்மையும், உண்மையும் சிம்மாசனமிட்டு அமர்ந்து கொள்ளும். தைரியம் கொள்ளுங்கள்.

பிறரைக் காயப்படுத்தாமல் சொல்லப்படும் பொய்களை 'வெள்ளைப் பொய்கள்' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட பொய்களைக் கூட சொல்லாமல் இருப்பதே நல்லது என்பேன். "ஏய்... இந்த புடைவை ரொம்ப நல்லாயிருக்கு" என நீங்கள் சொல்லும் பொய்யில் யாரும் காயமடையப் போவதில்லை. ஆனாலும் அது உங்களுடைய மனதை கறைப்படுத்தும்.

பாதி உண்மை என்பது ஒரு முழுப் பொய். உண்மை என்பது முழுமையானது. அரைகுறையாய் உண்மையைச் சொல்லிவிட்டால் உங்கள் மனச்சாட்சியின் கேள்வியிலிருந்து தப்பிவிடலாம் என தப்புக் கணக்கு போட்டுவிடாதீர்கள்.

நேர்மையற்றவராய் இருப்பது நமக்குள் நம்மை அறியாமலேயே ஒரு குற்ற உணர்வை உருவாக்கிவிடும். கூடவே குழப்பத்தையும் தன்னம்பிக்கைச் சிதைவையும் உருவாக்கும். பிறகு "மனசு ரொம்பக் கனமாய் இருக்கிறது" என்று புலம்ப வேண்டியதுதான்.

நேர்மை முளைவிட வேண்டிய முதல் இடம் குடும்பம். குடும்ப உறவினர்களிடையே பொய் கலக்காத உண்மை உரையாடல்களும், நேசமும் இருக்கும்போது அந்த வாசம் சமூகத்திலும் வீசும். பிரச்சினைகள் வருமோ என நினைத்து போலித்தனமாய் வாழ்வதைவிட நேர்மையாய் வாழ்ந்து பிரச்சினைகளைச் சமாளிப்பதே சிறப்பானது.

ஒரு செயலைச் செய்யும்போது, "அந்தச் செயல் உங்களைப் பிறகு பொய் சொல்ல வைக்குமா என்பதை யோசியுங்கள். அப்படிப்பட்ட செயல்களைச் செய்யாதீர்கள்" என்பது சான்றோர் காட்டும் வழி. உங்கள் ஒவ்வொரு செயலையும் இந்த வாசகத்தால் எடைபோடுங்கள். செயல்கள் வாசமாகும், நேர்மை வசமாகும்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.434 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**தா.வடிவேல், ஏறாவூர், செங்கலடி.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. அ.சி.தனலக்ஸ்மதீபன்,கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
02. எம்.நிலாகரன், குச்சவெளி, திருகோணமலை.
03. கை.பவதாரணி,வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
04. யோ.ஜெகதீஸ்வரி,சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
05 கு.குலமாலிகா, சித்தன்கேணி, யாழ்ப்பாணம்.
06 கே.இராஜகோபால், அடைக்கலம்தோட்டம், வட்டுக்கோட்டை.
07. வை.தனபாலசிங்கம், 324, கண்டி வீதி, சாவகச்சேரி.
08. அ.ராணி, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
09. எஸ்.எஸ்.பவானந்தன், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
10. யூ.ஸ்ரெல்லா ஜீவநாயகி, தோணிக்கல், வவுனியா.

## குறுக்கெழுத்துப் போட்டி - 436

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | ■ | 9 | 10 | ■ | 12 |
| 13 | ■ | 15 | ■ | 17 | 18 |
| 19 | 20 | ■ | ■ | 23 | 24 |
| ■ | 26 | ■ | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

**இடமிருந்து வலம்**

01.தோமஸ் அல்வா எடிசன் இதனை கண்டுபிடித்தார்.

09.கையினால் அளக்கப்படும் நீட்டல் அளவை. (திரும்பியுள்ளது)

17.வேகம். (திரும்பியுள்ளது)

19.விழுதுவிட்டுப் பெருகும் மரம். (திரும்பியுள்ளது)

23.இலங்கையில் கத்தோலிக்கர் கூடும் ஓர் புனித பிரதேசம்.

29.சரத்குமாரின் படங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)

31.தாமரைப் பூ வகைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01.மழையின் போது இது ஏற்பட்டால் இடி வரும்.

03.இது வெடித்தால் சேதமும் பீதியும் ஏற்படும்.

04.விக்ரம், திரிஷா நடித்த படம். (திரும்பியுள்ளது)

12.கல்லறை என்பதன் ஒத்தசொல். (திரும்பியுள்ளது)

17.மனிதரால் ஏவப்பட்டு உலகைச் சுற்றி வருவது. (திரும்பியுள்ளது)

20.பறவை வகைகளில் ஒன்று. (குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 26.09.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-436
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 434- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நி | 2 லை | 3 யா | 4 மை | ■ | 6 பு |
| 7 று | 8 சா | ■ | 10 ஆ | 11 கு | 12 தி |
| 13 வ | ■ | 15 எ | ■ | 17 பா | 18 ர் |
| 19 ல் | 20 கி | 21 லி | ■ | ■ | ■ |
| ■ | 26 யா | ■ | 28 ளு | 29 ள் | 30 கொ |
| 31 ம் | 32 ன | 33 வ | ■ | 35 பு | 36 லை |

# விண்வெளியில் விவசாயம்!



செவ்வாய் கிரகத்துக்கு முதல்முறையாகப் பயணம் மேற்கொள்ளப் போகும் விண்வெளி வீரர்கள், அங்கு தமது விண்கலத்தில் உள்ள 'ஹைடெக்' சமையலறைத் தோட்டத்தில் தங்களுக்குத் தேவையான உணவை விளைவித்துக்கொள்ளப் போகிறார்கள். இந்தத் தகவலை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாசா' தெரிவித்துள்ளது.

செவ்வாய்க் கிரகத்துக்கு 2030ஆம் ஆண்டளவில் ஆட்களை அனுப்புவதற்கான திட்டப் பணிகளை 'நாசா' மேற்கொண்டு வருகிறது. அவர்களுக்கு உணவு விநியோகம்தான் சவாலான பணி. விண்வெளி வீரர்கள் தங்கள் அன்றாட உணவுக்குத் தேவையான காய்கறிகள், பழங்களை விண்வெளியிலேயே விளைவித்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என்பது 'நாசா'வின் எண்ணம்.

காரணம், செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்லப் போகும் வீரர்கள் ஐந்தாண்டுகள் அங்கே கழிக்கப் போகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 3 ஆயிரத்து 175 கிலோ உணவு தேவைப்படும் என்று டெக்சாஸ் ஹூஸ்டனில் உள்ள நாசாவின் விண்வெளி உணவு ஆய்வகத்தின் மாயா கூப்பர் தெரிவிக்கிறார்.

"உணவு விஷயம் எங்களை ரொம்பவே யோசிக்க வைக்கிறது. இதில் புதிய அணுகுமுறை தேவை. எனவே தற்போது விண்வெளியில் உயிர் உற்பத்தி முறையில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். அதில், உணவுத் தாவரங்களை விளைவிப்பதும் அடங்கும். செவ்வாய்க்கிரகத்தில் அமையும் இருப்பிடத்துக்கு பெருமளவில் உணவுப்பொருட்களை இடம் மாற்றுவது குறித்தும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்" என்று கூப்பர் கூறுகிறார்.




எப்படித் திடீர்த் தீர்மானம்...? எங்களால பிள்ளை பெத்துக்க உதவிதான் செய்ய முடியும்.. யார் பிள்ளையை வளர்ப்பாங்க...? உன் படிப்பு என்ன ஆகிறது... பரீட்சை என்ன ஆகிறது...?"

"அதெல்லாம் அங்க பாத்துக்கிறதா சொன்னாங்க..."

"அங்க என்னதான் சொன்னாங்க. இப்படி மனசை மாத்திக்கிறதுக்கு...?

"மனசு அவங்களால மாறலை டாக்டர்..."

"அப்ப, நீ நிச்சயமாக நாளைக்கு வரப்போறதில்லையா...?"

"இல்லை, நிச்சயமாக...."

"என்னைத்தான் சொல்லணும். நேரத்தை வீண் பண்ணிக்கொண்டு" போனை எடுத்து டயல் செய்து, " கிருத்திகா... உம் பொண்ணும்பியே அகல்யா... அவ என்ன சொல்லுறா தெரியுமா...?"

"நானே பேசறேன் டாக்டர்."

போனை வாங்கி அகல்யா தெளிவாகப் பேசினாள். "மேடம்... என் முடிவை மாத்திக்கிட்டேன். பிள்ளை பெத்துக்கிறதாக முடிவு பண்ணிட்டேன்."

"பைத்தியக்காரி, ஏன்?" என்றாள் அதிர்ச்சியுடன்.

"திருச்சிலயிருந்து ஸ்ரீதரங்கிற பையன் வந்திருந்தான். அவன்தான் என்னுடைய நிலைமைக்குக் காரணம். அவனை அநியாயத்துக்கு எங்கட கொஸ்டல் பையன்கள் இரண்டுபேர் சேர்ந்து அடிச்சுப்போட்டுட்டாங்க. இறந்துபோயிட்டான்...?"

"முக்கியமா ரகுவும், சீனுவும் ப்ரமோத் உடந்தை... ரொம்பப் பரிதாபமான நிலையில் செத்துட்டான். அதுக்கு முந்தி அவன் என்னை வந்து சந்தித்துச் சொன்னதுதான் மனசுல ஆழமா பதிஞ்சிருக்கு. தான் செய்த காரியத்துக்குப் பிராயச்சித்தமா என்னைக் கல்யாணம் கட்டுக்கிறேன்று சொன்னான். அமெரிக்கா போக இருந்தான். அதையும் கான்சல் பண்ணிக்கொண்டு, விசாவையும் கிழிச்சுப் போட்டுட்டான்.

**ஸ்ரீதரின் இழப்பைத் தாங்க முடியாமல் அவனின் அப்பா அழுதார். இதனால் அகல்யாவுக்கு அவர்மேல் அன்பும் பரிவும் உண்டாயிற்று. இதற்கிடையில் பத்திரிகை நிருபர் சாந்தகுமார் ஸ்ரீதரின் கொலைக்கு ரகு, சீனு, ப்ரமோத் ஆகிய மூவரும்தான் காரணம் என்று பொலிசில் வாக்குமூலம் கொடுக்கச் சொன்னார். ஆனால் ஸ்ரீதரின் அப்பா இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அகல்யா சுபாஷினி மேத்தாவைச் சந்தித்து தான் அந்தக் குழந்தை பெற்றெடுக்கப்போவதாகக் கூறினாள். டாக்டர் எவ்வளவோ சொல்லியும் அகல்யா குழந்தையைப் பெற்றெடுப்பதிலேயே உறுதியாக இருந்தாள்.**

என்னை நிஜமா விரும்பின ஒரே ஆள் அவன்தான்."

"அதனால...?"

"அதனால... அவனுடைய ஞாபகத்தின் மிச்சமா அவன் கொடுத்த குழந்தையைப் பெத்துக்கலாம்னு தீர்மானிச்சுட்டேன்..."

'யாரு அதைப் பொறுப்பெடுத்துப்பாங்க...? ப்ரோ லைஃப்ல ஏதாவது சொன்னாங்களா...?"

"ஆமாம். அவங்க குழந்தை வளர்க்கிறதையும் பார்த்துப்பாங்க.. என் பரீட்சைகூடப் பாதிக்காதுன்னு சொல்லியிருக்காங்க..."

"அகல்யா, நீ செய்யிறது ரொம்ப ரிஸ்க்கான விடயம். தெரிஞ்சுண்டுதானே இதைச் செய்யிற...?"

"தெரிஞ்சு, சந்தோஷமா இதைச் செய்யிறேன் மேடம்..." என்றாள்.

அகல்யா ஹொஸ்டலுக்குத் திரும்பியபோது, அங்கு அமர்க்களமா இருந்தது.

"எங்க போயிட்டா அகல்யா...? விடயம் தெரியுமா...?"

"என்ன...?"

"ப்ரமோத், சீனு, ரகு இவங்களை அரெஸ்ட் பண்ணிட்டாங்க.... காலைப் பேப்பர்ல பார்க்கலையா நீ...?"

"என் ஸ்டேட்மெண்ட், போட்டோ கூட வந்திருக்கே...?"

அகல்யா வளாகத்துக்குள் நுழைந்தபோது மாணவ-மாணவிகள் கொத்துக் கொத்தாகக் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். டி.வி. கமராக்களும், போட்டோக்காரர்களும் மரத்தடியில் நின்று கொண்டிருந்தார்கள். அகல்யா வந்ததும் அவளை அணுகிக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டார்கள்.

தினவாணியில் ரிப்போர்ட் வந்திருந்ததே. பார்த்தீங்களா...?

எப்படி அவங்க அந்தப் பையனை அடிச்சுச் கொண்டிருப்பாங்கன்னு சொல்லுறீங்க...?"

என்ன காதல் போட்டியா...?

கல்லூரிகளுக்குள்ள ரைவல்ரியா...?

அகல்யா கேள்விகளுக்கிடையே இங்குமங்கும் பார்த்துத் திணறிப் போனாள். நதிராதான் அவர்களை அடக்கிச் சமாதானப்படுத்தி, "கொஞ்ச நேரம் சும்மா இருந்தா, அகல்யா பேசலாம்..." என்றாள்.

தற்காலிகமாகக் கிடைத்த மௌனத்தில் நதிரா 'நீ சொல்ல வேண்டியதை ஸ்டேட்மெண்டா சொல்லிடு அகல்யா... இல்லேன்னா அவங்க போகமாட்டாங்க..."

அகல்யா மெள்ளப் பேசினாள்.

"இறந்து போன ஸ்ரீதரைத் தெரியும். திருச்சியிலிருந்து ஒரு இசை விழாவில் பங்கேற்க வந்தபோது ஏற்பட்ட சிநேகிதம். அந்தப் பையன் அமெரிக்கா போக விசா வாங்க வந்திருந்தபோது என்னைச் சந்தித்தான். அதற்கப்பால் கொஸ்டலுக்குப் போனான். மற்ற சில நண்பர்களைச் சந்திக்க.. அவனுக்கு நடக்கப்போவது என்ன என்று தெரியாமல்தான் போனான். அங்க ரகுங்கிறவனையும் சீனு என்கிறவனையும் சந்திச்சிருக்கான். அப்புறம் அவங்க ரெண்டு பேரும் அவனை எங்கேயோ கூட்டிக்கொண்டு போயிருக்காங்க. அதுக்கப்புறம் அவன் சாலைவிபத்துல சிக்கிட்டதா செய்தி வந்து, ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில போய்ப் பார்த்தேன். ரொம்ப அடிச்சுட்டாங்கன்னு சொன்னதுதான் அவன் பேசின கடைசி வார்த்தை. அவங்கப்பா பொலிசில கம்ளெயிண்ட் கொடுத்திருக்கிறார். சந்தேகத்தின் பேர்ல ப்ரமோத், ரகு, சீனு, மூணு பேரையும் கைது செய்து பொலிஸ் கஸ்டடியில் வெச்சிருக்காங்க!"

"இந்த கேஸ்ல அரசியல் ஏதாவது இருக்குதா மிஸ் அகல்யா..? அந்த ரகுங்ற பையன் பெரிய செல்வாக்குள்ள ஆள்னு சொல்றாங்க..."

" பொலிசுக்கு நீங்க வாக்குமூலம் கொடுப்பீங்களா...?"

"இப்ப கொடுத்தேனே அதேதான்..."

"அந்தப் பையனை அடிச்சுச் சாகடிச்சிருக்காங்கிறதுக்குச் சந்தர்ப்ப சாட்சியங்கள் இருக்குதா...?

"ஆமாம்..."

நதிரா, " இதுக்கு மேல் ஏதும் சொல்றதுக்கில்லை. நீங்கள் எல்லாம் போறீங்களா...?"

"இருங்க... இன்னும் ரெண்டு போட்டோ எடுத்துக்கிறோம். இந்த ஸ்ரீதருடைய போட்டோ இருக்குதா உங்கக்கிட்டே...?"

"அதைத் திருச்சியில வாங்கிக்கலாப்பா... எட்டு மணி நியூஸைப் பிடிக்கணும். வாங்க..."

அவர்கள் சென்றதும் கூட்டத்தின் விளிம்பில் காத்திருந்த வெள்ளைக்காரர், அகல்யாவை அணுகினார். தமிழில் பேசினார்.

அகல்யா... வாங்க போகலாம். எல்லாம் ஆச்சில்லை. இனி அவங்களால உங்களைக் கண்டுபிடிக்க முடியாது. வாங்க போகலாம்.

யார் நீங்க...?"

**இன்பம் தொடரும்**

---

இவ்வாரச் சிறுகதை



# அநாதைப் பிராணி

வி. முகிலன்-நெடுந்தீவு-13

**குட் நைட்** சொல்லிவிட்டு படுக்கையறைக்குள் போன புவனா தலையணை உறைக்குள் மறைத்துவைத்த ஜீவாவின் புகைப்படத்திற்கு உதடுகளால் நந்தனம் கொடுத்தபடி எதிர் கால ஏறோப்பிளேனில் பறந்தாள். எதிரில் இருந்த புத்தகத்தைப் பார்த்ததும் கணக்கு வாத்தியாரின் வீட்டுப்பாடம் நினைவுக்கு வந்தது. புத்தகத்தை ஒரு தடவை திறக்க முயற்சித்தாள். சுவரில் ஊர்ந்து திரிந்த பல்லி சடாரென்று சொல்லியது பலன் என்னவாய் இருக்குமென்று யோசிக்கவே திடீரென மின்சாரம் தடைப்பட்டது. நெஞ்சோரம் நினைவுகள் உறங்கியது.

ஜீவா கலைத்துறையில் ஆர்வம் உள்ள பையன். அதிலும் ஓவியம் வரைவதில் நல்ல கெட்டிக்காரன். வித்தியாசமாக எதையாவது பார்த்தால் அப்படியே அச்சு மாதிரி வரைந்துவிடுவான். ஒரு நாள் வாத்தியாரின் கேள்விக்குப் புவனாவால் பதில் சொல்ல முடியவில்லை. வாத்தியார் புவனாவை கதிரையின் மேலே ஏறி நிற்கவிட்டார். ஜீவாவுக்கு வித்தியாசமான சித்திரம் வரையும் சந்தர்ப்பம் கிடைத்தது. புவனாவின் நளினமும் கொஞ்சம் பிடித்தது.

ஜீவா ஒருமுறை பக்கத்து வகுப்பில் ரீச்சர் மேசையில் தூக்கம் போட்டதை அப்பட்டமாக வரைந்து முட்டுக்காலில் கூட நின்றிருக்கிறான். ஜீவா தான் ஓவியம் வரைவது யாரையும் கிண்டல் செய்ய அல்ல, தன் திறமையை வெளிப்படுத்தவே தான். பள்ளிக்கூட மட்டத்திலும் வெளிமட்டத்திலும் ஜீவா ஓவியப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களையும் சான்றிதழ்களையும் வென்று குவித்தான். நீண்ட நாட்டிகளுக்குப் பிறகு ஜீவா ஒரு வித்தியாசமான முடிவொன்றை எடுத்தான். தான் வரைந்த ஓவியங்களை எல்லாம் ஒன்று சேர்த்து கண்காட்சி ஒன்றை நடத்தினான். விளையாட்டுப் பொம்மைகளிலிருந்து போர்ச்சூழல் வரைக்கும் சித்திரங்களால் சித்தரித்தான். சிறியோர் முதல் முதியோர் மனங்களிலும் இடம்பிடித்தான். ஜீவாவின் ஓவியங்களில் ஒரு மூதாட்டியின் வறுமை நிலையை இப்போட்டியில் சித்திரமாகத் தீட்டியிருந்தது.

அந்த ஊரின் வெளிநாட்டு நிறுவனத்தாரையே வியப்பில் தள்ளியது. வெளிநாட்டு நிறுவனத்தாரும் ஜீவாவை கௌரவித்து விருது விழா நடத்தினார்கள். மக்கள் திரு விழா மாதிரித் திரண்டார்கள். ஜீவாவுக்கு மனசு நிறைந்த சந்தோஷமாக இருந்தாலும், வேதனைகள் வினாக்களாய் காத்திருந்தது. உங்கள் ஓவிய வளர்ச்சிக்கு யார் காரணம்?... உங்கள் குரு யார்?... யார் யார் உங்களுக்கு ஒத்துழைத்தார்கள்?..

ஒவ்வோரு கேள்விகளும் ஜீவாவின் இதயத்தையே துருவியது. இந்தக் கேள்விகளை ஜீவாவிடம் இதுவரை யாருமே கேட்டதில்லை. இருந்தாலும் ஜீவா தனது துயர கீதத்தை எல்லோர் மத்தியிலும் இசைப்பதில் ஆட்சேபனை இல்லை. கைதட்டி ஆரவாரம் செய்த ரசிகர்களுக்கு வாயே அடைத்தது.


எனது அம்மா வசதியான கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது அப்பாவோ ஒரு நேர உணவுக்கே கையேந்தும் ஏழைக் குடும்பஸ்தன். எல்லோரையும் போல பள்ளிப் பருவத்தில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மனசு பேசியது. காதலர்களாகிறார்கள்.

அம்மா குடும்பத்துக்கு கதை கசிந்ததும் அம்மாவை பக்கத்துப் பள்ளிக்கே அனுப்பி வைத்தார்கள். இரண்டு வருடங்கள் பிரிந்திருந்தும் மனசு மட்டும் மாறவில்லை. தடைகளால் காதல் அதிகரித்துக் கொண்டே இருந்தது. படிப்பு முடிந்து அம்மா ஊருக்கு வந்த அடுத்த நாளே அப்பாவோடு ஓடிப்போய் கலியாணம் செய்து கொண்டாள். அம்மாவின் குடும்பக் கௌரவம் காணாமல் போனது. ஒரு குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிப் போகும் என்று ஊரார் உதடுகள் ஆறுதல் பேசியது. நான் பிறந்து ஐந்தாவது மாதம் அம்மா வீட்டுக்குப் போனோம். அம்மாவின் அப்பா கடும் கோபக்காரன். மீசையைப் பார்த்தாலே சண்டியருக்கும் சலம் போகும். இருந்தும் சமாளித்து அரவணைத்தார்கள். அரவணைக்கும்போது அம்மாவுக்குப் புரியவில்லை. ஐந்து நாளாவது சந்தோஷமாக இருக்கவில்லை. நான்காவது நாள் பக்கத்துக் காட்டில் இருந்து எனது அப்பா சடலமாக மீட்கப்பட்டார். ஆள் வைத்துக் கொலை செய்துவிட்டு யானை அடித்துக் கொன்றதென்று ஊருக்குள் வதந்தியையும் பரப்பினார்கள். அப்பா மரணமாகி ஆறுமாதம் கடக்க முன் அம்மாவுக்கு இரண்டாம் தாரமாய் கல்யாணம் பேசினார்கள். அப்போதுதான் அம்மாவுக்கு விடயம் புரிந்தது. இரவோடு இரவாக அம்மா என்னையும் கூட்டிக்கொண்டு அப்பா வீட்டுக்குப் போனாள். அப்பா வீட்டில் யாருமே இல்லை. வெறிச்சோடிக் கிடந்தது. அப்பாவைப் பிரிந்ததில் இருந்து அம்மாவுக்கும் நிம்மதி இல்லை. என்னை வளர்த்து ஆழாக்க அம்மாவாலும் முடியவில்லை. கண்ணீர் கன்னம் தடவ கணங்களே இல்லை. அநாதை இல்லத்திற்கு என்னைத் தத்துக்கொடுத்துவிட்டு அம்மாவும் அப்பாவிடம் போய்ச் சேர்ந்து விட்டார்.

எனக்காக யாருமே இந்த உலகத்தில் இல்லாதிருந்த போதும் என்னைப் போல் எத்தனையோ குழந்தைகள் அநாதை இல்லத்தில் தவித்தன. நிம்மதியாக நானும் வாழ்ந்து வந்தேன். மாதத்தில் ஒரு தடவையாவது குழந்தைகளைப் பார்க்க யாராவது வருவார்கள். ஆனால் எனக்கென்று என்னைத் தவிர யாருமே வரவில்லை. மாலையில் விளையாட ஒரு மணல் பிரதேசத்திற்குத்தான் போவோம். எல்லாக் குழந்தைகளும் மண் சோறு சமைத்து அம்மா அப்பா விளையாடுவார்கள்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# பொன்மொழி



எந்த குடும்பத்தில் உள்ள பெண்மை கொண்டாடப் படவில்லையோ, அந்த வீடும் பாழ் அந்த நாடும் பாழ்.

சுவாமி விவேகானந்தர்

## இலக்கிய நயம் 44

கே.வி. குணசேகரம்

# பிணக்கம் தரும் இன்பம்



**"ஊடியவரை உணராகம், வாடிய வள்ளி முதல் அறிந்து அற்று."**

இல்லறத்தைப் பற்றி வள்ளுவன் அனுபவித்துக் கூறிய வார்த்தைகளைப் போல எந்தப் புலவ-னும் கூறியதாகத் தெரியவில்லை. நன்கு புரிந்துகொண்டு கூடி மகிழாதுவிட்டால் அது வாடிய கொடியை அறுப்பது போன்றதாகுமென்றும், பிணக்கம் கொண்ட மனைவி யின் (காதலியின்) ஊடலை நீக்காமல் அவளைக் கூடுவது துன்பம் அடைந்துள்ளவரை மேலும் துன்பப்படுத்தும் என்றும் கூறு

குடும்பமென்றால் தின-மும் பல பிரச்சினைகள் வரும். அதைவிடக் காதலரிடையே ஆயிரமாயிரம் பிரச்சினைகள் கணத்திற்குக் கணம் வரும். காமத்தைப் பற்றியும், காதலின் தன்மையைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்துகொண்ட பெண் அடிக்கடி தன் கணவனு டன் பிரச்சினைப் படுவாள். இந்தப் பிரச்சினைகளை வள்ளுவர் ஊடல் என்கிறார். காரணமின்றி பிரச்சினைப்படுவது கூடி இன்பம் அனுபவிப்பதற்காக என்றும், பிரச்சி னைகளின் பின் உருவாகுவது பெரும் இன்பத்தைத் தரும் என்றும் கூறுகிறார். தன்னோடு பிரச்சினைப்படாதவரை

கிறார். குடும்பத்தில் வரும் பிரச்சினைகள் அளவோடு இருத்தல் வேண்டும். பெரும் பிணக்குகள் மிகவும் பழுத்த பழத்தைப் போன்றது. மிக மிகச் சிறியதான பிணக்குகள் செங்கோலைப்போன்றது. மேற்சொன்ன இரண்டு பிணக்குகளும் வாழ்க்கையைக் கெடுத்துவிடும். ஊடலானது உண்ணத்தக்க சுவையுள்ள பழத்தைப் போன்றதாக இருத்தல் வேண்டும். அத்துடன் பிணக்குகளை அளவோடு கொள்ளல் வேண்டும்.

செந்தூரனின் மனைவி அகல்யா நல்ல அழகி. அதனால் அவன் அவளை அளவுக்கதிகமாக விரும்பினான். எவ்வேளையிலும் சுற்றிச்சுற்றி வருவதும், எதைச் செய்வதானாலும் அவளைக் கேட்ட பின்பே செய்வதும் அவனது சுபாவம். பிறர்கூட இருக்கும் வேளைகளிலும் அவன் அவளோடு செல்லமாகக் கதைப்பான். அதனால் இனத்தவர்கள் அவன் மனைவிக்குப் பயந்தவன் என்று சொல்வார்கள். அதனால் அகல்யா அவ-ளுடன் சற்றுக் கடி-னமாக நடந்துகொள்வாள். அதை அவன் உண்மை என நினைத்துக் கவலைப்படுவான். அவ்வேளைகளில் அவன் உணவை உண்ணமாட்டான். அப்பொழுது அவளுக்குத் துக்கமாக இருக்கும். எனினும் சிரமப்பட்டுப் பொறுத்துக்கொள்வாள். இரவானதும் அவளே வலி-யச் சென்று கதைப்பாள். சோற்றை ஊட்டிவிடுவாள். அதனால் அவன் பேரின்பம் கொள்வான். அப்படி ஏற்படும் பிணக்குகளால் பெரும் இன்பம் பெறலாம் என்று தெரிந்துகொண்ட அவன் தானாகவே அடிக்கடி பிணங்கிக்கொள்வான். அவன் பிணங்கும்போது அவள் பிணங்காது அவனை அன்புடன் நேசிப்பாள். ஆனால் அந்த அன்பை அவன் ஏற்கமாட்டான். பின் இரவானதும் அவன் வலியச் சென்று குழை-வான். அப்போது அவள் பிணங்குவாள். இது அவர்களுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைக் கொடுத்தது. குடும்பத்துக்குள்ளே அளவோடு பிணக்குகள் வருவதுதான் பேரின்பம் என்கின்றார் வள்ளுவர். அதை அனுபவித்தவர்கள்தான் சொல்லவேண்டும்.

# சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! றொபேட் ஓ பிளேக் - கூட்டமைப்பு சந்திப்பு இலங்கை அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

**க.தம்பையா, யாழ்ப்பாணம்.**

● இலங்கை அரசிய லில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமையாது. ஆனால், இலங்கையை நோக்கி அமெரிக்கா விரித்து வரும் பொறிகளுக்கு ஏதோவொரு வகையான பங்களிப்பைச் செய்வதாக அமையும்.

இதற்கான விலையை கூட்டமைப்பு இன்னொரு வகையில் செலுத்த வேண்டியிருக்கும். றொபேட் ஓ பிளேக் எதையிட்டுப் பேசினார் என்பது அடுத்த விக்கிலீக்ஸ் தகவல் வெளியாகும் போது தெரிந்துவிடும். அப்போது சம்மந்தர் எதைச் சம்மந்தமாகப் பேசினார், எதைச் சம்மந்தமில்லாமல் பேசினார் என்பது சந்திக்கு வந்துவிடும்.

✉ சிந்தியா! மனித உரி மைக் கூட்டத்தொடர் ஓர் எதிர்பார்ப்பைச் சிந்தியாவுக்கு ஏற்படுத்துகிறதா?

**எம்.செல்வராகவன், வவுனியா.**

● இல்லை. தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் தார்மீகப் பொறுப்பு இருக்கும் இந்தியாவே இரண்டும் கெட்டான் நிலை யில் நடந்துகொள்வதில் நமது எதிர்பார்ப்புக்கள் எல்லாம் அடிக்கடி தவிடு பொடி ஆகிவிடுகிறது. இந்த நிலையில் சர்வதேச பூச்சாண்டிகளைப் பார்த்து எதிர்பார்த்துக்கொள்வதற்கு என்ன இருக்க முடியும்.

✉ சிந்தியா! சிவில் குழுக்கள் அமைத்து மர்ம மனிதனைக் கட்டுப்படுத்துவதுதொடர்பில் உமது கருத்து என்ன?

**கே.வேணி, கொழும்பு-06.**

● நடவடிக்கை சரி யானது. நடைமுறைக்கு ஒத்துவராதது என்ற வகையறாக்குள் ஒன்றாகவே இந்த விழிப்புக் குழுக்கள் விவகாரத்தையும் கருதவேண்டியிருக்கிறது. விழிப்புக் குழுக்களே விழிபிதுங்கி நிற்கையில் சாதாரண மனிதர்களையே சமாளிக்க முடியாமல் இருக்கும். இதில் கிறீஸ் பூதங்களையும், மர்ம மனிதர்களையும் பாவம் இவர்கள் என்ன செய்ய முடியும். திருடனாய் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற பாட்டுப் போல தான் இதுவும்.

✉ சிந்தியா! யாழில் சமூக சீர்கேடுகள் நடைபெறுவதாக அடிக்கடி ஊடகங்களில் செய்தி வருகிறதே?

**ஜெ.றென்சி, யாழ்ப்பாணம்.**

● ஒரு காலத்தில் அப்படியான செய்திகளை வெளியில் சொன்னாலேயே அது தமிழர் பாரம்பரியத்தின் கலாசாரத்தையும், வாழ்வியலையும் கேள்விக் குட்படுத்திவிடுமோ என்று மறைத்ததும் உண்டு. ஆனால் இன்று அவ்வாறான சம்பவங்கள் நடப்பதும் அவற்றை ஊடகங்களில் படிப்பதும் ஒரு கலாசாரமாக இருக்கின்றது. கவலைக்குரிய கலாசாரம்.

✉ சிந்தியா! அநியாயத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தால் அவர்களை விரோதியாகப் பார்க்கும் சமூகம் திருந்த மாட்டாதா?

**அ.கோகிலன், திருகோணமலை.**

● திருந்திவிட்டால் அநியாயத்திற்கும், நியாயத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடும். சமூகத்தின் குறைபாடு கள் எதிர்ச்சவால்களை எப்போதும் விமர்சிக்கவே செய்யும். ஆகவே, சரியெனப்பட்டதைச் செய்து கொண்டிருப்பவர்களால் மட்டுமே சமூகக் குறைபாடு-களையும் தாண்டி சாதிக்க முடியும்.

✉ சிந்தியா! சமூகசேவை யாளர்கள் சேவை பற்றி சிந்தியாவின் அபிப்பிராயம் என்ன?

**க.ரமணன், நீர்கொழும்பு.**

● அவ்வாறானவர்கள் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் பருவ காலங்கள் எனும் பெயர்களால் இருக்கின்றதோ என்று தோன்றுகின்றது. சமூக சேவையோடு மனிதநேயம் இருந்தால் மண்ணுலக வாழ்க்கை அர்த்தமுள்ளதாக அமைந்துவிடும்.

✉ சிந்தியா! அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் தோல்வி மழை-யால் தவிர்க்கப்பட்டதாக நம்பப்படுகிறதே?

**ப.யசிந்தன், ஹெக்கிராவ.**



● எல்லோருமே அவ்வாறு தான் கூறுகிறார்கள். ஆனால் என்னால் அந்தக் கருத்துடன் 100 வீதம் பொருந்திவர முடியவில்லை. காரணம், மழை குறுக்கிட்டதால் போட்டி குறித்த நேரத்துக்கு முன்னர் முடிவுக்கு வந்துவிட்டது என்பது உண்மைதான். எனினும் இலங்கை அணியின் 2ஆவது இன்னிங்ஸ் துடுப்பாட்டம் சராசரியானதாகப் பார்க்கும் போது சுமாரானதாகவே இருந்தது.

ஆட்டம் முடிவடையும் போதுகூட இத்தொடரில் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்ற அஞ்சலோ மெத்யூஸ் மற்றும் ரண்தீவ் ஆகி-யோர் களத்தில் இருந்தனர். இருவருமே ஓரளவிற்கு பொறுப்பாகக் களத்தில் இருந்தார்கள். இவர்களுடன் சேர்த்து குறித்த இன்னிங்சை முடிப்பதற்கு அவுஸ்ரேலியாவுக்கு 4 விக்கெட் தேவைப்பட்டது.

அதைவிட சுமார் 90 ஓட்டங்கள் வரை இலங்கை அணி முன்னிலையில் இருந்தது. எனவே மழை குறுக்கிடா விட்டாலும் போட்டியை சமநிலை யில் முடிப்பதற்கு இலங்கை வீரர்களுக்கு வாய்ப்பு தாராளமாகவே இருந்தது என்பது எனது முடிவாகும்.

# பயங்கரவாதமும் பாரத தேசமும்

**உயர்** நீதிமன்றத்தின் 5ஆம் வாயிலில் கடந்த வாரம் நடைபெற்ற குண்டுவெடிப்பானது மீண்டும் ஒருமுறை பாரத தேசத்தை உலுக்கியிருக்கின்றது. இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து சென்றதில் இருந்து இரு நாடுக ளிடையே தொடர்கின்ற காஷ்மீர் தகராறு உட்பட்ட பல்வேறு சிக்கல்களும் இருநாடுகளையும் எதிரி நாடுளாகவே இயங்க வைத்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் மேற்குலகிற்கு எதிராக விஸ்வரூபம் எடுத்த இஸ்லாமிய தீவிர வாதம் இந்தியாவிற்கு எதிரான தீவிரவாத அமைப்புகளுக்கும் உற்சாகத்ததை ஏற்படுத்தியது. உதவிகளும் கிட்டியது.

இதனால் பாரத தேசம் தொடர்ச் சியாக பயங்கரவாத தாக்குதல்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

இதன் தொடர்ச்சியாகவே உயர் நீதிமன்றத்தின் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலுக்கு ஹர்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி அமைப்பினர் உரிமை கோரியுள்ள போதிலும், அவர்கள்தான் இந்தத் தாக்குதலைச் செய்தது என்று உறுதியா-கச் சொல்ல முடியாது என உட்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

தேசிய புலனாய்வு அமைப்பின் தலைவர் எஸ்.ஜி.சின்ஹா, அதுபற்றி இந்திய உள்துறை அமைச்சின் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார். அந்த அமைப்பினர் குண்டுவெடிப்புக்கு உரிமைகோரி அனுப்பிய இ-மெயிலை ஆராய்ந்து வருகிறோம். எமது ஆய்வுகளில், குண்டை வெடிக்க வைத்தது அந்த அமைப்பினர்தான் என்று கண்டுபிடிக்கப்படும்வரை, எதை யும் உறுதியாகச் சொல்வதற்கில்லை. என்பது அவரது கூற்று.

harkatuljihadi2011@gmail.com என்ற இ-மெயில் ஐடியில் இருந்தே உரிமை கோரல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இ-மெயில் எந்த இடத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது என்பதை 20 அதிகாரிகள் அடங்கிய புலனாய்வுக் குழுவினர் ட்ராக் டவுன் பண்ணிவிட்டனர்.

ஜம்முவிலுள்ள கிஷ்ட்வார் மாவட்ட இன்ரநெட் மையம் ஒன்றிலிருந்து குண்டுவெடிப்புக்கு உரிமைகோரல் இ-மெயில் அனுப்பப்பட்டுள்ளது. மையத்தின் உரிமையாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். மேலதிக விபரங்கள் ஏதும் இன்னமும் தெரியவரவில்லை.

இதுவரை எமது ஆய்வுகளில், சூட்கேஸில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டது உறுதியாகியுள்ளது. நன்கு திட்டமிட்டே இந்த குண்டுவெடிப்பை, பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகமுள்ள இந்தப் பகுதி யில் நிகழ்த்தியுள்ளார்கள் என்பதும் தெரிகின்றது.

திட்டமிடலுக்காக அவர்கள் இந்தப் பகுதியில் ஏற்கனவே நடமாடி, பாதுகாப்பு ஏற்பாடுகளை நோட்டமிட்டு இருப்பார்கள் என்றும் கூறமுடியும். அதைத் தவிர, உறுதிப்படுத்தக்கூடிய வேறு தகவல்கள் ஏதும், தற்போது எம்மிடம் கிடையாது. என்றும் கூறியிருக்கிறார் அவர்.

இவர் இப்படிச் சொல்வதன் காரணம், உயர்நீதிமன்றத்தின் 5ஆம் வாயிலில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படவில்லை என்பது குண்டு வைத்தவர்களுக்கு நன்கு தெரிந்துள்ளது. அத்துடன், இந்த கேட்டில் உள்ள மெட்டல் டிட்டெக்டர்களும் கடந்த சில நாட்களாகவே பழுதடைந்த நிலையில் உள்ள விஷயத்தையும் அவர்கள் அறிந்து கொண்டே, இந்த இடத்தை குண்டு வைப்பதற்கு தேர்ந்தெடுத்துள்ளனர்.

தாக்குதலை நடாத்துவதற்கு ஒரு புதன் கிழமையைத் தேர்ந்தெடுத்ததிலும், கவனமான திட்டமிடல் இருந்துள்ளது. காரணம், மற்றைய நாட்களைவிட, புதன் கிழமைகளில்தான் 5ஆம் வாயிலில் ஜன நடமாட்டம் அதிகமாக இருக்கும்.

இதைத் தவிர, புதன்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு சென்டிமென்ட லாக மற்றொரு காரணமும் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. மூன்று மாதங்களுக்கு முன்னரும் (மே 25ஆம் தேதி) டில்லி உயர் நீதிமன்றத்தில் குண்டுவெடித்தது. அதுவும் ஒரு புதன் கிழமை. ஜூலை 13ஆம் திகதி மும்பையில் தொடர் குண்டுவெடிப்பு நடைபெற்றதல்லவா? அதுவும் ஒரு புதன்கிழமைதான். அதற்குமுன், உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பை பயங்கரவாத தாக்குதல் நடந்ததும் ஒரு புதன்கிழமையே!

குண்டுவெடிப்புக்கு ஹர்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி அமைப்பு உரிமை கோரிய பின்னரும், அதை உள்துறை அமைச்சு உறுதிப்படுத்தாமல் இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன.

கடந்த 4 வருடங்களாக இந்த இயக்கம் இந்தியாவில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கோண்டுள்ள போதிலும், அதை இந்திய அதிகாரிகள் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. இதற்கு, உட்துறை அமைச்சின் ஏதோ ஒரு கொள்கை ரீதியான காரணம் இருக்கலாம். குறிப்பிட்ட இயக்கம் இந்தியாவில் இயங்குவதை சில காரணங்களுக்காக அவர்கள் வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாமல் இருக்கலாம்.

இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு அந்நாட்டின் பாதுகாப்பு பிரிவுகளுக்கு மிகுந்த சவாலாக இருப்பதாகவே தோன்றுகின்றது. பல்லின சமூகம் வாழ்கின்ற இந்தியாவில் தீவிரவாதிகளுக்கு நிலை எடுப்பதும் தளம் அமைப்பதும் இலகுவான-தாக இருக்கின்றது. இந்தியாவில் காணப்படுகின்ற சாதிப்பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் என்பவற்றோடு அதி-கார மட்டத்தில் காணப்படுகின்ற ஊழல்களும் நிர்வாகச் சீர்கேடுகளும் பாதிக்கப்படுகின்ற மக்களை தீவிரவாதத்தின் விசுவாசிகளாகவோ அல்லது தீவிரவாதத்திற்கு அடைக்கலம் கொடுப்பவர்களாவோ மாற்றி விடுகின்றது. இதனால் பாரத தேசம் தீவிரவாதம் இஷ்டத்திற்கு விளையாடும் மைதானமாக இருக்கின்றது.

எனவே இந்திய தேசம் தீவிரவாதத்தின் பிடியிலிருந்து விடுபட்டு உலக வல்லரசாக அபிவிருத்தியின் உச்ச நாடாகவும் மலர வேண்டுமாயின் தீவிரவாதிகளை அடியோடு கட்டுப்படுத்துகின்ற அதேவேளை தீவிரவாதத்திற்கு தீனி போடுகின்ற காரணிகளையும் தேர்ந்தெடுத்து அவற்றை களைந்தெடுக்கத் தேவையான சிகிச்சையினை வழங்க வேண்டும்.



20 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அநாதைப் பிராணி...

நான் மட்டும் என் அம்மா அப்பாவை என் பிஞ்சு விரல்களால் மணல் மேட்டில் வரைந்து எதிர்காலத்தை எண்ணுவேன். ஓவியம் வரையும் ஒவ்வொரு முறையும் என்னை அறியாமலே எனக்குள் நீண்ட நிம்மதி வந்து சேரும். திரும்பவும் காலையில் என் அம்மா அப்பா ஓவியத்தை பார்க்க வருவேன். என் வாழ்க்கையை மாதிரி அரைகுறையாய் விதைந்து கிடக்கும். திரும்பவும் நான் புனரமைத்தாலே தான் என் மனசு புன்னகைக்கும். என் ஓவிய வளர்ச்சிக்கும், முயற்சிக்கும் காரணம் என் அநாதை இல்ல மணல்மேடுதான். ஜீவா தன் சோகப் போர்வைகளை உதறி முடிக்க பாரவையாளர்களின் விழிக-ளில் தூசி விழுந்ததைப் போல் சிவந்தது. ஆயிரம் ஆறுதல்கள் மௌனமாய் பேசியது. விழிநீரோடு கூட்டமும் கலைந்தது.

ஓவியத்தால் பெரியவனாகியும் தானும் ஒரு ஓவியமாகவே தனித்து நிற்கின்றான். துணைக்கு யாருமே இல்லை. புவனாவை வாழ்க்கைத் துணைவியாய் ஏற்க உணர்வுகள் உள்ளுக்குள் அடிபட்டாலும் புவனா வசதியான கௌரவ-மான குடும்பத்தைச் சேர்ந்தவள். புவனாவோடு ஒவ்வொரு வார்த்தைகளைப் பேசும் போதும் ஜீவாவுக்கு பழைய ஞாபகங்கள் இதயத்திற்குத் தீ மூட்டும்.

17 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பயங்காரவாதமும்...

இந்த ஆயுதப்போராட்டமும் சரி, அவசரகாலச்சட்டமும் சரி, தோன்றுவதற்கு ஆழமான காரணிகள் இருந்தது என்பது மறுப்பதற்கில்லை. எனவே, தற்போது உருவாகியுள்ள சமாதான சூழமான ஒரு சூழல் வலுப்பெறுவதற்கு குறித்த காரணிகளுக்கு ஆரோக்கியமான தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். இதன் மூலமே இந்த நாட்டில் வாழ்கின்ற இனங்களுக்கிடையே நிரந்தரமான நல்லிணக்கத்தையும்,சமூக உறவையும் உருவாக்கிக்கொள்ள முடியும்.

அதாவது இந்த நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினச் சமூகங்கள் கௌரவமான முறையில் வாழ்வதற்கான அரசியல் தீர்வ நோக்கி பயணிக்கின்ற அதேவேளையில் கடந்த முப்பது வருடகால யுத்தம் காரண-மாக அபிவிருத்தியில் பின்தங்கி போயிருக்கின்ற பிரதேசங்களை அபிவிருத்திப் பாதையில் முன்கொண்டு செல்லவேண்டிய தார்மீக கடமையும் இருக்கின்றது.இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் கடந்த கால யுத்தத்தினால்வெறுத்துப் போயிருக்கின்ற அப்பாவி மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பது மறுப்பதற்கில்லை.

18 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அபலைகளுக்கு...

தனது கணவரைப் பற்றிய நம்பிக்கை ஒரு புறமிருந்தாலும், சமூகத்திலும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிலும் ஜமுனாவுக்கு நம்பிக்கை அற்றுப் போயிருக்கிறது. அதிகாரி களின் மனப்பாங்குகளிலும் சமூகத்தின் கீழ்த்தரமான கண்ணோட்டங்களிலும் மாற்றம் காணப்படாவிட்டால் தங்களைப் போன்று பாதிக்கப்பட்ட பலர் மேலும் மேலும் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள் என்று கவலை தெரிவிக்கிறார் அவர்.

ஏற்கெனவே தமது செல்வாக்குகளைப் பயன்படுத்தி உதவி பெற்றவர்களுக்கே தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. செல்வாக்குகள் இல்லாமல் பல வகையிலும் பலவீனப்பட்டுப் போயிருப் போருக்கு வாழ்வாதார உதவிகளும் புனர்வாழ்வு உதவிகளும் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகின்றது என்பதை அவர் வேதனை கலந்து வெளிப்படுத்துகிறார்.

நாளாந்த ஜீவனோபாயம், வாழ்வாதாரம், இருப்பிடம், பாதுகாப்பு, குழந்தைகளின் எதிர்காலம் என்று ஒன்றிக்கட்டையாக நின்று இவற்றை எதிர்கொள்வது ஜமுனாவைப் போன்று பாதிக்கப் பட்டு சமூகத்தின் உதவிகள் கிடைக்காமல் போயிருப்போருக்கு பெருஞ்சுமையாகவே இருக்கப்போகின்றது.

புனர்வாழ்வு உதவிகள் மேலும் மேலும் கிடைத்து அவற்றை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளாதோர் அவற்றைப் பராமரிப்பின்றி விட்டு வைத்திருக்கின்றார்கள். அதேவேளை கால் நீட்டித் தூங்க ஒரு குடிசைக்குத் தானும் உதவி கிடைக்காத ஜமுனாவைப் போன்றவர்கள் கலங்கிப் போய் நிற்கிறார்கள். இரக்கப்பட்ட ஒரு சமூக சேவை அதி காரி ஜமுனாவுக்கு மாதாந்தம் 150 ரூபாவுக்கான பொது சன மாதாந்த உதவிக் கொடுப்பனவுக்குச் சிபார்சு செய்திருக்கின்றார். ஆனால் அதுவும் இன்னமும் ஜமுனாவின் கைக்கு வந்து சேரவில்லை.

பாதிக்கப்பட்டதும் பாதிக்கப்படாததுமான பலர் தமக்குள்ள செல்வாக்குகளைப் பாவித்து வீட்டு வசதிகள், வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட பல உதவிகளை பலமுறை பெற்றிருக்கின்றார்கள் என்பது கசப்பான உண்மையாகத் தெரிய வந்திருக்கின்றது. அத்தகையோருக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் இப்பொழுது பராமரிப்பின்றி கால்நடைகள் ஒதுங்கும் இடங்களாக மாறியிருக்கின்றன.

சமூகப் பொறுப்புள்ள அதிகாரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் எல்லாவற்றுக்கும் மேலா-க சமூகமும் இந்த விடயத்தை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். உதவிகள் போய்ச்சேரவேண்டியவர்களை மிகச் சரி யாக அடையாளம் காணவேண்டியது எல்லோரதும் கூட்டுப் பொறுப்பாகும். அபலைகளின் வாழ்வு அவர்களோடு மட்டும் முடிந்து விடவில்லை. அவர்களில் தங்கியிருக்கும் எதிர்கால சந்ததியினரான அவர்களது குழந்தைகளையும் பாதிக்கப்போகிறது என்பதை பொறுப்புணர்ச்சியோடு புரிந்து கொள்ள வேண்டும். நிவாரணங்களில் பாரபட்சம், சமூகத்தின் கீழ்த்தரமான கண்ணோட்டம் என்பன ஒட்டுமொத்தமாக சமூக அங்கத்தவர்கள் என்கின்ற வகையில் எதிர்காலத்தில் எல்லோரையும்தான் பாதிப்படையச் செய்யும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

(15.09.2011 தொடக்கம் 21.09.2011 வரை

ஸ்ரீதர்

### மேடம்

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பலன்கள் கொடுக்கும் வாரமாகும். நீங்கள் எதிர்பார்த்த பணவருவாய் அதிகமாகவே கிடைக்கும். எல்லாக் காரியங்களும் திட்டமிட்டபடியே நடக்கும். இடையிலே தடைகள் வந்தாலும் முன்னேற்றம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் பாராட்டும் படி சம்பவங்கள் நடைபெறும். எதிர்பார்ப்புக்கள் யாவும் விலகி வெற்றி உங்கள் பக்கம் வரும். புதிய முயற்சிகளால் நன்மை கிடைக்கும். கையில் பணம் தாராளமாகத் தவழும். நீண்டதூரப் பயணங்கள் செல்ல வாய்ப்பு உண்டு. ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள், மாணவர்கள் நன்கு படிப்பார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

### இடபம்

இந்த வாரம் கொஞ்சம் கஷ்டமான வாரமாகும். எந்தக் காரியமும் முடிவு பெறாது காலதாமதமாகும். வீணான அலைக்கழிவுக்கு இடமுண்டு. சிறிய பிரச்சினை ஒன்று பூதாகரமாக வளர்ந்து நின்று துன்பந்தரும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவுறாமல் நீங்களே செய்ய நேரிடும். கொடுக்கல் வாங்கல்களில் கவனமாக இருக்கவும். மனதில் நிம்மதி மருந்துக்கும் இருக்காது. மற்றவர்களின் பேச்சைக் கேட்க வேண்டாம். கைமாற்றாகக் கொடுத்த பணம் தேவைக்கு வரமாட்டாது. அவதியும் அல்லலும் துன்பங்களும் மாறிமாறி வரும். மாணவர்கள், கல்வியில் நாட்டம் செலுத்த மாட்டார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் நஷ்டமடைவர். அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

### மிதுனம்

இந்த வாரம் உங்களுக்கு மங்களகரமான வாரமாகும். எந்தக் காரியமும் வெற்றிதான். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் மதிப்பு உயரும். தொழிஸ் ஸ்தானத்தில் மேலதிகாரிகளால் வாழ்த்துக்கள் கிடைக்கும். செய்காரியங்கள் யாவும் பணவருவாயைத் தரும். ஆனால் உடல்நிலை மட்டும் சற்றுத் தளர்ச்சியைக் கொடுக்கும். நண்பர்களால் உதவியுண்டு. பதற்றப்படாமல் நிதானமாகச் செயற்பட வேண்டும். கணவன் - மனைவி உறவுகள் நல்லபடியே இருக்கும். மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர். இழுபறியாக இருந்த வேலைகள் சுலபமாக முடிவுக்கு வரும். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமுறுவர்.
அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

### கடகம்

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பலன்கள் உண்டு. செய்காரியங்கள் அனைத்தும் வெற்றியே தரும். எதையும் ஊக்கமுடன் உற்சாகமாகச் செய்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் உங்கள் மதிப்பு மரியாதை உயர் வடையும். பலநாள் முயன்ற வேலை முடிவுக்கு வரும். கைகளிலே பணப்புழக்கம் தாராளமாக உண்டு. குடும்பத்திலே பாசஉணர்வு அதிகரிக்கும். பெரிய பிரச்சினைகள் தாமதமாகவே முடிவுக்கு வரும். வீண்பேச்சுக்களையும் வாங்குவாதங்களையும் தவிர்க்கவும். எதிர்ப்புகள் தவிடுபொடியாகி நல்ல பலன் கிடைக்கும். திட்டமிட்டவாறே காரியங்கள் நடைபெறும். மாணவர்கள் நன்கு படிப்பார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் நற்பயன் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.

### சிங்கம்

இந்த வாரம் உங்களுக்குச் சந்தோஷமான வாரமா-கும். திட்டமிட்டவாறே எல்லாம் நடக்கும். எதிர்பாராத வகையில் பணம் வந்து பையை நிறைக்கும். சில காரியங்களால் கூடுதல் இலாபம் கிடைக்க உள்ளது. வீட்டுக்குத் தேவையானற்றை வாங்குவீர்கள். தொழிஸ் ஸ்தானத்தில் எதிர்ப்புகள், போட்டிகள் வரும். எல்லாவற்றையும் முறியடித்து எதிர்நீச்சலடித்து வெற்றியீட்டுவீர்கள். உறவுக்காரர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். மாணவர்கள் கல்வியில் கவனஞ் செலுத்துவர். ஊக்கமுடன் உற்சாகத்துடனும் செயற்படுவீர்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் கௌரவம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: புதன்.

### கன்னி

இந்தவாரம் உங்களுக்குச் சங்கடம் தருகின்ற வாரமாகும். செலவுத்தானம் அதிகரிக்கும். ஆலய வழிபாடு நன்மை தரும். செய்காரியங்கள் தாமதமடையும். பணம் சுமாராகவே புழங்கும். மலைபோல வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகிவிடும். தொழில் ஸ்தானத்தில் நன்மை கேட்க முடியாது. தேக ஆரோக்கியம் குன்றும். குடும்ப உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்கமாட்டார்கள். எந்த வேலையும் கடினமாகவே தென்படும். பிள்ளைகள் விடயத்தில் எச்சரிக்கையாகவே இருக்கும். சொல்வழி கேட்கமாட்டார்கள். மாணவர்கள் கல்வியில் கவனஞ் செலுத்தார். கலைஞர்கள், வர்த்தகர்கள் ஏமாற்றமடைவர்.
அதிர்ஷ்ட நாள் வெள்ளி.

### துலாம்

இந்த வாரம் உங்களுக்கு மகிழ்ச்சியான வாரம். விருந்துபசாரம், கொண்டாட்டம், கேளிக்கை, களியாட்டம் என்று ஒரே மகிழ்ச்சி தான். தொழில் ஸ்தானத்திலும் ஆதாயம் சற்றுக் கூடுதலாகவே கிடைக்கும். தேகசு-கம் கொஞ்சம் பாதிப்புறலாம். மருத்துவச் செலவும் கூடும். உறவினர்கள் தாமாகவே வந்து உதவிபுரிவர். வெளிநாட்டிலிருந்து நல்ல சேதி வரும். மனதில் மகிழ்ச்சி குடிகொள்ளும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவர். பிள்ளைகள் மூலம் பெருமையடைவீர்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.

### விருச்சிகம்

இந்த வாரம் உங்களுக்குச் சுபீட்சமான வாரமாகும். முக்கிய வரவுகள் வந்து சேரும். கடன் மீதிகள் வசூலாகும். நீண்டநாள் சந்திக்காத உறவினர்கள் சந்திப்பு நிகழும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத ஆதாயம் கிடைத்துப் பணம் தாராளமாய் புழங்கும். வங்கிக் கடனும் அமுலுக்கு வரும். பெரிய மனிதர்களின் ஆசி கிடைக்கும். உடம்பில் செய்ய வேண்டிய சத்திரசிகிச்சை வெற்றியளிக்கும். வாகனங்கள் புதிதாகக் கொள்வனவு செய்வீர்கள். தங்க நகைகளும் வாங்க இடமுண்டு. தந்தை வழிச் சொத்துக்கள் தானாகவே வந்து சேரும். மாணவரகள் நன்கு கல்வி கற்பார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கன் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்: வியாழன்.

### தனுசு

இந்த வாரம் உங்களுக்குச் சாதகமான வாரமாகும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சில விடயங்களில் நீங்கள் ஒன்று நினைக்க நடந்தது இன்னொன்றாக இருக்கும். பிள்ளையார் பிடிக்கக் குருங்கான கதைதான். என்றாலும் பணம் வந்துகொண்டே இருக்கும். செலவும் வந்துகொண்டேயிருக்கும். தொழில் ஸ்தானத்தில் நல்லது நடக்கும். மேலதி-கா ரிகள் பாராட்டுவர். வேலை நெருக்கடிகள் அதிகரித்தாலும் வெற்றி உங்களுக்கே. பிள்ளைகளுக்காகச் சில காரியங்கள் செய்து வம்பில் மாட்டிக்கொள்வீர்கள். நண்பர்கள் தாமாகவே வந்து உதவுவார்கள். மாணவர்கள் கல்வியிற் கவனஞ் செலுத்துவர். அதிர்ஷ்ட நாள்: புதன்

### மகரம்

இந்த வாரம் உங்களுக்குக் கஷ்டமான வாரமாகும். எதிலும் கவனமாகவும் ஸ்திரமாகவும் ஈடுபட வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பிரச்சினைகள் வந்து மனஅமைதி குன்றும். தேக சுகமும் பாதிக்கப்படும். வீட்டில் சுபகாரியங்களுக்கான பேச்சக்கால் ஆரம்பமாகும். குடும்ப அங்கத்தவர்கள் ஒத்துழைக்க மறுப்பார்கள். செய்காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். சகோதரர்களுக்காகச் செய்த செலவு நன்மையைத் தரும். திட்டமிட்ட செயற்பாடுகளால் பணவரவு அதிகரிக்கும். நண்பர் ஒருவர் உதவிசெய்து உங்கள் மனதில் இடம்பிடிப்பர். கலைஞர்கள், வர்த்தகர்கள், நஷ்டமடைவர். அதிர்ஷ்ட நாள்: சனி.

### கும்பம்

இந்த வாரம் உங்களுக்குச் சந்தோஷமான நிகழ்வுகள் நடக்கும் வாரமாகும். திட்டமிட்டபடியே யாவும் நிகழும். எண்ணம்போல் காரியங்கள் வெற்றியாகவே முடியும். எந்தவேலையும் தடை-கள், தாமதமின்றி விரைவிலேயே நடைபெறும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் குவிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் யாவும் சுபீட்சமாக நடக்கும். மறைமுகப் போட்டிகள் எதிர்ப்புகள் விலகும். செலவுத்தானம் கொஞ்சம் அதிகமானதாகவே இருக்கும். ஆனால் பணத்துக்குக் குறைவில்லை. மாணவர்கள் நன்கு படிப்பார்கள். செய்காரியங்கள் வெற்றியாகும். உடம்பும் ஆரோக்கியமானதாக இருக்கும். அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு.

### மீனம்

இந்த வாரம் உங்களுக்கு அதிர்ஷ்டமான வாரமாகும். எந்த விடயமும் சுலபமாக நிறைவே-றும். செய்காரியங்கள் நன்மையைத் தரும். நீண்டநாள் கடன் மீதிகள் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். அங்கத்தவர்கள் ஒத்துப்போவார்கள். ஆடை ஆபரணங்கள் வாங்கலாம். தொழில் ஸ்தானத்தில் பணம் இலாபமாகக் கிடைக்கும். மற்றவர்கள் பேச்சைக் கேட்க வேண்டாம். சுயபுத்தியுடன் தீரயோசித்து நடக்கவும். மாணவர்கள் சிந்திப்பார்கள். வீண் அலைச்சல் இருக்கும். கலைஞர்கள், வர்த்தகர்கள் சிறிது இலாப-மடைவர். அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
— காதில பூ கந்தசாமி —

**வணக்கமுங்கோ! நெருப்பு இல்லாமல் புகையாது எண்டுவினம். அதுபோலை ஏதோ ஒரு திட்டமில்லாமல் இன்னொரு போராட்டம் எண்ட கதையைக் கூட்டமைப்புக்காரர் சொல்லமாட்டினம் எண்டுதான் நினைக்கிறேனுங்கோ. முன்னம் ஒரு தடவை சம்மந்தர் சொன்னார், அரசாங்கம் தீர்வைத் தராவிட்டால் மாற்று வழியை எடுக்க வேண்டியிருக்கும் எண்டார். மாவையும் அரசல் புரசலாக இன்னொரு போராட்டம் எண்ட கதையை விட்டவர். இப்ப போனவாரம் சுரேசும் மர்மமனிதன் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் போராட்டம் வெடிக்கும் எண்டு பார்ளிமெணடிலையே முழங்கியிருக்கின்றார். சம்மந்தரும், மாவையும் போராட்டம் பற்றிக் கதைச்சால் அது சும்மா புருடா கதைதானுங்கோ. சுரேஸ் கதைச்சால் அதில விசயம் இருக்குது அது என்ன விஷயம் எண்டதை அவரிடமே கேட்டுத் தெரிஞ்சுகொண்டேனுங்கோ.**

**நான்:-** என்ன சுரேஸ் எப்புடி இருக்கிறியள்

**சுரேஸ்:-** நான் அன்று தொண்டன், நேற்று தலைவன் இன்று ஊடகப் பேச்சாளன். விரைவில் மீண்டும் தலைவன் எண்டு போய்க் கொண்டிருக்கிறன். நீர்தான் பல வருடங்களாக காதில பூவோடையே திரியிறீர்.
நீரே வச்சநீரோ அல்லாட்டில் யாரும் வச்சுவிடுறாங்களோ.

**நான்:-** உம்முடைய பகிடிக்குச் சிரிக்கிற நேரம் இல்லை.
இது சீரியஸான விடயம் இன்னொரு போராட்டம் எண்டு சொல்லியிருக்கிறீர். அது உம்முடைய சொந்தக் கருத்தோ, இல்லாட்டில் கூட்டமைப்பின்ர கருத்தோ. நாளைக்கு பல்டி அடிக்கமாட்டீர் தானே.

**சுரேஸ்:-** உதில என்ன பல்டி அடிச்சுக்கிடக்கு. நான் சொன்னால் அது கூட்டமைப்பின்ர நிலைப்பாடுதான். நாளைக்கே போராட்டம் ஆரம்பிச்சால் நான்தான் அதின்ர தலைப்மைப்பொறுப்பை எடுக்கவேணும். நானும், செல்வமும்தானே கூட்டமைப்பில இருக்கிற போராளிகள். செல்வம் தலைமை தாங்குமளவுக்குப் பக்குவம் இல்லாதவர் எண்டதாலை நான்தான் அந்த தார்மீகப் பொறுப்பை எடுக்கவேணும், உங்களுக்கே தெரியும்தானே.

**நான்:-** தெரியும்... தெரியும். நீரும் மண்டையின் குழு நடத்தனதை எப்புடி மறக்க முடியும்... நீர் போராட்டம் நடத்தினால் அந்த மண்டையன் குழு மாதிரியேதான் இருக்குமோ. இல்லாட்டில்....

**சுரேஸ்:-** அதுகளை உடனடியாகச் செய்ய முடியாது. இருந்தாலும் தெரிஞ்சமுறையிலைதானே எதையும் சொல்லமுடியும். எதில கை தேர்ந்தனாங்களோ அதைச் செய்தால்தானே அதில நேர்த்தியாகச் செய்ய முடியும்.

**நான்:-** இன்னொரு போராட்டத்துக்கான சாதக பாதகம் எப்புடி இருக்கின்றது என்று நினைக்கின்றீர்...?

**சுரேஸ்:-** முன்னம் தூர இருந்தது. இப்ப எங்கட வாசலில நிக்குது. ஆகவே நாங்கள் வீட்டுக்குள்ள இருந்தே ஆரம்பிக்க வேண்டியிருக்கு.

**இதன் சுவாரஷ்யமான பகுதிகளை அடுத்தவாரம் எதிர்பாருங்கள்.**

## யாவும் கலப்படமற்ற கற்பனை

## மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



தான் சின்ன வயதில் கையில் காசில்லாமல் ஆனால் உள்ளம் நிரம்பப் புதுமைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையோடு தெருத்தெருவாக, வீடு வீடாகப் போய் பத்திரிகையும் புத்தகமும் விநியோகித்த அந்த நாட்களை மறக்கவே இல்லை. ஆகவே தம்மைப் போன்ற ஏழைச்சிறுவர்கள் விஞ்ஞானத்தின் அற்புதங்களை அறிந்து கொள்வதற்காக ராயல் கழகத்தில் 'கிறிஸ்துமஸ் பிரச்சாரங்கள்' என்ற தொடரை ஆரம்பித்து நிகழ்த்தலானார். அன்று அவர் ஆரம்பித்து வைத்த இந்தப் பிரச்சாரங்கள், இன்றும் ஒவ்வோர் ஆண்டும் நிகழ்ந்து வருகிறது. ஏராளமான மாணவ மாணவிகள் இதனால் பலனடைகிறார்கள். கடைசி காலம்வரை ஃபரடே ஏழையாகவே வாழ்ந்து மறைந்தார். பட்டம் பதவிகூட விரும்பாத பண்பாளர். ஒரு சமயம், அரசாங்க நாணயச் சாலையிலிருந்து ஓர் இளைஞன் ராயல் கழகத்தில் ஏதோ ஒரு சோதனை நிகழ்த்திக் காட்ட வந்திருந்தான். பார்வையாளர்களிலே ஒரு வயோதிபர், பழைய கசங்கிய ஆடை அணிந்து அமர்ந்திருந்தார். ஆர்வத்துடன் நோக்கும் அம்முதியவரைப் பார்த்த அந்த இளைஞன், "நீங்கள் இங்கு பல வருடங்களாக இருக்கிறீர்கள் என்று நினைக்கின்றேன்" என்றான். "ஆமாம், பல வருடங்களாக" என்றார் அம்முதியவர், "அதாவது காவல்காரராக..." "ம்... அது போலத்தான்..." "உங்களுக்கு நல்ல சம்பளம் தருகிறார்கள் என்று நம்புகின்றேன்."

உலகை வியக்க வைத்தவர்கள்

(வியப்புக்கள் தொடரும்...)

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)

# சுற்றுலா






இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்டது வர்ஜின் குழுமம். இது விண்வெளி சுற்றுலா திட்டத்தை செயல்படுத்துவதற்காக 'வர்ஜின் கேலக்டிக்' என்ற தனி நிறுவனத்தை தொடங்கியிருக்கிறது. விண்வெளி சுற்றுலா திட்டம் 2013இல் தொடங்கப்படுகிறது. அதற்கான ஏற்பாடுகளில் வர்ஜின் கேலக்டிக் நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவின் நியூ மெக்சிகோ மாநிலத்தில் உள்ள லாஸ் க்ருசஸ் பகுதியில் பிரமாண்ட 'ஸ்பேஸ் போர்ட்' அமைக்கப்பட்டு வருகிறது. (விமானங்கள் புறப்பட்டுச் செல்வதற்கு எயார் போர்ட் போன்று விண்கலங்கள் புறப்படுவதற்கு) 1800 ஏக்கர் பரப்பில் பிரமாண்டமாக ஸ்பேஸ் போர்ட் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன. இதுபற்றி ஸ்பேஸ் போர்ட் அதிகாரிகள் கூறியதாவது: விண்கலங்கள் புறப்படும் இடம் என்பதால் 3 கி.மீ. நீள ஓடு-பாதை அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஸ்பேஸ் போர்ட் உடைய மாதிரியையே படத்தில் காண்கிறீர்கள். சுற்றுலா செல்லும் விண்கலத்துடனான தொடர்பை தொடர்ந்து கண்காணிக்கும் தரை கட்டுப்பாட்டு மையமும் இந்த வளாகத்தில் அமைக்கப்படுகிறது. இந்த பணிகள் இந்த ஆண்டு கடைசிக்குள் முடிந்துவிடும். ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 2013இல் விண்வெளி சுற்றுலா திட்டம் தொடங்கப்படும். சுற்றுலா வாகனம் 'ஸ்பேஸ்ஷிப்-2' சோதனை பலகட்டமாக நடந்து வருகிறது.

# மசாஜ்








மசாஜ் என்ற செயற்பாடு எம்மில் பெரும்பாலானவர்களுக்கு கிளுகிளுப்பான உணர்வையே ஏற்படுத்தும். அதுவும் இளைஞர்கள் என்றால் சொல்லவே தேவையில்லை. இதற்கு பிரதான காரணம் பெரும்பாலும் மசாஜ் சிகிச்சை அளிப்பதற்கு அழகிய இளம் பெண்கள் ஈடுபடுத்தப்படுவதேயாகும்.

ஆனால், இஸ்ரேலிய உடல்நலம் மற்றும் அழகுபடுத்தும் நிறுவனம் ஒன்று அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு புதிய சேவை வழங்கி வருகிறது. அதாவது கொடிய பாம்புகளை வைத்து மசாஜ் சிகிச்சை அளித்து வருகின்றது. அதையே இங்கே படத்தில் காண்கிறீர்கள்.(கிளுகிளுத்த உடம்பு வியர்த்து விறுவிறுக்கின்றது போலும்)

இந்த பாம்பு மசாஜ் கிளப் வடக்கு இஸ்ரேலில் உள்ளது. இச்சிகிச்சை முறைகளுக்கு அங்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு வருகின்றது. தசைகள் மற்றும் மூட்டுகளில் கொடிய பாம்புகளை கொண்டு மசாஜ் செய்யப்படுகின்றது.

# முன்னோடி



உலக வரலாற்றிலேயே மிகப் பெரிய துவக்கு இதுதான். ஜேர்மனியில் 1941 ஆம் ஆண்டு Friedrich Krup A.G நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது. இந்நிறுவனத்தினரின் குடும்பத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகரை கௌரவிக்கின்ற வகையில் Gustav Gun என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நிறை 1344 தொன். 4.5 மீற்றர் அகலமும், 43 மீற்றர் நீளமும் கொண்டது. மேஜர் ஜெனரல் தலைமையில் 500 பேர் கொண்ட சிப்பாய்கள் இயக்கினார்கள். சுடுகின்றமைக்கான ஆயத்தங்களை முழுமையாக செய்து முடிக்கின்றமைக்கு சரியாக 54 மணித்தியாலங்கள் எடுத்தன. 10584 பவுண்டு எடை உடைய எறிகணைகள், 16540 பவுண்டு எடை உடைய கொங்கிறீட் எறிகணைகள் ஆகியவற்றை இத்துவக்கு மூலம் பிரயோகிக்க முடியும். குண்டுகள் 29 மைல் தொலைவு வரை பாய முடியும். இரண்டாம் உலகப் போரின்போது பிரான்ஸின் மசினோ கோடு கோட்டை அரணை ஜேர்மனிய படையினர் கைப்பற்றுகின்றமையில் இத்துப்பாக்கியின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது.

நாம் பார்த்து அஞ்சிய, நம்மில் பலரை பதம் பார்த்த ஆட்லறிகள், பல்குழல், பீரங்கிகள் எல்லாமே இந்த துப்பாக்கியை முன்னோடியாக கொண்டு உருவாகியவைதான் போலும்.....

# நம்பிக்கை

**நடைபெற்று வருகின்ற அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் இலங்கை வீரர்களின் செயற்பாடுகளும், பெறுபேறுகளும் பல்வேறு விமர்சனங்களை கிளப்பி வருகிறது. இருந்த போதிலும் ஒருசில வீரர்களின் கடும் உழைப்பும் அர்ப்பணிப்பு உணர்வும் இலங்கையின் எதிர்கால கிரிக்கெட் மீது நம்பிக்கைக்கீற்றை ஏற்படுத்துகிறது.**

**ஆம். சகல துறை ஆட்டக்காரர் அஞ்சலோ, மெத்யூஸ் எதிர்கால இலங்கை அணியின் பெருஞ்சுவராக இருப்பார் என்பது ஆறுதலான விடயம்தான். (தொடர்ந்தும் இதேபோன்று அர்ப்பணிப்புடன் விளையாடுவாராக இருந்தால்) அதேபோன்று லசித் மாலிங்கவும் தொடர்ந்தும் தான் ஒரு அச்சுறுத்தும் உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளர் என்பதை நிரூபித்து வருகிறார்.**

**இவ்வாறானவர்களை மனம் நோக விடாது ஊக்கமளித்து இவர்களின் ஓர்மத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பில் பெரும் பகுதி இலங்கை கிரிக்கெட் சபைக்கும் இருக்கின்றது என்பது சுட்டிக்காட்டத் தக்கது.**

